**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 329 ஐப்பசி 04ஆம் நாள் சனிக்கிழமை 21 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20

பக்கங்கள்: 28

# கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கு உடன் தேர்தல்

## நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் முன்வைப்பு

கொழும்பு, ஒக். 21

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. 6 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பிரதேச சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. பின்னர் மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது. இப்போது அந்தத் தேர்தலை நடத்துவதற்கான சிறப்புச் சட்டவரைவு நாடாளுமன்றில் நேற்று முன்வைக்கப்பட்டது.

எதிர்பாராத மற்றும் அவசர சூழ் நிலைகள் காரணமாக இந்த இரு பிரதேச சபைகளினதும் தேர்தல் பிற்போடப்பட்டிருந்தது. 6 வருடங்கள் கடந்த நிலையில் தேர்தலுக்கு மனுத் தாக்கல் செய்திருந்த வேட்பாளர்கள் பலர் இப்போது எங்கிருக்கிறார்கள் என்றே தெரியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் மீண்டும் புதிதாக வேட்புமனுக்கள் கோரி, அந்தத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சிகளை எடுத்துள்ளது. புதுக்குடியிருப்பு >> 25

# உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் ஜனவரியில் நடக்குமா நடக்காதா?

## நாடாளுமன்றத்தில் தினேஸ் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஒக். 21

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதுபோன்று எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்தப்படுமா? இல்லை இன்னும் தாமதிக்கப்படுமா?

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

"உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு தொடர்பாக வர்த்தமானியில் அறிவிப்பதாக சம்பந்தப்பட்ட அமைச்சர் கூறினாலும் இது வரையில் வர்த்தமானி வெளியிடப்படவில்லை. ஜனவரியில் தேர்தல் நடத்தும் நோக்கம் உள்ளதா? இல்லையேல் தாமதம் செய்யப்படுமா?" என்று கேட்டார் >> 25

### ரணிலின் சமாளிப்புக்குப் பதிலடி

# மகா சங்கங்களின் முடிவே மகாநாயக்கர்களின் முடிவும்

## தெளிவுபடுத்தியது அஸ்கிரிய பீடம்

கொழும்பு, ஒக்ரோபர் 21

புதிய அரசமைப்பு ஒன்று தேவையே இல்லை என்று பௌத்த மகா சங்கங்கள் எடுத்த முடிவின் பின்னால் அவற்றின் தலைவர்களான மகாநாயக்கர்களுமே இருந்தனர் என்று தெரிவித்திருக்கிறார் அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர்.

மகா சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இந்த முடிவை எடுத்தகூட்டத்தில் மகாநாயக்கர்கள் இருக்கவில்லை, அப்படியிருக்கும்போது புதிய அரசமைப்பு வேண்டாம் என்று மகாநாயக்கர்கள் கூறுகிறார்கள் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டமை பச்சைப் பொய் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சாடியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே தம்மானந்த தேரர் மகா சங்கங்களின் முடிவு மகாநாயக்கர்களின் முடிவே என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"புதிய அரசமைப்போ, தற்போதைய அரசமைப்பில் திருத்தங்களோ தேவையில்லை. புதிய அரசமைப்பு முயற்சியை உடனடியாக நிறுத்த வேண்டும். மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் காரக சங்க சபா எடுத்த மேற்படி முடிவின் பின்னால் இரண்டு மகாநாயக்க தேரர்களுமே >> 25



# 5 தமிழர்களைத் தாமே கடத்தினார்கள் என்று கடற்படையினர் இருவர் ஏற்றுக்கொண்டனர்

## நீதிமன்றில் சி.ஐ.டி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

கொழும்பில் 5 பேரைத் தாங்கள் கடத்தினர் என்று கடற்படையினர் இருவர் எமக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர். கடத்தப்பட்டவர்கள் திருகோணமலையில் உள்ள கன்சைட் சித்திரவதைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) நீதிமன்றில் நேற்று அறிக்கையிட்டனர்.

கொழும்பில் மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடற்படையினரிடம் நாம் கோரிய ஆவணங்கள் கிடைக்கவில்லை. அதனை எம்மிடம் ஒப்படைக்க நீதிமன்று கட்டளையிடவேண்டும். திருகோணமலை கடற்படை முகாமில் விசாரணை நடத்தினோம். கன்சைட் என்னும் நிலத்தடி சித்திரவதைக் கூடத்தையும் மேற்பார்வை செய்தோம். 19 கடற்படையினரிடம் வாக்குமூலம் பதிவு செய்தோம்.

இந்த வழக்கில் இரண்டாவது சந்தேகநபரின் கீழ் பணியாற்றிய கடற்படையினர், கடத்தியவர்கள் கன்சைட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டதைக் கண்டனர் என்று வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

வழக்கின் முதலாவது சந்தேகநபரின் கீழ் பணியாற்றிய இரு கடற்படையினர், தெகிவளையில் வைத்து 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி 5 பேரைத் தாம் கடத்தினர் என்று தெரிவித்தனர்.

கடத்தப்பட்டுக் காணாமல் ஆக் >> 25

# தேரர்களின் கருத்தே சு.கவின் நிலைப்பாடும்

## குத்துக்கரணம் அடிக்கிறார் அமைச்சர் சந்திம

கொழும்பு, ஒக். 21

புதிய அரசமைப்புத் தொடர்பில் மகாநாயக்க தேரர்களினதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் நிலைப்பாடு ஒருமித்ததாகவே காணப்படுகின்றது என்று திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். >> 25

# அரசியலுக்காக மகாநாயக்கர்களை இனவாதிகள் பயன்படுத்துகின்றனர்

## புதிய அரசமைப்புக்கான தேசிய அமைப்பு கடும் சாடல்

கொழும்பு, ஒக். 21

இனவாதிகளும் அரசியலில் தோல்வியுற்றவர்களும் மகாநாயக்க தேரர்களை தங்கள் குறுகிய அரசியலுக்காக பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் தெரிவிக்கும் விடயங்களை மகாநாயக்க தேரர்கள் தீர ஆராய்ந்து பார்க்காமல் சமூகத்தைப் பாதிக்கும் வகையில் அந்தக் கருத்துக்களை மக்களுக்குக் கூறக்கூடாது. அரசின் அனைத்துச் செயற்பாடுகளையும் எதிர்க்கும் மகாந்நாயக்கர்களின் போக்கை தோல்வியுற்றவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரும் முயற்சியாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இவ்வாறு புதிய அரசமைப்புக்கான தேசிய அமைப்பு நேற்றுத் தெரிவித்துள்ளது. அந்த அமைப்பு கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தது.

"சிறிலங்கா சுதந்திர கட்சியில் நிறைவேற்று அரச தலைவர் முறையை ஒழிப்பதற்கு எதிராக இருப்பவர்கள், அரச தலைவர் தேர்தலில் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவைத் தோற்கடிக்கும் குழுவில் இருந்தவர்களாவர். இவர்கள் புதிய அரசமைப்புத் தொடர்பாக மக்களுக்கு எந்த வாக்குறுதியையும் >> 25

# மருத்துவ அதிகாரிகள் சங்கமும் எதிர்க்கிறது புதிய அரசமைப்பை

கொழும்பு, ஒக். 21

நாட்டுக்குப் புதிய அரசமைப்புத் தேவையில்லை. புதிய அரசமைப்புக் கொண்டு வரப்படுமாயின் சுகாதாரத்துறை மாகாண நிர்வாகத்துக்குள் உள்வாங்கப்படும். இது மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் >> 25

# சந்தேகநபருக்கோ வரப்பிரசாதம் தாய்மாரோ ஏக்கத்திலேயே இறப்பு

## தமிழ் மாணவர்கள் கடத்தல் வழக்கில் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 21

சந்தேகநபர்கள் சிறையில் வரப்பிரசாதங்களை அனுபவிக்க பிள்ளைகளைத் தேடிய தாய்மார் இருவர் நீதிக்கான ஏக்கத்திலேயே உயிரிழந்துவிட்டனர் என்று கொழும்பு நீதிவான் மன்றில் நேற்றுச் சுட்டிக்காட்டப்பட்டது. தாய்மாரின் இறப்புத் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையை நீதிவானும் வெளியிட்டார். விரைவாக நீதியைப் பெற்றுக் கொடுக்கவே முயற்சிக்கின்றேன் - என்றார் அவர் கண்கலங்கியபடி. >> 25

# கிழக்கிலும் திங்களன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 21

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நாளைமறுதினம் திங்கட் கிழமை கிழக்கு மாகாணத்தில் போராட்டம் நடத்தவுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இந்தத் தகவலைத் தெரிவித்தனர். இந்தப் போராட்டத்துக்கு >> 25

### அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 4 நாள் வகுப்புப் புறக்கணிப்பு

## அரச தலைவரின் பதில் சாதகமில்லாவிட்டால் போராட்ட வடிவம் மாறுமாம்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களும் நேற்று முதல் வரும் புதன்கிழமை வரை நான்கு நாள்கள் தமது வகுப்புக்களைப் புறக்கணிப்பதற்குத் தீர்மானித்துள்ளனர். தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் அரச தலைவரிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றால் போராட்ட வடிவம் மாற்றமடையும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மாணவர் பிரதிநிதிகள் இந்த அறிவிப்பை விடுத்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துபீட மாணவர் ஒன்றியத் தலைவர் கிருஸ்ணமேனன், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அனுராஜ், சட்டபீட மாண >> 25





# நிதி நிறுவன கடன்களால் சிரமப்படுபவர்களை விடுவிக்கச் செயற்றிட்டம்

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

தனியார் நிதி நிறுவனங்களில் இருந்து முறையற்ற விதத்தில் கடன்களைப் பெற்றுக் கொண்டதன் காரணமாக அதிக அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள கிராம மக்களை அதிலிருந்து விடுவிப்பதற்கான நாடளாவிய செயற்றிட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வறுமையை இல்லாதொழிக்கும் கிராம சக்தி மக்கள் இயக்கத்தை மக்கள் மயப்படுத்தும் தேசிய நிகழ்வு நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார் என அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது:

இந்தத் திட்டத்துக்கான ஆலோசனை 2018ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டப்பிரேரணையில் முன்வைக்கப்படும்.

செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்குவதற்கு வளங்களைப் பெற்றுக் கொடுக்கும் கொள்கையில் இருந்து விலகிப் பொருளாதாரப் பிரச்சினைகள் உடைய மக்களை அதிலிருந்து மீட்டு அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான வசதிகளையும், வரப்பிரசாதங்களையும் வழங்குதல் அரசின் பொறுப்பாகும்.

அரசியல் ரீதியில் ஒருவருக்கு ஒருவர் குறை கூறுவதை விடுத்து வறுமையில் இருந்து விடுபடுவதற்கு கடந்த பல வருடகாலமாக அனைத்து அரசுகளிலும் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களை அனுபவமாகக் கொண்டு கிராம சக்தி மக்கள் இயக்கத்தை வலுப்படுத்துவது அனைவரின் கடமையாகும்.

இந்தச் செயற்றிட்டத்தில் அனைத்து மாவட்ட செயலர்களும், பிரதேச செயலர்களும் நிர்வாகத்தை நெறிப்படுத்துபவர்களாக அன்றி அதனுடன் இணைந்த அபிவிருந்தியை நெறிப்படுத்துபவர்களாகச் செயற்பட வேண்டும் என்று அரச தலைவர் குறிப்பிட்டார்.

என்றுள்ளது. (ற)

## சவுக்கடி இரட்டைப் படுகொலை நீதி கோரி ஆர்ப்பாட்டப் பேரணி

மட்டக்களப்பு, ஒக்.21

மட்டக்களப்பு சவுக்கடி இரட்டைக்கொலை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. குடியிருப்பு கலைமகள் வித்தியாலய முன்றிலில் ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதான வீதியூடாக சென்று வாசிகசாலை முன்றிலில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலைச் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சவுக்கடி முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த மதுவந்தி பீதாம்பரம் மற்றும் அவரது மகனான பீதாம்பரம் மதுஷன் ஆகியோர் கடந்த 17 ஆம் திகதி கொடூரமான முறையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 11 வயதுடைய மதுஷன் இந்தப் பாடசாலையில் தரம் 6ல் கல்வி பயிலும் மாணவனாவான்.

படுகொலையைக் கண்டித்தும் குற்றவாளிகள் விரைவாகக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டுத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் நீதி கிடைக்கும்வரை போராடுவோம், அரசே குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கு, மாணவர்கள் படுகொலைகளை நிறுத்து, கருணையில்லா கொலைகாரரைக் கைதுசெய், கொலைக்கான நீதி வேண்டும், இன்று ஓர் பசுந்தளிர் நாளை எங்களில் எந்தத் தளிரோ? நண்பனின் உயிருக்கு நீதி வேண்டும், நல்லாட்சி அரசாங்கமே விழித்திடு, உண்மையான கொலைகாரனை கைது செய்து தூக்கிலிடு போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ற-ரி4)

## தேசிய புத்தாக்க நிலையத்தை அரச தலைவர் திறந்தார்

கொழும்பு, ஒக்.21

கிருளப்பனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட தேசிய புத்தாக்க நிலையம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுத் திறக்கப்பட்டது. தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் மலேசியாவின் லிம்கொக்விங் பல்கலைக்கழகமும் இணைந்து நவீன தொழில்நுட்பம், புத்தாக்கம், ஆக்கத்திறனுடன் எதிர்கால தலைமுறையின் தொழிற்றிறன்களை மேம்படுத்தும் நோக்குடன் இந்த நிலையத்தை திறந்தன. இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் மலேசியாவின் லிம்கொக்விங் பல்கலைக்கழகத்தின் உப தலைவர் மற்றும் தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டீ.எம்.ஏ. குலசிறி ஆகியோரால் அரச தலைவருக்குச் சிறப்பு நினைவுச் சின்னமொன்று வழங்கப்பட்டது. (ற.ரி4)

## 7 தம்பதிகளுக்கு நேற்று முல்லையில் திருமணம்



முல்லைதீவு, ஒக்.21

முல்லைத்தீவில் நேற்று 14 இளைஞர், இளம் பெண்களுக்குத் திருமணங்கள் நடத்தப்பட்டன. தண்ணீரூற்று சித்தி விநாயகர் ஆலயத்தில் திருமணங்கள் நடைபெற்றன.

பொருளாதார ரீதியில் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இணைந்து, லண்டன் கிளை சைவ முன்னேற்றச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்தத் திருமணங்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.


திருமண பந்தத்தில் இணைந்தவர்களை அகில இலங்கை இந்துமா மன்றத்தின் பிரதம குருக்கள் மற்றும் பலர் ஆசீர்வதித்தனர். அவர்களின் வாழ்வு வளம்பெற லண்டன் கிளை சைவ முன்னேற்றச் சங்கத்தினர் உதவிகளை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி3)

## விவசாய அமைச்சின் அலுவலகம் மாங்குளத்தில் நேற்றுத் திறப்பு

கிளிநொச்சி, ஒக்.21

கிளிநொச்சி, மாங்குளத்தில், விவசாயமும் கமநல சேவைகளும் ,கால்நடை அபிவிருத்தி , நீர்ப்பாசனம் ,மீன்பிடி , நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சினுடைய உப அலுவலகம் நேற்றுக் காலை திறக்கப்பட்டன.

நிகழ்வில் சம்பிரதாய பூர்வ நிகழ்வுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரனால் பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் வடமாகாண விவசாயமும் கமநல சேவைகளும் ,கால்நடை அபிவிருத்தி , நீர்ப்பாசனம் ,மீன்பிடி , நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், தியாகராசா, நடராஜா, இந்திரராசா, சிவயோகன், தர்மலிங்கம், தவநாதன், ஜெயதிலக, மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் மயூரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற- ரி-2)



## மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், ஒக்.21

மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் நிதியுதவியில் 104 மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் நேற்று காரைநகர் பிரதேசசெயலகம் ஊடாக வழங்கப்பட்டன.

அதில் 104 மீனவ குடும்பங்களுக்கு தலா 1இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதர உதவிகள், மீன்பிடிஉபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட 9 சங்கங்களில் இருந்து 104 மீனவர்களுக்கும் வாழ்வாதார உதவிகளை வழங்கும் நிகழ்வுக்கு பிரதம விருந்திருந்தினராக வந்திருந்த மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் வழங்கினார். (ற.ரி4)

## விபத்தில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், ஒக்.21

நீர்வேலி சந்தியில் நேற்று நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கோப்பாயில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த காரும், மோட்டார் சைக்கிளும் விபத்துக் குள்ளாகின. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4)

## கஞ்சாவுடன் கைதானவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

திருகோணமலை, ஒக்.21

கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் சமிலா குமாரி ரத்நாயக்க நேற்று உத்தரவிட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் கொழும்பைச் சேர்ந்த 21வயதுடையவரும் மற்றும் தம்பலகாமம் புதுக்குடியிருப்பு பகுதியைச்சேர்ந்த 40வயதுடைய வரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் மன்னாரிலிருந்து முச்சக்கர வண்டியில் 6 கிலோ கேரளக் கஞ்சாவைக் கடத்திச்சென்றனர்.

வாகனங்களைச் சோதனையிட்ட ரொட்டவெவ பொலிஸாரால் கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி4)

## கத்திக் குத்து குற்றச்சாட்டு: மனைவி பிணையில் விடுவிப்பு

சாவகச்சேரி ஒக். 21

கணவனைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை பிணையில் செல்ல அனுமதித்தார் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான்.

கணவனைக் கத்தியால் குத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தாயாரான குறித்த பெண்ணைக் கொடிகாமம் பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பெண்ணின் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி பிணையில் விடக் கோரியதையடுத்து தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணையில் செல்ல பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த 39 வயது குடும்பத்தலைவர் ஒருவர் வயிற்றில் கத்திக் குத்துக் காயத்துடன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அவர் தனது வாக்குமூலத்தில் தனது மனைவி தன்னைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினார் எனத் தெரிவித்திருந்தார்.

சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த வேளையில் கணவர் தன்னைத் தாக்க வந்தபோது அதனைத் தடுக்க முற்பட்டேன். அவ்வேளையில் வெங்காயம் வெட்டிக் கொண்டிருந்த கத்தி தவறுதலாக கணவரின் வயிற்றில் குத்தியது எனவும் காயமடைந்தவரின் மனைவி தெரிவித்திருந்தார் எனக் கூறப்பட்டது. (ற-ரி2,9)

## இந்திய வர்த்தகருக்கு ரூ.15 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி,ஒக்.21

நாட்டுக்குள்நுழைவதற்கான கடவுச்சீட்டின் காலம் முடிவடைந்த பின்னரும்புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியவர்த்தகருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

அவர் வைத்திருந்த புடைவைகளையும் பறிமுதல் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

தீபாவளியை முன்னிட்டு கொடிகாமம் பகுதியில் வீடு வீடாகச் சென்று நடமாடும் புடைவை வியாபாரம் செய்வதை அறிந்த பொலிஸார் அவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவரின் கடவுச்சீட்டின் காலம் முடிவடைந்திருந்தமை கண்டறியப்பட்டது. அவர் கடந்த எட்டாம் திகதி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று சாவகச்சேரி பதில் நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அந்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து சான்றுப் பொருளாக ஒப்படைக்கப்பட்ட புடைவைகளைப் பறிமுதல் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ரி2,9)

## கத்தோலிக்க குருமார்களுக்கு வளலாயில் விடுதி திறப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.21

யாழ். வளலாய்ப் பகுதியில் அமைக்கப்பட்ட கத்தோலிக்க குருமார்களின் ஓய்வு விடுதி நேற்றுக் காலை யாழ். மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ் ஆயர். வடக்கு கடற்படைத் தளபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த இல்லம் கடற்படையின் பொறியியல் பிரிவினரின் மனித வலுவுடன் ஆயர் இல்லத்தால் ஒதுக்கீடு செய்த 15 மில்லியன் ரூபா நிதியில் மறு சீரமைப்புச் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சேர் சிற்றம்பலம் கார்டினர் நிதியத்தின் ஊடாக ஆரம்ப காலப்பகுதியில் 15 பரப்புக் காணியில் குறித்த ஓய்வு விடுதி வளலாய்ப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது.

1950 ஆம் ஆண்டிலிருந்து யாழ். றோமன் கத்தோலிக்கத்திருச்சபையின் ஆயரும். பெரிய குருமட அருட் சகோதரர்களும் தங்களுக்கு உரிய ஓய்வுவிடுமுறை காலங்களில் இங்கு தங்கிச் சென்ற இடமாக மேற்படி இடம் காணப்பட்டது எனத் கூறப்பட்டது.

நிகழ்வில் இலங்கைக் கடற்படைத் தளபதி ட்ராவிஸ் சின்னையா, வடக்கு கடற்படை கட்டளைத் தளபதி றியர் அட்மிரல் ஜெயந்த.டி.சில்வா, கடற்படை அதிகாரிகள், மற்றும் அருட் தந்தையர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி2,11,101)



# யாழ். பல்கலையில் கஜன், சுலக்சனுக்கு நினைவேந்தல்

யாழ்ப்பாணம்.ஒக்.21

யாழ். பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்களின் ஓராண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக் காலை 10 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வுகள் மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றன.

உயிரிழந்த மாணவர்களின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.



மாணவர்கள். விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் என அனைவரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களான நடராஜா கஜன் மற்றும் விஜயகுமார் சுலக்சன் ஆகிய இரு வரும் 20.10.2016 அன்று கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை யாழ். பொலிஸார் அவர்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ரி2, 37)

## பூப்பறிக்கச் சென்றவரை கடித்துக் குதறியது நாய்

தென்மராட்சி ஒக். 21

ஆலயத் தேவைக்காக பூக்கள் பறிக்கச் சென்ற பெண்ணை நாய் கடித்துக் குதறியது என தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நுணாவில் மேற்கில் இடம்பெற்றது.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த இந்திரகுமார் அனுலதா (வயது 52) என்பவரே கடிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆலயத்துக்குக் கொண்டு செல்வதற்காக அயல் வீடொன்றில் பூக்கள் பறிக்கச் சென்ற வேளையில் நாய் கடித்தது என்று, கடிகாயங்களுக்கு இலக்கான பெண் தெரிவித்தார். (ரி2, 9)

## போலி நுழைவிசைவுடன் கனடா செல்ல முயற்சித்தவர் கைது

கொழும்பு,ஒக்.21

போலியான நுழைவிசைவைப் பயன்படுத்தி கனடாவுக்குச் செல்ல முயற்சித்த நபர் ஒருவர் கட்டார் வானூர்தி நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்த அவரை குற்றப்புலனாய்வுதிணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபர் மினுவாங் கொடை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை பிணையில் செல்ல நீதிவான் பிலானி சத்துரந்தி பெரேரா அனுமதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி-5)

## களவாக மணல் கடத்தியவர்கள் பொலிஸாரைக் கண்டதும் ஓட்டம்

வடமராட்சி,ஒக்.21

சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்றவர்கள் பொலிஸாரைக் கண்டதும் மணலுடன் கன்ரர் வாகனத்தைக் கைவிட்டுத் தப்பியோடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வடமராட்சி மணற் காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

வாகனம் மணலுடன் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே மணல் கைப்பற்றப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2, 26)


## பளை.மத்திய கல்லூரியில் நூல்கள் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம் ஒக்.21

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மற்றும் பளை மத்திய கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய நூல்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பளை மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபை மற்றும் பளை மத்திய கல்லூரி நூலகங்களில் உள்ள நூல்களும் பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்ட மற்றும் பிரதேச செயலகத்துக்குக் கிடைத்த நூல்கள் போன்றவை இதில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. நூல்களின் காட்சிக் கூடத்தை எழுத்தாளரும் பிரதேச செயலக முதன்மை முகாமைத்துவ உதவியாளருமான செ.சுதாகரன் திறந்தார். காட்சிப்படுத்தலை மாணவர்கள், அரச அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் பார்வையிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2, 9)



## வவுனியா புதிய பேருந்து நிலையத்தை இயக்க கடுமையான நடவடிக்கை எடுப்போம்

### போக்குவரத்து அமைச்சர் நிமல் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 21
வவுனியாவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் எந்தக் காரணத்துக்காவும் இடமாற்றப்படமாட்டாது. தேவைப்படின் கடுமையான நடவடிக்கை எடுத்து அதனை இயங்கச் செய்வோம். வர்த்தகத் தரப்பினரின் தலையீடு காரணமாகவே புதிய பேருந்து நிலையம் இயங்காமல் இருக்கின்றது. இவ்வாறு போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ள போதும் தற்போது வரையில் அது இயங்காதிருக்கின்றது. அதனைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தாங்கள் மேற்கொள்ளவேண்டும் என்று கூறினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் நிமல், புதிய பேருந்து நிலையத்தை அமைப்பதற்கான இடத் தெரிவு முன்னைய அரசின் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. புதிய பேருந்து நிலையம் நிர்மாணிக்கப் பட்டு விட்டது. அதனை இயங்கச் செய்ய முடியாதுள்ளது.

அரச மற்றும் தனியார் போக்குவரத்துப் பிரிவினருக்கு இடையில் காணப்படும் உள்ளக முரண்பாடுகளே இதற்குக் காரணம். ஒரு தரப்பினர் ஆதரிக்கின்றபோது மற்றைய தரப்பினர் எதிர்க்கின்றனர்.

தற்போதுள்ள பேருந்து நிலையத்தைச் சூழவுள்ள வர்த்தகத் துறையினரினதும் செல்வாக்கும் இந்த விடயத்தில் காணப்படுகின்றது. புதிய பேருந்து நிலையத்துக்கு அரச, தனியார் துறையினர் செல்வதை வர்த்தகத் தரப்பினர் விரும்பவில்லை. இதனால் இழுபறி நிலமைகள் காணப்படுகின்றன. இது அங்கு காணப்படும் உள்ளகப் பிரச்சினைகள். அதில் தலையிடுவதற்கு நாம் விரும்பவில்லை. பேருந்து நிலையத்தை இயங்கச் செய்வதற்கு நாம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

வவுனியா பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதி நகரத்தின் மத்தியில் உள்ளது. அதனை மாற்றியமைத்து அந்த இடத்தில் பேருந்து நிலையத்தை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா ? என்று சாள்ஸ் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் நிமல், புதிய பேருந்து நிலையத்தை இடமாற்ற முடியாது. தேவையானால் நாம் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பின்னிற்கப் போவதில்லை. காலப் போக்கில் இது சரியாகும் - என்றார். (5,31)

## கட்சி அமைப்பாளராக இருப்பவரை முகாமையாளராக எப்படி நியமிப்பீர்கள்?

### வட பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் நியமனம் தொடர்பில் கூட்டமைப்பு கேள்வி

கொழும்பு, ஒக். 21
தகுதியானவர்கள் பலர் இருக்க அநுராதபுரத்தைச் சேர்ந்த சிங்களவரை வடக்கு மாகாண போக்குவரத்துச் சபையின் முகாமையாளராக நியமித்துள்ளீர்கள். அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராகவும் இருக்கிறார். அப்படிச் செயற்பட முடியுமா? இவ்வாறு நாடாளுமன்றில் விசனத்துடன் கேள்வி எழுப்பினார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். வடக்கு மாகாண போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளராக அநுராதபுரத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கில் அந்தப் பதவியை வகிக்கக் கூடிய எத்தனையோ நபர்கள் உள்ளனர. அவர்களுக்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

பிராந்திய முகாமையாளர் யாழ்ப்பாணத்தில் உள்ள அவருடைய அலுவலகத்துக்குச் செல்லாது வவுனியாவில் புதிதாக அலுவலகத்தை அமைத்து அங்கு தான் இருக்கின்றார். இதனை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

இந்த முகாமையாளர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர் எவ்வாறு கட்சியொன்றின் அமைப்பாளராக இருக்க முடியும்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் தேர்தல்களின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பசில் தமது கட்சி வெற்றி பெறுவதற்காக அரசின் உயர் பதவிகளில் தமக்கு வேண்டியவாறு மாற்றங்களைச் செய்தார். இயலுமானவரையில் தமக்குச் சார்பான அதிகாரிகளை நியமித்து தேர்தலில் வெற்றிகளைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதும் தமிழ் மக்கள் அதற்குரிய பாடத்தைப் புகட்டியிருந்தனர்.

அரச சேவையில் உள்ள ஒருவருக்கு அமைப்பாளர் பதவியை வழங்குவது பொருத்தமற்றது. முகாமையாளர் சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக இருப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. அவர் முகாமையாளர் பதவியில் இருந்து கொண்டு அந்தப் பதவியை வகிப்பதால் அரசியல் ரீதியான செயற்பாடுகளுக்காக அதிகாரங்கள் பிரயோகிக்கப்படும் ஆபத்தே உள்ளது. அது தொடர்பில் தாங்கள் கவனம் எடுப்பீர்கள் என்று நம்புகின்றேன் - என்றார். (5,31)

## முச்சக்கரவண்டி செலுத்துவதற்கு வயதுக் கட்டுப்பாட்டுச் சட்டம் விரைவில்

### போக்குவரத்து அமைச்சர் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21
நாட்டில் முச்சக்கர வண்டிகளாலேயே அதிகளவு விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இளைஞர்கள் 18 வயதானவுடன் முச்சக்கர வண்டியைச் செலுத்துகின்றனர். விபத்துக்களைக் குறைக்கும் நோக்குடன் 35 வயதுக்குக் குறைந்தவர்கள் வாடகை முச்சக்கர வண்டியைச் செலுத்த முடியாதவாறு சட்டம் கொண்டு வரப்படும். இவ்வாறு போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவை அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் முச்சக்கர வண்டிகள் மில்லியனுக்கும் அதிகமாக உள்ளது. அதனால் ஏற்படும் விபத்துகள் அதிகமாகும். முச்சக்கர வண்டிகளின் இறக்குமதியை நாம் கட்டுப்படுத்த வேண்டும். நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுடன் பேசியுள்ளேன்.

பேருந்துகளின் எண்ணிக்கையும் நாட்டில் அதிகமாகவே உள்ளன. பேருந்துகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதிலும் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு இடம் இல்லை - என்றார். (5,31)

## மாணவி தொடர்பில் தவறான தகவல் பரப்பியவர்களுக்கு எதிராக விசாரணை

கொழும்பு, ஒக். 21
பாடசாலை மாணவி கர்ப்பமாகியுள்ளதாக பொய்யான பரப்புரை மேற்கொண்டு, பாடசாலையிலிருந்து மாணவியை வெளியேற்றிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கொழும்பு அரசின் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் கெகிராவ கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையில் 10 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவி கர்ப்பமடைந்துள்ளதாகத் தெரிவித்து அவர் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இதனையடுத்து இது தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சர் பணித்துள்ளார்.

மேற்படி பாடசாலை மாணவி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, அவர் கர்ப்பமாகவில்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (5,31)

## பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, ஒக். 21
தொடருந்து ஊழியர் சங்கம் நள்ளிரவு முதல் ஆரம்பிக்க இருந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதாக அறிவித்துள்ளனர்.

தொடருந்து நடவடிக்கை மேற்பார்வைச் சங்கத்தின் ஏற்பாட்டாளர் லால் ஆரியரத்ன இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து கடந்த வாரம் தொடருந்துப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். சம்பள உயர்வுக் கொடுப்பனவு தொடர்பில் தலைமை அமைச்சரின் செயலர் தலைமையில் பேச்சு முன்னெடுக்கப்பட்டது.

இந்த மாதச் சம்பளத்தில் உயர்வு உள்ளடக்கப்படுவதாகவும் அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு 19ஆம் திகதி வழங்கப்படும் எனவும் கூறப்பட்ட நிலையில் உத்தியோகபூர்வ அறிவித்தல் வராத காரணத்தால் மீண்டும் பணிப்புறக்கணிப்புக்குத் தயாராகினோம். போக்குவரத்து அமைச்சில் இன்று(நேற்று) காலை நடத்தப்பட்ட பேச்சைத் தொடர்ந்து போராட்டத்தைத் தற்காலிகமாக கைவிடத் தீர்மானித்துள்ளோம்- என்றார். (5)

(முன்னர் வந்த செய்தி பக்.9இல்)

## இந்தியாவிடமிருந்து வாங்கிய கப்பல் கொழும்பை இன்று வந்தடையும்

கொழும்பு, ஒக். 21
இலங்கை கடற்படை இந்திய அரசிடமிருந்து கொள்வனவு செய்துள்ள ஈ.ஜி 60 ரகத்தை சேர்ந்த கடல் பாதுகாப்பு கப்பல் கொழும்பு துறைமுகத்தை இன்று வந்தடையவுள்ளது.

இதற்கு முன்னரும் இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி இந்தியாவிடம் இருந்து வருண என்ற கடல் பாதுகாப்பு ரோந்துக் கப்பலை இலங்கைக் கடற்படை கொள்வனவு செய்திருந்தது.

கடந்த 2010ஆம் ஆண்டிலும் இந்தியாவிடம் இருந்து இலங்கைக் கடற்படை சயுர என்ற போர்க்கப்பலை கொள்வனவு செய்திருந்தது. குறுகிய காலத்தில் இந்தியாவிடம் இருந்து இலங்கை கொள்வனவு செய்யும் மூன்றாவது கடல் பாதுகாப்பு கப்பல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசியக் கடற்படையின் இலகு ரக பல நோக்குப் போர்க்கப்பல் நல்லெண்ணப் பயணமாக கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பல் மூன்று நாள்கள் இலங்கையில் தரித்திருக்கும். (5,31)

## மகாநாயக்க தேரர்களை சந்திக்க கொழும்பு இராஜதந்திரிகள் முயற்சி

கொழும்பு, ஒக். 21
புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியைக் கைவிடுமாறு அரசுக்கு மகாநாயக்க தேரர்கள் அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், அவர்களை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் தீர்மானித்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

மகாநாயக்க தேரர்களை தனித்தனியே சந்தித்து, இலங்கைக்கு ஏன் புதிய அரசமைப்பு அவசியமாகின்றது என்ற முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவுள்ளனர்.

இலங்கையில் வாழும் சகல இன மக்களுக்கும் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதே பன்னாட்டுச் சமூகத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அதற்காகவே அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. மாறாக, பன்னாட்டுச் சூழ்ச்சிகளின் பிரகாரம் அரசமைப்பை தயாராக்குமாறு அழுத்தம் கொடுக்கவில்லை என்று மகாநாயக்க தேரரர்களுக்கு விளக்கமளிக்கப்படும். அப்போது பன்னாட்டுச் சமூகம் மீதான அச்சம் நீங்கக்கூடும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். (5)

### காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம்

## விண்ணப்பம் கோரி உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முடிவு

கொழும்பு, ஒக். 21
காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தைச் செயற்படுத்துவதற்காக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் அரசமைப்புப் பேரவை தீவிரமாக இறங்கியுள்ளது.

தலைவர், செயலர் உட்பட பதவிநிலை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் அரசமைப்புப் பேரவை நாடாளுமன்றத்தில் கூடியது.

பணியகத்துக்கான உறுப்பினர்களை முறையான தெரிவின் பிரகாரம் உரிய தரநிர்ணயங்களின் அடிப்படையில் தெரிவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக்கோரும் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

வழமையாக பதவி நிலைக்குச் சில உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்படும். தகுதியான ஒருவரையே அரசமைப்புப் பேரவை நியமிக்கும். ஆனால், காணாமல்போனோர் பணியக விடயத்தில் மாறுபட்ட அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுவது முக்கியத்துவமிக்கதாகக் கருதப் படுகின்றது. (5)

# வரவேற்காததால் தந்தையை கொட்டனால் தாக்கிய மகன்!

## மதுபோதையில் கைங்கரியம்

மகனால் தாக்கப்பட்ட முதியவர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். 83 வயதான அந்த முதியவரின் தலை மற்றும் உடலில் காயங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை தீபாவளித் தினத்தன்று மட்டுவிலில் நடந்துள்ளது.
மகன் ஏற்கனவே போதையில் மனைவி மற்றும் பிள்ளைகளை தாக்குகின்றவர் என்றும், அதனால் பெற்றோர் அவருடன் முரண்பட்டிருந்தனர் என்றும் கூறப்படுகின்றது. தாய், தந்தையருடன் பேசாதிருந்தவர் தீபாவளி தினத்தன்று பெற்றோர் வீட்டுக்குச் சென்றார். அப்போதும் அவர் போதையில் இருந்தார். தந்தை தன்னை வரவேற்காது அமர்ந்திருந்தார் என்று கோபப்பட்டு தந்தையுடன் வாக்குவாதப்பட்டு கொட்டனால்தாக்கினார்என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 4வது ஆண்டுநிறைவுவிழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும் கடந்த தீபாவளிதினத்தன்று மாலை 5.30 மணி தொடக்கம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கௌரவிப்பு நிகழ்வுகள், கலைகலாசார நிகழ்வுகள், 'தொன்மம்' கலைக்குழுவின் பறையிசை நிகழ்வுகள், மற்றும் யாழ்ரியூன்ஸ் இசைக்குழுவின் இசைநிகழ்வு என்பன இடம்பெற்றன.
இவ்விழாவுக்கு யாழ் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலளர் (காணி) திரு. முரளீதரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (21)

## இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் நாளை

யாழ்ப்பாணம், ஒக்.21
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சிறப்புத் தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை மு.ப.9 மணிக்கு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகவுள்ளன. என அறிவிக்கப்பட்டது.
குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை சங்கத்தின் செயலாளர் ப.மயூரன் அறிவித்துள்ளார். (21)

# காரைநகரில் தண்ணீருக்கு தட்டுப்பாடு

## பிரதேச மக்கள் கடுமையாகப் பாதிப்பு

காரைநகர், ஒக். 21
காரைநகரில் உள்ள நீர்நிலைகள் வற்றி வரண்டுவிட்டன. குடிதண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட தண்ணீர் இன்றி அவதிப்படுகிறோம் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.
வயோதிபர்கள், கைக்குழந்தைகள் நீரின்றி அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். காரைநகரில் உள்ள குளங்கள், கிணறுகள் பெரும்பாலானவை வற்றி வரண்டுவிட்டன.
தற்போது குடிதண்ணீர் வெளியிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகிறது. காரைநகர் பிரதேச சபையும் காரைநகர் அபிவிருத்திச் சபையும் ஒரு லீற்றர் குடிதண்ணீர் 60 சதம் வீதம் வழங்கி வருகின்றன. மக்களின் தீபாவளிக் கொண்டாட்டம் காரைநகரில் முற்றாக முடங்கியதாகவே கூறலாம். மலசல கூடங்களைக் கூடப் பாவிக்க முடியாத நிலையில் பெரும்பாலான மக்கள் உள்ளனர் என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குடிதண்ணீர் விநியோகமும் காரைநகர் முழுவதும் ஒழுங்கு முறையில் இடம்பெறுவதில்லை. குறிப்பிடப்பட்ட சில இடங்களுக்கே வழங்கப்படுகிறது.
சுமார் 4 ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட காரைநகரில் கால்நடைகளும் நீரின்றி அவதிப்படுகின்றன. ஒரு சிலர் ஆழ்துளைக் கிணறுகளை தோண்டி தண்ணீர் பெற முயற்சிக்கின்ற போதும் அவை உப்பு நீராகக் காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.
கடந்த 50 வருடங்களில் இவ்வாறான வறட்சியைப் பார்த்ததில்லை. வறட்சிக்கான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள அரச அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அலட்சியமாக உள்ளனர் என்று பிரதேசத்தவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
100 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தண்ணீர் இன்மையால் காரைநகரை விட்டுத் தற்காலிகமாக வேறிடங்களுக்குச் சென்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. குடாநாட்டில் ஆங்காங்கே சில நாள்களாக மழை பெய்துவருகின்ற போதும் காரைநகரில் இதுவரை மழை பெய்யவில்லை. இதனால் நெல் விதைப்பை மேற்கொள்ள முடியாது விவசாயிகள் கவலையடைந்துள்ளனர் என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (4-250)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி, ஒக்.21
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ற-9)



## அர்ச்சகர்கள், இசை வேளாளர்களுக்கான கோவில் குடியிருப்புக்களுக்கு அடிக்கல்

*அமைச்சர் சுவாமிநாதன் நேற்று நட்டார்*

காரைநகர், ஒக். 21
காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் அர்ச்சகர்கள், இசை வேளாளர்களுக்கான கோவில் குடியிருப்புக்கள் அமைக்கப்படவுள்ளன.
அதற்கான அடிக்கல்லை இந்து கலாசார அலுவல்கள் மற்றும் சிறைச்சாலைகள், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று நட்டார்.
முற்பகல் 9 மணியளவில் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளை அடுத்து ஈழத்துச் சிதம்பர மூன்றாம் வீதியில் அமைக்கப்பட உள்ள கோயில் குடியிருப்புகளுக்கான அடிக்கல் நடப்பட்டது.
அர்ச்சகர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், ஆலய உதவியாளர்களுக்கான வீடுகள் போர்க் காலத்தில் முற்றாகச் சேதமடைந்திருந்தன. இவற்றைச் சீரமைப்பதற்காக இந்து கலாசார அமைச்சு சுமார் பத்து மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது. அந்த நிதியிலிருந்தே ஆறு வீடுகள் அமைக்கும் பணி இடம்பெற உள்ளது.
நிகழ்வில் வடகடல் நிறுவனத்தின் தலைவர் தியாகராசா பரமேஸ்வரன், காரைநகர் பிரதேச செயலர் ஈ. தயாரூபன், மாவட்டச் செயலக அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், அடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-250)



*சுட்டுக்கொல்லப்பட்ட*

## புதுக்குடியிருப்பு இளைஞனின் குடும்பத்தினர் சுவிற்சர்லாந்தில்

*இறுதிக்கிரியைளில் கலந்து கொண்டனர்*

முல்லைத்தீவு, ஒக்.21
சுவிற்சர்லாந்தில் சுட்டுக்கொல்லப்பட்ட புதுக்குடியிருப்பு இளைஞனின் குடும்பத்தினர் நேற்று முன்தினம் சுவிற்சலாந்துக்குச் சென்றுள்ளனர்.
சுவிற்சர்லாந்தில் வன்முறையில் ஈடுபட முயன்ற குற்றச்சாட்டில், சுவிஸ் பொலிஸாரினால் அண்மையில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். சுட்டுக் கொல்லப்பட்டவர் முல்லைத்தீவுப் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுப்ரமணியம் கரன் என அடையாளம் காணப்பட்டார். இந்த நிலையில் அவரது இறுதிக்கிரியை மற்றும் விசாரணைகள் நேற்று அங்கு இடம்பெற்றன.
இதில் பங்கு கொள்வதற்கே உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தினர் அங்கு சென்றுள்ளனர். அவர்கள் நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சுவிஸ் தூதரக அதிகாரிகளுடன் இணைந்து சுவிற்சர்லாந்துக்கு பயணமாகினர். அங்குள்ள தமிழ்மக்கள் சிலர் இவர்களை வரவேற்று ஆறுதல்படுத்தி உள்ளனர். சுட்டுக்கொல்லபட்ட கரனின் இறுதிகிரியைகள் நேற்று சுவிற்சர்லாந்து லுனாகோ ரிகினோ (LUGANO, TICINO) எனும் பகுதியில் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (21-ரி3)

## இந்திய அமைதிப் படையினரால் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி

ஈழத்தில் இந்திய அமைதிப் படையினரால் கொல்லப்பட்டவர்களின் நினைவேந்தல் யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை தலைமைச் செயலகத்தில் நாளை மாலை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் பேரவையின் பொதுச் செயலாளர் மு.உதயசிறி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
ஈழப் போராட்டத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் மிக முக்கிய காரணம் இந்திய அரசே. தன் பிராந்திய வல்லாதிக்கத்துக்காக ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இந்திய அரசு கபடத் தனமாகப் பயன்படுத்திக் கொண்டது. இதற்குத் தமிழ் அரசியல் தலைமைகளும் துணைபோனதை யாரும் மறுக்க முடியாது.
ஈழத்தில் இந்திய அமைதிகாக்கும் படையால் மேற்கொள்ளப்பட்ட மனிதப் படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.
நாளை நினைவஞ்சலி செலுத்துவதோடு ஈழத்தில் இந்திய அமைதிப்படை மேற்கொண்ட மனித பேரவலத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட இருக்கின்றது. தமிழ் உணர்வாளர்கள் மற்றும் இந்திய அமைதிப்படையால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளலாம் என்றுள்ளது. (4)

## கூட்டுறவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 21
வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் 95 ஆவது பன்னாட்டுக் கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை சமாச மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும்.
சமாசத்தின் தலைவர் என். கணேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.
பன்னாட்டு கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சமாசத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (4-17)

## முதியோர் மாதாந்த ஒன்றுகூடலும் கருத்தரங்கும்

பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர் மாதாந்த ஒன்றுகூடலும் கருத்தரங்கும் இன்று சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில் முன்புறத்தில், காங்கேசன்துறை வீதியில் உள்ள, இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழக வடக்கு மாகாண தலைமையகத்தில் இந்த ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது
இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகம், வடபிராந்திய மூத்தோர் அவை, வடக்கு மாகாண ஓய்வூதியர் சங்கங்கள், ஓய்வூதியர்கள், நலன்விரும்பிகள் அரச திணைக்களங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் ஓய்வூதியர்கள் அவர்களின் குடும்பங்கள் சார்ந்த முதியோர்களும் ஒன்றிணைந்து ஒன்றுகூடலை நடத்தவுள்ளனர். இதில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச உதவிப் பிரதேச செயலர் பா.ஜெயகரன் கலந்து கொள்ள உள்ளார். சகல யாழ்ப்பாண மாவட்ட ஓய்வூதியர்களும், முதியோர்களும் நிகழ்வுக்கு வருகை தருமாறு இந்தக் கழக இணைச்செயலாளர்கள் தெரிவித்துள்ளனர். (21)

# அரை நிரந்தர வீடுகளில் பெரும் அல்லலின் மத்தியில் வாழ்க்கை

## தெளிகரை மக்கள் கவலை

கிளிநொச்சி, ஒக்.21
தெளிகரையில் வழங்கப்பட்ட அரை நிரந்தர வீட்டுத் திட்டம் சரியான வகையில் இல்லை. அதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று வீட்டுத் திட்டப் பயனாளிகள் விசனம் தெரிவித்தனர்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்ட தெளிகரையில் நிரந்தரக் காணிகள் இல்லாதிருந்த குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அரை நிரந்ததர வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. பிரதேச செயலகத்தால் காணிகள் வழங்கப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனம் 1 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் தளபாடங்களை வழங்கியது. கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை மாதாந்தம் தவணைப் பணமாக ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் 1 லட்சம் ரூபா கடன் வழங்கியது.

இந்த வீடுகளில் இரு அறைகள் மட்டும்



கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. சமையலறையோ, விறாந்தையோ அமைக்கப்படாது அத்திபாரம் இடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

"சமைப்பதற்கு சமையலறை இல்லை. முன்பக்கத்தில் (விறாந்தை) கல் வைத்துக் கட்டப்பட வில்லை. மழை காலத்தில் மழைச் சாரல் வீட்டுக்குள் அடிக்கின்றது. சுவர்கள் பூசப்படவில்லை. அதனால் விச ஜந்துக்கள் சுவரால் ஏறி வீட்டுக்கு வரும் நிலையும் காணப்படுகின்றது. எமது காணிகளுக்குப் பின்புறம் காடு உள்ளதால் பாம்புகள் அதிகளவில் இங்கு நடமாடுகின்றன. முற்றத்தில் நிற்கும் மரங்களில் கூடப் பாம்புகள் சர்வசாதாரணமாகக் காணப்படுகின்றன. எமது பிரச்சினைகளுக்கான தீர்வை உரிய அதிகாரிகள் வழங்க வேண்டும்." என்று வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவித்தனர்.

"2015ஆம் ஆண்டு கிடைத்த திட்டத்தின் அடிப்படையில் காணியற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டு அரை நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. அவர்களின் விருப்பத்துக்கு இணங்கவே வழங்கப்பட்டது. போதியளவு வீட்டுத் திட்டங்கள் எம்க்குக் கிடைத்தால் அவற்றை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்." என்று பூநகரிப் பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரன் தெரிவித்தார். (ற-6)

# "ஒருத்தி" திரைப்படம்

'ஒருத்தி' திரைப்படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்படவுள்ளது. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இந்தத் திரைப்படம் திரையிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாண பொதுசன நூலக வாசகர் வட்டம் நடத்தும் மாதாந்தத் திரைப்படக் காட்சி வரிசையில் இது திரையிடப்படுகிறது. இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு (இலவசமாக) திரைப்படக் காட்சி இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (21)

# மனைவியை கிணற்றுக்குள் வீழ்த்திய கணவன் துரத்திப் பிடித்து மறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 21
மனைவியைத் தாக்கி கிணற்றுக்குள் வீழ்த்திய குற்றச்சாட்டில் குடும்பத் தலைவர் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லும் போது தப்பியோடியுள்ளார். துரத்திப்பிடிக்கப்பட்ட அவரை விளக்க மறிய லில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. சம்பவம் நாரந்தனையில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.

கிணறு 10 - 15 அடி ஆழமானது. கிணற்றில் நீர் வற்றி இருந்ததால் உயிராபத்து ஏற்படாத போதிலும் , கிணற்றினுள் வீழ்ந்தமையால் மணைவி படுகாயமடைந்துள்ளார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் குறித்த பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டார். அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்துவதற்காக அழைத்துச் செல்லப்பட்டபோது பொலிஸாரிடமிருந்து தப்பியோடியுள்ளார். அவரைப் பொலிஸார் துரத்திச் சென்று பிடித்தனர்.

அவரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4-37)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | – | 80 | 100 | 80 | 80 |
| கத்தரி | 140 | 120 | 200 | 120 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 50 | 60 | 50 |
| பயிற்றை | 200 | 320 | 240 | 200 | 240 |
| பாகல் | 400 | 600 | 350 | 300 | 260 |
| க.கிழங்கு | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 140 | 240 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 200 | 280 | 240 | 260 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 40 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 180 |
| வாழைக்காய் | 80 | 100 | 90 | 80 | 80 |
| கீரை | 40 | 50 | 40 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 40 |
| ப.மிளகாய் | 400 | 600 | 400 | 400 | 500 |
| புடோல் | 80 | 80 | 100 | 120 | 100 |
| கோவா | 140 | 160 | 130 | 120 | 140 |
| வெண்டி | 80 | 80 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 140 | 160 | 140 | 160 | 140 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 | 200 |
| தேங்காய் | 75 | 90 | 80 | 90 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 110 | 110 | 100 |
| தேசிக்காய் | 240 | 300 | 300 | 200 | 260 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 260 | 300 | 260 | 200 | 240 |
| கரட் | 100 | 160 | 100 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 170 | 250 | 400 | 120 | 200 |

# கலைவிழா

கரணவாய்,ஒக். 21
இமையாணன் கலைமகள் சனசமூக நிலைய வருடாந்தக் கலைவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் ஏரம்பு இராசையா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன் கலந்துகொள்வார். (4-108)

# வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞன் கொழும்புக்கு

ஆவரங்கால், சர்வோதயா வீதியால் வாள்வெட்டு நடத்தப்பட்டதில் படுகாயமடைந்த இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையிலிருந்துகொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு வீதியில் பயணித்துக்கொண்டிருந்த போது வாள்வெட்டு நடத்தப்பட்டது. ஆவரங்கால் மேற்கு புத்தூரைச் சேர்ந்தசெ.றஜீவன் (வயது - 28) என்பவரே படுகாயமடைந்தார். கத்திக் குத்தின் போது கத்தி முறிந்ததாகவும் கூறப்பட்டது. வாள்வெட்டுக்குழு அங்கிருந்து தப்பியோடிவிட்டது. வீதியில் பயணித்தவர்கள் காயமடைந்திருந்தவரை மீட்டு அச்சுவேலி வைத்தியசாலையில்சேர்த்தனர். (4-ரி1)

# விவாதப் போட்டி



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட விவாதச் சுற்றுப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் நடைபெற்றது. அதில் முதலாமிடத்தை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும், மூன்றாம் இடத்தை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ற)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 900 |
| நண்டு | 300 | 400 | 500 | 300 |
| கணவாய் | 600 | 600 | 800 | 1000 |
| பாரை | 400 | 500 | 500 | 700 |
| சுறா | 400 | 700 | 800 | 1000 |
| சீலா | 300 | 400 | 500 | 400 |
| விளை | 400 | 400 | 450 | 700 |
| முரல் | 250 | 350 | 400 | – |
| கும்பிளா | 250 | 300 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 250 | 300 | 400 | 300 |
| திரளி | 280 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | – |
| சூடை | 100 | 100 | 160 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 200 |
| திருக்கை | 250 | 200 | 400 | 200 |
| மதனம் | 150 | 150 | 250 | – |
| கொய் | 100 | 70 | 50 | 100 |
| பாலை | 100 | 200 | 400 | – |
| வாளை | 100 | 200 | 300 | – |

# புலமைப் பரீட்சையில் வெட்டுப்புள்ளியை தாண்டிய மாணவர்கள் கௌரவிப்பு

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளியைத் தாண்டிய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கியில் "ரன்கெகுளு" கணக்கு வைத்துள்ள,தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஆகவே சித்தியடைந்த மாணவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது விவரங்களை வங்கி அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ரி)




ஆண்களுக்கான புதிய மூக்கு கண்ணாடி வகைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 650 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# சிறுவர் கழகங்களை வலுப்படுத்துவதற்கு கொள்கை ஆவணம்

## சுகாதார அமைச்சிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21

வடக்கு மாகாணத்தில் கிராம அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் சிறுவர் கழகங்களை வலுப்படுத்தல் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட கொள்கை ஆவணம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது என நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் கழகம் மற்றும் கிராம அபிவிருத்திக் குழுக்களை வலுப்படுத்துவதன் மூலம் சிறப்பான வழிநடத்தலுடன் கூடிய சமுதாயத்தை உருவாக்க முடியும். அதற்கான ஆரம்ப நடவடிக்கையாக அவற்றை எமது மாகாணத்தின் வரையறைக்குள் கொண்டு வர வேண்டும். ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமானால் அதற்கான விதிமுறைகள் உள்ளடங்கிய கொள்கை ஆவணம் ஒன்று வேண்டும். ஆகவே நாம் அது தொடர்பான கொள்கை ஆவணம் ஒன்றைத் தயாரித்து அமைச்சுக்கு வழங்கியுள்ளோம். அமைச்சின் அனுமதியுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஏனைய மாகாணங்களில் இவ்வாறான குழுக்கள் மிகச் சிறப்பாகச் செயற்படுவதோடு, இதன் மூலமாக சமூக மட்டத்தில் ஒற்றுமை ஓங்குகிறது. மற்றும் குழந்தைகளின் ஆளுமை வளர்க்கப்படுகின்றது. அதேபோன்று வடக்கு மாகாணத்திலும் இதை நடைமுறைப்படுத்துவதற்கு அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டத்தில் பிரேரணையாக இது முன்வைக்கப்பட்டது.

அந்தப் பிரேரணையில் "நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தால் கொள்கை ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி வடக்கு மாகாணத்தில் கிராம அபிவிருத்திக் குழு அமைப்பதற்கான கொள்கை ஆவணத்துக்கான அனுமதி கிடைக்கப்பெற வேண்டும். இதன் மூலம் சிறுவர் பராமரிப்பினையும் பாதுகாப்பான சூழலையும் உருவாக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்று, அது மாகாகண சபையில் சமர்பிக்கப்பட்ட பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (21-ரி)

# யாழில் 2 லட்சம் பனம் விதைகள் கடந்த ஒரு மாதத்தில் கொள்வனவு

## மக்கள் அதிக ஆர்வம் காட்டுவதாக பனை அபிவிருத்திச் சபை தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.21

கடந்த ஒரு மாதகாலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து 2லட்சம் பனம் விதைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. பனம் பழத்தையும் மக்கள் ஆர்வத்துடன் கொண்டுவந்து தருகின்றனர் என பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கோபால கிருஸ்ணன் தெரிவித்தார்.

பனை அபிவிருத்தி சபையினால் பனம்பழங்கள் மற்றும் பனம் விதைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. தரமான பனம்பழம் 5 ரூபாவாகவும், பனம் விதை ஒரு ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபையின் விரிவாக்கல் திட்ட முகாமையாளர் கா.கோபாலகிருஸ்ணன் தெரிவித்ததாவது;

வலந்தலைச்சந்தி காரைநகரில் அமைந்துள்ள பனம்சார் பல்தொகுப்புநிலையத்திலும், சிங்கை நகர் புலோலியில் அமைந்துள்ள பனைசார் உற்பத்தி நிலையத்திலும் பனம் விதைகள் மற்றும் பனம்பழங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பனம்சார் உற்பத்திப் பொருள்கள் தற்போது நாடுமுழுவதும் பரவி வருகின்றன. பனம்சார் உற்பத்திப் பொருள்களால் பல குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்கின்றன.

இதனை ஊக்குவிக்கவே நாடு முழுவதும் இருந்து பனம்பழம், பனம்விதைகள் பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்படுகின்றன. கடந்த செப்ரெம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொள்வனவு செய்யப்படும் பனம்பழத்தின் மூலம் பனம்களி செய்யப்படவுள்ளது. பனம்விதை மூலம் பனம்பாத்தி போடப்படவுள்ளது. அத்தோடு பொது அமைப்புக்களினூடாக பனம் விதைகளை வழங்கி நடுகையும் செய்யப்படவுள்ளது. பனை வளத்தைச் சார்ந்துள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். மக்கள் இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். பலர் முன்வந்து பனம் விதைகளை கொண்டுவந்து தருகின்றனர். இதுவரை 2லட்சம் பனம்விதைகள் தரப்பட்டுள்ளன. பனம் பழங்களையும் கொண்டுவந்து தருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு இடங்களிலேயே கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் சிறிய தொகை பனம் பழத்தை கொண்டுவந்து தருவதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது 5 முதல் 10 வரையான பனம் பழங்கள் அவர்களிடம் இருப்பின் அதைத் தருவதில் சிரமப்படுகின்றனர் எனவே இதற்கு மாற்றுத் திட்டம் ஒன்றையும் நடைமுறைப்படுத்தவுள்ளோம். அதாவது மக்கள் ஒன்று சேர்ந்து 25 முதல் 30 வரையான பனம் பழங்களைச் சேகரித்து வைத்திருப்பார்களானால் நாங்கள் அங்கு நேரில் சென்று கொள்வனவுசெய்யத்தீர்மானித்துள்ளோம். அடுத்தடுத்த வருடங்களில் பனம் விதை மற்றும் பனம் பழங்களை தருவதில் மக்கள் இன்னும் ஆர்வம் காட்டுவார்கள் என எதிர்பார்க்கின்றோம் -என்றார். (21)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சிறப்புச் செயற்றிட்டங்கள் 2018இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஒக்.21

வடக்கு மாகாணத்தில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சிறப்புச் செயற்றிட்டங்கள் அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் என்று மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மகளிர் விவகார அமைச்சுக்குத் தனியான நிதி ஒதுக்கீடுகள்இல்லை. ஆனால் அமைச்சுக்குக் கிடைக்கும் நிதியில் மகளிர் விவகாரத்துக்கும் தேவையான செயற்பாடுகளை வழங்கிவருகின்றோம். சிறியளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்றிட்டங்களை அடுத்த ஆண்டில் விரிவுபடுத்தவுள்ளோம். அவற்றில் மிக முக்கியமானது பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு சுயதொழில் வாய்ப்புக்களை வழங்கல் ஆகும்.

உணவு தயாரித்து விற்பனை செய்தல், அரைக்கும் ஆலைகளை நடத்துதல், விவசாயத்தை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு வாழ்வாதார உதவிகளை வழங்கவுள்ளோம். இதனை அவர்கள் மேற்கொள்ளுவதற்குத் தேவையான சிறப்புப் பயிற்சிகள், கட்டடங்கள், உள்ளீடுகள் போன்றவற்றை வழங்கவுள்ளோம். இவ்வாறான உதவித் திட்டங்களை வழங்கும் போது பெண்கள் குழுக்களாக இணைந்தும் ஒரு தொழில் முயற்சியை மேற்கொள்ளும்போது அவர்களுக்கான உதவியையும் வழங்கவுள்ளோம். இது தவிர பெண்களுக்கானவிழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்ட ரீதியிலும் நடத்தப்படும்- என்றார். (21-ரி)

# அரசதலைவர் வழங்கிய உறுதியை உதாசீனம் செய்கிறது இராணுவம்

## சபையில் சுட்டிக்காட்டினார் சிவமோகன் எம்.பி.

முல்லைத்தீவு, ஒக்.21

புதுக்குடியிருப்பில் இராணுவத்தின் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித்திருந்தார். அதை மீறும் வகையில் இராணுவத்தினர் எதேச்சதிகாரமாகச் செயற்படுகின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டம் போரால் மிகப் பாதிக்கப்பட்ட மாவட்டம். புதுக்குடியிருப்பில் மக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக அரச தலைவருடன் பல தடவைகள் கலந்துரையாடினோம்.

கடந்த மார்ச் மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் அரச தலைவர் காணிகளை விடுவிப்பதற்கான வாக்குறுதியை வழங்கியிருந்தார். எனினும் இராணுவத்தினர் அவரின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் செயற்படவில்லை. அங்குள்ள முகாம்களை அகற்றுவதில் இராணுவத்தினர் எந்தவித முனைப்பும் காட்டவில்லை. பாராமுகமாகவே இருக்கின்றனர். இது தொடர்பில் அரச தலைவர் கவனம் செலுத்த வேண்டும்.

அதேவேளை, நாட்டில் நெடுஞ்சாலைகளை அமைப்பதற்குரிய பல்வேறு கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு ஊடாக யாழ்ப்பாணத்துக்கான நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பதற்குரிய கருத்திட்டம் முன்னர் காணப்பட்டது. தற்போது அந்தக் கருத்திட்டம் கைவிடப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. வடக்கின் பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகின்றேன்.

புதுக்குடியிருப்பில் இருந்து ஒட்டுசுட்டான் வரையான சாலை அமைப்புப் பணிகள் நடைபெற்றிருந்தாலும் அதில் இரு கிலோமீற்றர்கள் வரையில் அமைக்கப்படாதுள்ளது. அது தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (ற-31)

## யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில்

# ரூபா 700 மில்லியன் நிதியில் பாரிசவாத சிகிச்சைக் கூடம்

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பாரிசவாத சிகிச்சை நிலையக் கூடம் அமைக்கப்படவுள்ளது. 700 மில்லியன் ரூபா செலவில் 6 அடுக்கு மாடிகளைக் கொண்டு இதற்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது என போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு போதனா வைந்தியசாலையாகத் திகழும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்கூட பக்கவாதங்களால் பாதிக்கப்படுபவர்களுக்கான நவீன சிகிச்சைக்கூடம் இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் போதனா வைத்திய சாலை வளாகத்தில் 700 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட புதிய பாரிசவாத சிகிச்சை நிலையக் கூடம் ஒன்று 6 அடுக்கு மாடிக் கட்டடமாக அடுத்த ஆண்டு நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதில் இரண்டு அடுக்கு மாடிகளில் பாரிசவாத நோயாளிகளுக்கான விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. ஒருமாடியில் அதற்கான வசதி வாய்ப்புக்கள் பயிற்சிக் கூடங்களும் அமையும். எஞ்சிய 3 மாடிகளில் ஏனைய விடுதிகளுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த திட்டமானது 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் பணிகள் இடம்பெறும். பணிகள் நிறை வடைந்ததன் பின் குறித்த விடுதி 2020ஆம் ஆண்டிலிருந்து இயங்கும் என்றார். (21-101)

# சொந்தத் தேவை காரணமாகவே வடமாகாண சபை உறுப்பினர்கள் சபை அமர்வுக்கு வருவதில்லை

## பேரவைச் செயலகம் தகவல்

யாழ்ப்பாணம்.ஒக்.21

சொந்தத் தேவை காரணமாக வடக்கு மாகாண சபையில் இடம்பறும் சபை அமர்வுகளில் அதிகமான உறுப்பினர்கள் கலந்துகொள்வதில்லை என பேரவைச் செயலகத்தின் புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

வடக்கு மாகாண சபையில் இதுவரை நடைபெற்ற அமர்வுகளின் அடிப்படையில் அந்தப் புள்ளி விவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அந்தப் புள்ளி விவரத்தின்படி மேலும் தெரியவருவதாவது:

வடக்கு மாகாண சபை தோற்றம் பெற்ற பிறகு இதுவரை 108 சபை அமர்வுகள் நடைபெற்றுள்ளன. சபை அமர்வு என்பது மிக முக்கியமான தொன்றாகும். மக்கள் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அது தொடர்பான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான தீர்வுகள் எட்டப்படும் அவையாக அது உள்ளது. அந்த சபை அமர்வில் சபை உறுப்பினர்கள் அனைவரும் இருக்க வேண்டும். அப்போதே பிரச்சினைகள் தொடர்பான முடிவுகளைத் தெளிவாகச் சம்பந்தபட்ட நபர்களுடன் கலந்துரையாட முடியும்.

ஆனால் இதுவரை நடைபெற்ற சபை அமர்வுகளில் சபை உறுப்பினர்களின் வரவின் மொத்த வீதம் 60 முதல் 70 வீதமாகவே காணப்படுகின்றது. சபை அமர்வுகளுக்கு வருகை தராதவர்கள் சொந்த விடயம் காரணமாகவும், வெளிநாட்டுப் பயணம் காரணமாகவும் வருகை தர முடியாது என்று அறிவித்தவர்களாகவே உள்ளனர். மூன்று சபை அமர்வுக்குத் தொடர்ந்து வருகை தராதவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற காரணத்தினால், இடையிலே சபை அமர்வொன்றுக்கு வருகைதந்து அதனைப் புதுப்பித்துச் செல்பவர்களும் உள்ளனர். சபை அமர்வுகளில் அனைத்து உறுப்பினர்களும் இருக்க வேண்டும் என்று அவைத் தலைவர் தெரிவித்து இருந்தாலும் அந்த ஒழுங்கு தொடர்பான கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு எழுத்து மூலமான ஆவணங்கள் இல்லை. என்று சுட்டிக்காட்டுகின்றது. (21-ரி)



# நீலப் பசுமை விருது கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி, ஒக்.21
சுற்றாடலுக்கான நீலப் பசுமை விருதினை கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் பெற்றுக் கொண்டுள்ளது. இலங்கை அரச தலைவரினால் சுற்றாடலுக்கான நீலப்பசுமை விருது அறிவிக்கப்பட்டது. விருதுவழங்கும் நிகழ்வு கொழும்பு சுற்றாடல் அதிகார சபையால் ஒழுங்குபடுத்தப்பட்டு கடந்த வாரம் பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போதே கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்துக்கு அந்த விருது கிடைத்துள்ளது.

உயிரியல் பல்வகைமை பேணல், சேதனப்பயிர்ச் செய்கை பற்றிய ஆராய்ச்சிகளின் தன்மை, சேதனப்பயிர்ச் செய்கை தொடர்பான ஊக்குவிப்புக்கள், விவசாயம் சார்கழிவுகளை சரியான முறையில் பரிகரித்தல், கிடைக்கும் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல், சுற்றயல்களின் சுத்தம், விவசாயப்பொருள்களின் பெறுமதிசார் நடவடிக்கைகள், நிறுவனத்தின் சமுதாயம் சார் பங்களிப்புக்கள் போன்ற விடயங்கள் இந்த நீலப்பசுமை விருதுக்காக மதிப்பிடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. "போரினால் பாதிப்படைந்து மீள்கட்டுமானப்பணிகள், ஆராய்ச்சிகள் மற்றும் சுற்றயல் சார்ந்த சகல விடயங்களிலும் துரித கதியில் முன்னேறி இந்த நிலையத்தில் பணியாற்றும் சகல தரப்பினரிதும் ஒத்துழைப்புடன் விருது பெற்றுக் கொள்ளப்பட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது. எமது நிலையத்தை சார்ந்த அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பங்களிப்பே இந்த உன்னத நிலையை எட்ட முடிந்துள்ளது" என விருதைப்பெற்றுக் கொண்ட அந்த நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி. சி.ஜே.அரசகேசரி தெரிவித்தார்.

(21-35)

### விவசாய, மீன்பிடி அமைச்சின் செயற்றிட்டங்களின்

# நிதி முகாமைத்துவம் பௌதிக வளங்களில் சிறந்த முன்னேற்றம்

யாழ்ப்பாணம்.ஒக்.21
வடக்கு மாகாணத்தில் விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளில் நிதிமுகாமைத்துவம், மற்றும் பௌதிகவளங்களின் முன்னேற்றம் சிறப்பாக உள்ளது என அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் நடப்பு வருடத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்றுவருவதால் அவற்றில் சிறப்பான நிதி முகாமைத்துவமும், பௌதிக முன்னேற்றமும் காணப்படுகின்றது. அமைச்சு மாற்றம் அடைவதற்கு முன்னர் நடப்பு வருடத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியாக 280 மில்லியன் ரூபா கிடைத்தது. இதில் 549 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம். வீதி அபிவிருத்திக்காக 38 செயற்திட்டங்களுக்கு 280 மில்லியன் ரூபாவும், கிராம அபிவிருத்திக்காக 392 செயற்திட்டங்களுக்கு 30 மில்லியன் ரூபாவும்,
மீன் பிடி அபிவிருத்திக்காக 96 செயற்திட்டங்களுக்கு 25 மில்லியன் ரூபாவும், போக்குவரத்து அபிவிருத்திக்காக 23 செயற்றிட்டங்களுக்கு 25 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

இவற்றில் தற்போது எமக்கு வழங்கப்பட்ட அமைச்சுக்குச் சொந்தமான செயற்றிட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதன் செயற்பாட்டின் முன்னேற்ற வீதம் 80ஆகக் காணப்படுகின்றது என்று அண்மையில் நடைபெற்ற அமைச்சு மட்டத் திட்டமிடல் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆகவே வேலைகள் சிறப்பாக நடைபெற்று நிறைவடையும் நிலையில் உள்ளதால் அதன் நிதி முகாமைத்துவம் மற்றும் பௌதிகத்தின் முன்னேற்றம் சிறப்பாக உள்ளது என்றார்.

(21-ரி)

# சமூக விடுதலைக்கு போராடிய நாம் சரீர விடுதலைக்கு போராடும் நிலை

## பல்கலை. சமூகத்தினரை உதவக் கோருகின்றனர் தமிழ் அரசியல் கைதிகள்

யாழ்ப்பாணம், ஒக்.21
சமூக விடுதலைக்காக சிலுவை சுமந்த நாம், இன்று சரீரவிடுதலைக்காகப் போராடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எம்மவர் சாதனைகளைச் சாலையேற்றிக் கதிரையேறிய கதாபாத்திரங்கள் கண்மூடிச் செயற்படும் இவ்வேளையில் கல்விப் புலத்தைக் கொண்டு பல்கலைக்கழக சமூகம் கண்கூர வேண்டும்.

இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கல்விச் சமூகத்துக்கு முகவரியிட்டு அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர். அதில் உள்ளதாவது;

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதச் சட்டம் என்பவற்றால் கைது செய்யப்பட்டு இலங்கையின் பல்வேறு சிறைக்கூடங்களிலும் நெடுங்காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளான நாம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகச் சமூகத்துக்கு அன்புரிமையுடன் வேண்டுகோள் ஒன்றை முன்வைக்கின்றோம்.

அன்றுமுதல் இன்றுவரை தமிழரின் வாழ்வுரிமைப் போராட்டங்களில் வரையறுத்துக் கூறமுடியாத பெரும் வகிபாகத்தை வழங்கும் பல்கலைக்கழகச் சமூகத்தினதும், சிவில் சமூகங்களினதும் காலமறிந்த செயற்பாடுகளே முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான தமிழர்களின் முதுகெலும்பாக இருக்கின்றன. அதைக் கண்டே இலங்கை ஆட்சியாளர்களும், தமிழினத்தின் வாக்கு வேட்டையாடிகளும் தமிழ் மக்களுக்குச் சிலதையேனும் செய்யத் தலைப்படுகின்றனர். அரசியலுக்கு அப்பாலான அகிம்சைக் குரல்களை அவ்வளவு இலகுவில் யாராலும் அடக்கி விடவோ, அலட்சியப்படுத்தி விடவோ முடியாது என்ற உண்மையின் அடிப்படையில் எங்கள் விடுதலைக்காக தடுப்புச் சிறை களில் இருந்து தாகம் கொள்கின்றோம்.

சிறைக் கூடங்களில் 130 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். எமது நெடுங்காலச் சிறையிருப்பு எமது குடும்பத்தினதும், பிள்ளைகளினதும் அன்றாடத்தை அழிவு நிலைக்குத் தள்ளிப் பல ஆண்டுகளாகின்றன. சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகள் அவர்களைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றன. உறவுகளின் எல்லையற்ற பிரிவு மனங்களை உருக்குலையச் செய்துள்ளது.

தமிழரின் அரசியல் விடுதலைக்கான 'போராட்டத்துடன் தொடர்புபட்டவர்கள்' என்ற காரணத்தைக் காட்டி சிறைவைக்கப்பட்டிருக்கும் நாம் 'போர்க் கைதிகள்' அல்லது 'அரசியல் கைதிகள்' என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

போர் முடிந்து 8 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் அரசு நல்லிணக்க அடிப்படையில் அரசியல்தீர்மானம் ஒன்றை எடுத்து, அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் ஒரு பொறிமுறை ஊடாக விடுவிக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

எமது இந்த நியாயமான கோரிக்கையைப் பலப்படுத்தி பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவரும் ஓரணியில் நின்று குரல் உயர்த்தி எமது விடுதலையை வலுப்படுத்த வேண்டும் என்று விநயமுடன் கோருகின்றோம். என்றுள்ளது.

(ர- 21)

### மாலைதீவு அரசால் விதிக்கப்பட்ட

# 15 ஆண்டுகள் சிறை தண்டனைக் காலம் நிறைவுற்ற மூவர் தொடர்பில் நடவடிக்கை

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் உறுதியளித்தார் என்றார் சாள்ஸ் எம்.பி

யாழ்ப்பாணம், ஒக்.21
மாலைதீவு அரசினால் விதிக்கப்பட்ட 15 ஆண்டுகள் சிறைத் தண்டனைக் காலம் முடிவடைந்தும் விடுவிக்கப்படாத முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமா அதிபர் நாடு திரும்பியவுடன் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பிரதி நீதியமைச்சர் தெரிவித்தார் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; மாலைதீவு அரசினால் 15 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை அரசிடம் வழங்கிய மூன்று அரசியல் கைதிகளின் தண்டனைக் காலம் நிறைவுற்றுள்ளது.

அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடந்த ஜூன் மாதம் குறித்த அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்தேன். கடந்த 2007ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி மாலைதீவுக் கடற் பிரதேசத்தில் வைத்து சந்தேகத்தின் அடிப்படையில் முல்லைத்தீவைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் மாலைதீவு அரசால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது அந்த நாட்டுப் பொலிசார் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர்.

நீதிமன்று மூவரையும் குற்றவாளிகள் எனவும் 15 ஆண்டுகால சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டது.

அத்துடன் கைதிகள் தண்டனையை இலங்கைச் சிறையில் அனுபவிக்கலாம் என்றும் தெரிவித்த மன்று அவர்களை இலங்கை அரசிடம் கையளிக்குமாறும் கோரியது. இதன்படி மாலைதீவு கடலில் கைது செய்யப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த மூவரையும் அந்த நாட்டு அரசு உத்தியோக பூர்வமாக இலங்கை அரசிடம் கையளித்தது. கைதிகள் மூவரும் இன்றுவரை இலங்கையின் சிறைகளிலேயே தண்டனையை அனுபவித்து வருகின்றனர். மாலைதீவு அரசினதும் இலங்கை அரசினதும் கணக்கின்படி ஓர் ஆண்டு சிறை தண்டனை என்பது தொடர்ச்சியாக அனுபவிப்பதாயின் 8 மாதங்களும் 10 நாள்களும் மட்டுமே ஆகும்.

எஞ்சிய நாள்கள் விடுமுறைக் கழிவாகவே கருதப்படுகின்றது. அதன்படி 2007ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையில் தொடர்ச்சியாக சிறையில் வாடும் குறித்த மூன்று இளைஞர்களினதும் 15 ஆண்டுகளுக்கான காலம் கடந்த மே மாதமே நிறைவு பெற்றுள்ளது. எனவே அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு குறித்த கைதிகளின் பெற்றோர் என்னிடம் கோரிக்கை விடுத்தனர்.

அந்தக் கோரிக்கையினை நான் எழுத்து மூலமாகக் கடந்த ஜூலை மாதம் 2ஆம் திகதி சிறைச்சாலைகள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன். அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் ஆகியோருடன் கலந்து பேசி விரைவில் பதிலளிப்பதாக அமைச்சர் அன்று தெரிவித்திருந்தார். ஆனால் மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்றுவரை குறித்த மூவரும் விடுதலை செய்யப்பட இல்லை. இது தொடர்பான எனது கோரிக்கைக்கு அமைச்சரிடம் இருந்து பதிலும் கிடைக்கவில்லை. இதை நேற்று முன்தினம் மீண்டும் சுட்டிக்காட்டினேன்.

இதன் போதே பிரதி நீதியமைச்சர் மேற்கண்டவாறு நேரடியாக பதிலளித்தார் என்றார்.

(21-101)

### சிறப்புத் தேவை உடையவர்களுக்கு

# மலசலகூடம் அமைக்க ரூபா 20 மில்லியன் தேவை

யாழ்ப்பாணம்.ஒக்.21
வடக்கு மாகாணத்தில் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான பாதுகாப்பான மலசலகூடம் அமைப்பதற்கு 20 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது என்று மகளீர் விவகார மற்றும் புனர் வாழ்வு அமைச்சு தெரி வித்துள்ளது.

"சிறப்புத் தேவையு டையவர்களுக்கான தேவைகள் நிறைவேற்ற வேண்டியது புனர் வாழ்வு அமைச்சின் கடமை, ஆனால் அதற்கான தனியான நிதி இல்லாத காரணத்தினால் அமைச்சுக்குக் கிடைக்கும் நிதியை தேவையின் நிமித்தம் புனர் வாழ்வுப் பிரிவுக்குப் பயன்ப டுத்தப்படுகின்றது. சிறப்புத் தேவை உடையவர்களுக்கு அவர்களின் வசதிக்கேற்ற மல சல கூடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்க்கு 20 மில்லி யன் ரூபா நிதி தேவை என்றது.

(21-ரி)

# வரவு செலவுத் திட்ட இறுதி அறிக்கை தயாரிப்பது தொடர்பான பயிற்சிப்பட்டறை

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் மேற்கொள்ளப்படவுள்ள 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட இறுதி அறிக்கை தயாரிக்கப்பட வுள்ளது. அந்த அறிக்கை தயாரிப்பது தொடர்பான நான்கு நாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக பயிற்சி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தால் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் ஒவ்வொரு சபையிலிருந்தும் நிதி முகாமைத்துவப் பிரிவில் நிதி விடயத்துக்குப்பொறுப்பான இரு அலுவலர்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (21-9)

# மக்கள் சேவையை முடக்கினால் அவர்கள் சட்டத்தைக் கையிலெடுப்பர்

## தொடருந்து ஊழியர் சங்கத்தை எச்சரிக்கிறார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஒக். 21

"மக்களுக்கான சேவையைத் தொடர்ந்து பாதிப்புறச் செய்தால் மக்களே சட்டத்தைக் கையில் எடுக்க நேரிடும். அது கடுமையான விளைவை ஏற்படுத்தும்" இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார். போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா.

தொடருந்துச் சேவையாளர்கள் இன்று(நேற்று) நள்ளிரவு தொடக்கம் ஆரம்பிக்கவுள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி தொடருந்து தொழிற்சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது. இந்தப் போராட்டத்தைத் தொடருந்து பொறியியல், சாரதிகள், பொறுப்பதிகாரிகள் ஒன்றிணைந்த தொழிற் சங்கமே போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முடிவெடுத் துள்ளது.

சம்பள கட்டமைப்பின் எம்.பி 1 மற்றும் 2 கட்டமைப்பில் திருத்தம் செய்து சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே இவர்களது கோரிக்கையாகும்.

அமைச்சின் செயலருடன் பேசியதுடன் தலைமை அமைச்சரின் செயலருடன் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் அடிப்படையில் தலைமை அமைச்சரின் செயலரின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்து, முகாமைத்துவ சேவைகள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பினாலும் அந்தக் கடிதத்தை ஆணைக்குழு நிராகரித்தது.

இந்தச் சம்பள அதிகரிப்பை தொடருந்துத் திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கினால் சுகாதார ஊழியர்களும் மறுதினம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பர். இதனை எம்மால் செயற்படுத்த முடியாது என்று கூறியுள்ளனர்.

தொழிற் சங்கங்களின் கோரிக்கை அநீதியாகும். இது தொழிற் சங்கங்களுக்கிடையிலான போராட்டமாகும். பாதிக்கப்படப்போவது என்னவோ மக்கள்தான். நாட்டு மக்களை மதித்துச் செயற்பட வேண்டும். மக்களுக்கான சேவைக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படக் கூடாது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட தொடருந்து ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக 17 மில்லியன் ரூபா இழப்பீடு ஏற்பட்டது. தொடருந்துத் திணைக்களம் ஆண்டு தோறும் 6 ஆயிரம் மில்லியன் ரூபா இழப்பில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

எனவே தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தை முன்னெடுத்து மக்களுக்கான சேவையை முடக்கக் கூடாது - என்றார். (5.31)



## தொல்பொருள்கள் அநுராதபுரத்தில் மீட்பு

கொழும்பு, ஒக். 21

அநுராதபுரத்தில் பெறுமதி மிக்க தொல்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. சிவப்பு நிறத்திலான களிமண் கோப்பையில் இருந்து பல்வேறு சின்னங்களைகொண்ட 325 நாணய குற்றிகள் மற்றும் ஆடைத் துண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டு ள்ளன. மத்திய கலாசார நிதியிலான திட்டத்தின் மூலம் இந்த அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. தொல்பொருள் தொடர்பில் ஆய்வு நடவடிக்கைககள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. (5)

நாகபூஷணி திருமணசேவை (நல்லூர்)
உள்நாட்டு. வெளிநாட்டு. அரச. தனியார்துறை. மணமக்கள் ஜாதகங்களை உடன் மிகப் பொருத்தமாகத் தரப்படும்.
021 222 9306, 077 138 7596

வீடு வளவு விற்பனைக்கு
பலாலி வீதியில், கோண்டாவிலில் 5 பரப்பில் வீடு வளவு விற்பனைக்குண்டு.
075 639 7886

## நிதி மோசடி முறைப்பாடு அதிகரிப்பு

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

நாட்டில் இடம்பெறும் நிதி மோசடிகள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். நிதி மோசடியில் ஈடுபடுவோரைச் சட்டத்தின் முன் நிறுத்தும் செயற்பாட்டைப் பலப்படுத்த சிறப்புக்



கட்டமைப் பொன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் போலி நாணயத் தாள்களின் புழக்கம் தொடர்பிலான முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன. சுற்றிவளைப்பதற்கான சிறப்புப் பிரிவில் பொலிஸ் அதிகாரிகளை இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும், நாடளாவிய ரீதியில் அதனை நிறுவவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (5)


நல்லூர்க் கந்தன் திருமண சேவை
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி T.P: 077 9733 183 021 221 6071

யாழ் நகரில் இயங்கும் முன்னணி
Food City ஆன
அன்னை நாகா பூட் சிற்றி
அசத்தலான பண்டிகைக்கால விசேட சலுகைகள்

23.10.2017 வரை மட்டும்
ரூ.5000/= இற்கும் மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும்.

அன்னை நாகா பூட் சிற்றி
175,K.K.S.Road. Jaffna. 021 739 0192, 021 739 0194
341, Pointpedro Road, Nallur. 021 221 7515

வேலைவாய்ப்பு
எமது கிளைகளான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் பணியாற்ற விற்பனைப் பிரதிநிதிகள் ( Sales Reps) தேவை.
தகைமைகள்:
✓ O/L, A/L பரீட்சைக்குத் தோற்றிய 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
✓ சாரதி அனுமதிப் பத்திரம் கட்டாயம் இருத்தல் வேண்டும்.
தகுதியானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
G H A De Silva & Company
No.64, Bazaar Street, Vavuniya.
077 296 0787, 024 222 2319

மணப்பெண் தேவை
அளவெட்டி, இந்து 1983, பூரட்டாதி, MSc, Australia, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. கொடிகாமம், இந்து, 1973, அவிட்டம்,Graduate, Australia, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. சாவகச்சேரி, இந்து 1985, திருவாதிரை, BSc, Australia, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. திருகோணமலை, இந்து 1981, திருவாதிரை, Software Engineer, Uk, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. Jaffna Town, இந்து, 1972, மகம்,A/L, UK, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. மாவிட்டபுரம், இந்து, 1987, பரணி, Doctor, UK, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
011 252 3127, 077 8297351 (Viber)

### பெயர் மாற்றம்

வராத்துப்பளை பருத்தித்துறை என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **தம்பிஜயா ஜெயதீசன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **தம்பிஜயா ஜெகதீசன்** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**தம்பிஜயா ஜெகதீசன்**

### புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ - து

### கூறுவிலை கோரல்

மேற்படி எமது சங்கத்திற்கு சொந்தமான வாகனங்களை விற்பனை செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

இதற்கான கூறுவிலைகளை **21.10.2017 தொடக்கம் 28.10.2017 ஆம் திகதிக்கிடையில் தலைவர்/ பொதுமுகாமையாளர் புங்குடுதீவு / நயினாதீவு பல.நோ.கூ.சங்கம் (வ-து), புங்குடுதீவு - 01** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

01. 42 - 3339 இலக்க லேடன் லொறி
02. 28 - 3039 இலக்க பவுசர்
03. பழைய இரும்புகள்
04. பழைய உடைந்த தளபாடங்கள்
05. பழுதடைந்த லான்ட் மாஸ்ரர் பெட்டி

**கூட்டுறவு சேவையிலுள்ள பொது முகாமையாளர்.**

# பத்தாண்டு காலத்தில் 25,624 பேர் விபத்துக்களில் சாவு!



கொழும்பு, ஒக். 21

கடந்த பத்தாண்டுக் காலத்தில் விபத்துக்களால் மாத்திரம் 25ஆயிரத்து 624 பேர் சாவடைந்துள்ளனர். போர்க் காலத்தில் கூட இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கவில்லை. இவ்வாறு போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் விபத்துக்கள் பெருமளவில் அதிகரித்துள்ளது.

2007ஆம் ஆண்டு 31 ஆயிரத்து 980 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 402 உயிரிழப்புகளும்.

2008ஆம் ஆண்டு 29 ஆயிரத்து 864 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 328 உயிரிழப்புகளும். 2009ஆம் ஆண்டு 33 ஆயிரத்து 904 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 413 உயிரிழப்புகளும், 2010ஆம் ஆண்டு 37 ஆயிரத்து 653 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 721 உயிரிழப்புகளும், 2011ஆம் ஆண்டு 40 ஆயிரத்து 250 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 677 உயிரிழப்புகளும், 2012ஆம் ஆண்டு 42 ஆயிரத்து 145 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 444 உயிரிழப்புகளும், 2013 ஆம் ஆண்டு 37 ஆயிரத்து 877 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 362 உயிரிழப்புகளும், 2014ஆம் ஆண்டு 35 ஆயிரத்து 969 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 440 உயிரிழப்புகளும், 2015ஆம் ஆண்டு 38 ஆயிரத்து 105 விபத்துக்களும் அதன் காரணமாக 2 ஆயிரத்து 817 உயிரிழப்புகளும், 2016ஆம் ஆண்டு 39 ஆயிரத்து 200 விபத்துக்களும் அதன் காரணமாக 3 ஆயி ரத்து 20 உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

(5,31)

## ஏ.எல். சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவது ஏற்றுக்கொள்ளவே முடியாது

### வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ஞானகாந்த தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

நாட்டில் 40 ஆயிரம் வேலையற்றபட்டதாரிகள் உள்ளனர். கல்விப் பொதுத்தராதர உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு அரசு முன்னெடுக்கும்வேலைத் திட்டம் அசாதாரணமான விடயம். இவ்வாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் வண. தென்னே ஞானகாந்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 5 ஆயிரம் நியமனங்களை உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு வழங்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை எமக்குப் பிரச்சினை அல்ல. நாட்டில் 40 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், உயர்தரம் சித்தியடைந்த வர்களுக்கு நியமனம் வழங்கி ஆசிரியர் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்கின்றமையே எமக்கான பெரிய பிரச்சினை.

> “ஆசிரியர் பற்றாக்க குறையை நிவர்த்தி செய்வதற்கு 5 ஆயிரம் நிய மனங்களை உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு வழங்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை எமக்குப் பிரச்சினை அல்ல.

உயர்தரம் சித்தியடைந்தவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் மற்றொரு அரசியல் வேலைத் திட்டம்தான் இது -என்றார்.

(5,31)

## வட மாகாணம் அமைதியாகவே இருக்கின்றது அச்சம் கொள்ளும் எந்த நகர்வும் அங்கில்லை

### உறுதியாகக் கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்



கொழும்பு, ஒக். 21

தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தும் எந்த நகர்வுகளும் வடக்கில் இடம்பெறவில்லை. அந்த மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. சிலர் தமது அரசியல் இருப்புக்காக வடக்குப் பற்றி பொய்யான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர். இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் கபில வைத்தியரத்ன தெரிவித்தார்.

கண்டி தலதா மாளிகையை வழிபட நேற்றுமுன்தினம் அவர் சென்றிருந்தார். வழிபாடுகளின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சகல தரப்பினருக்கும் ஒரே சட்டம்தான். வடக்கிற்கு ஒரு சட்டமும் தெற்கிற்கு வேறு சட்டமும் இல்லை. அப்படி இருக்கவும் முடியாது. சிலர் தமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள வெவ்வேறு கதைகளைக் கூறுகின்றனர்.

நாட்டின் சட்டத்தை ஒவ்வொருவரும் தமது விருப்பத்திற்கு மாற்றியமைக்க முடியாது. தவறு செய்தவர் ஒருவரைச் சலுகைகளின் அடிப்படையில் விடுவிக்க முடியாது. ஒவ்வொரு தனி நபர் மீதும் ஒரே மாதிரியான சட்டமே செயற்படுத்தப்படுகின்றது. அனைவரும் வெவ்வேறு விதத்தில் கருத்துக்களை கூற முடியும், ஆனால் நாம் அவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற தேவை இல்லை. யாருடைய தேவைக்காகவும் சட்டத்தினை மாற்றியமைக்க இடமளிக்கவும் இல்லை, இடமளிக்கப் போவதுமில்லை. வடக்கில் அமைதியின்மை, குழப்பகரமான சூழல் நிலவுவதாகவும் மீண்டும் போராட்டங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உருவாக்கப்படுவதாகக் கூறும் எந்தக் கருத்துக்களையும் மக்கள் நம்ப வேண்டிய அவசியம் இல்லை. இவை வெறும் புரளிகளாகும். வடக்கில் மக்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர். தேசிய பாதுகாப்பில் அச்சம் ஏற்படும் எந்த நகர்வுகளும் வடக்கில் நிகழவில்லை. பாதுகாப்புப் படைகள் பொதுமக்களுடன் இணைந்து வடக்கில் செயற்பட்டு வரும் நிலையில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி வருகின்றன - என்றார்.

(5,31)

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி மேரி கயசிந் பிலிப்புப்பிள்ளை- தி.கு



இளவாலை பத்தாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி கயசிந் பிலிப்புப்பிள்ளை நேற்று (20.10.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னாரது பூதவுடல் இன்று (21.10.2017) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ் திருக்குடும்ப மாகாண இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்**
**மாகாணத் தலைவி.**
**121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### பொன்னம்பலம் விநாசித்தம்பி

(ஓய்வு பெற்ற புகையிரத இலாகா கணக்குப் பரிசோதகர்)

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இல 364, டச்சுவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விநாசித்தம்பி 19.10.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் -முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் புனிதவதி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை) யின் அன்புக் கணவரும் கவிதா(லண்டன்), சயந்தன்(அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நரேந்திரன்(லண்டன்), தர்சிகா(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆதியன், வர்ணனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், வேலாயுதம், வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, கனகலிங்கம் மற்றும் திலகவதி(அமெரிக்கா), சண்முகதாஸ்(அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.364, டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0771623711**

### திருமதி பத்மாவதி பாலசுந்தரம்

(ஓய்வுபெற்ற உணவுப்பகுதி பொறுப்பாளர், தெல்லிப்பழை.
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை)



ஐயனார் வீதி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி பாலசுந்தரம் கடந்த 19.10.2017 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வமாணிக்கம் - சரஸ்வதி தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானை( கட்டுவன்) தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் (கிராம சேவையாளர் - ஊறணி) அன்பு மனைவியும், பாலாம்பிகை, பாலரஞ்சினி (கனடா), பால்றாஜினி (பதுளை), பாலரஞ்சன் (புத்தூர் - முகாமைத்துவ உதவியாளர், யாழ். மாநகரசபை),.பாலமனோகரி (சுவிஸ்), பத்மலோஜினி (கனடா), பாலராஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவபாலன் (சாரதி, பிரதேச செயலகம், பருத்தித்துறை), சுதாகரன் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (பதுளை மத்தியகல்லூரி), தெய்வரதி (ஆசிரியை - யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்), கனகராஜா (சுவிஸ்), ஜெயானந்தம் (கனடா), நிறோஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், தேவாம்பிகை, லக்சாயினி, மதுசா, சாயுகா, சாயின், சாயூரன், அட்சாஜினி, அம்சாஜினி, லக்சன், இலக்கியா, மதுமிதா, மயூரன், கார்த்திகா, கீர்த்திகா,பிரியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.11, ஐயனார் வீதி,**
**பருத்தித்துறை.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**021 226 0073**

**077 617 6720 (றஞ்சன்), 077 962 4452 (தேவன்)**

# ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் குழப்பவில்லை

## நாடாளுமன்றில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

அமைதியான ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் குழப்பவில்லை. ஆர்ப்பாட்டம் செய்தோர் குழப்பம் ஏற்படுத்தியதால் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தார்கள். இவ்வாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து 28பேர் கைது செய்யப்பட்டார்கள். ஊடகவியலாளர் அசந்தவும் அதில் உள்ளடக்கம். சம்பவத்தின்போது எடுக்கப்பட்ட காணொலிகள் பரிசீலிக்கப்படுகின்றன.

இவர்களுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவை மீறியமை, நீதிமன்றை அவமதித்தமை, பொலிஸாரது கடமைகளை நிறைவேற்ற இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இவர்களுக்கு எதிராக உள்ளது.

ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் குழப்பவில்லை. ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் குழப்பம் விளைவித்தனர்.

பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சட்டத்தரணி. அவர் எல்லாம் தெரிந்தே இதில் பங்கேற்றுள்ளார் - என்றார்.

'முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சி உள்பட சகல ஆட்சிகளிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆர்ப்பாட்டம் நடத்த இருந்த உரிமை பாதுகாக்கப்பட்டது. எவரும் கைது செய்யப்படவில்லை.

தற்போது எந்த நிமிடம் எந்த நாடாளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்படுவார் என்று அஞ்சவேண்டியுள்ளது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டார்.

'ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை. 4 இடங்களுக்குள் நுழையவே தடை விதிக்கப்பட்டிருந்தது' என்று மகிந்த அணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

'இது நீதிமன்ற விடயம். நாம் தலையிட முடியாது. இருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர தொடர்பில் பொலிஸ்மா அதிபருடன் பேசினேன். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சபாநாயகர் கரு ஜயசூரிய குறிப்பிட்டார். (5.31)

---

அமரர் செல்வி ஆரபி ஆறுமுகம்
அவர்களின்
45 ஆம் நாள் நினைவுப் பகிர்வும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அமரர் செல்வி ஆரபி ஆறுமுகம் (கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் மின் பொறியியல் இறுதியாண்டு மாணவியும், இலங்கை ரூபவாகினி கூட்டுத் தாபனத்தின் பொறியியல் பிரிவுப் பயிற்சியாளரும்) அவர்களின் 45 ஆம் நாள் நினைவுப் பகிர்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிதொடக்கம் கொக்குவில் மஞ்சவனப்பதி அருமிகு முருகன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

---

முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு



தோற்றம்
06 . 03 . 1952

மறைவு
03 . 10 . 2016

அமரர் திருநாவுக்கரசு ஆறுமுகநாதன்
திதி: துதியை

கடந்த 03.10.2016 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தின் குலவிளக்கு
அமரர் திருநாவுக்கரசு ஆறுமுகநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வந்து கிரியைகளிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

"அனுவிந்தன் இல்லம்"
புலோலி மத்தி, பாருத்தித்துறை

குடும்பத்தினர்.

---

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லையா
ஜெயசேகரம்
[ஓய்வுபெற்ற தபாலதிபர்]



தோற்றம்
10.03.1948

மறைவு
13.11.2015

திதி : 21.10.2017
வளர்பிறை

ஆண்டிரண்டு போயினும் என்றும் அழியா நினைவுகளுடன்
தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

பெரியறாவாடி, கொடிகாமம்.

மனைவி, மகன்

---

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா
இராசேந்திரம்
(ஓய்வுபெற்ற பிஸ்கால்
உத்தியோகஸ்தர்)

தோற்றம்
27.07.1941

மறைவு
01.11.2016

பண்பின் சிகராமய் பாசத்தின் உறைவிடமாய்
எமக்கு வழிகாட்டியாய் வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்ந்திக்கின்றோம்.

கலைமாமணி வீதி,
கட்டைப்பிராய்.

குடும்பத்தினர்.

---

முதலாம் ஆண்டுத் திவசம்



அமரர் தேவாம்பிகை சிவக்கொழுந்து

தோற்றம்
01.08.1938

மறைவு
01.11.2016

திதி: பூர்வபக்க துதியை - 21.10.2017

ஆண்டு ஒன்று ஆனதே
பாசமிகு அன்னையே இப்பூமியில்
நீங்கள் இல்லையானாலும் உங்கள்
நினைவில் பிள்ளைகள் நாம் வாடி
நிற்கின்றோம் அம்மா
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"சிவதேவி இல்லம்"
உடுப்பிட்டி
021 226 4734

குடும்பத்தினர்.

---

31 ஆம் நாள் நினைவும் சபிண்டீகரண அழைப்பும்

கடந்த 22.09.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புத் தாயார்

திருமதி மகேஸ்வரி கேசவன்

(ஓய்வுநிலை ஆசிரியை - யா/மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்)



அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் நாளை(22.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினை தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

குடும்பத்தினர்.
**கேசவன் சயந்தன்** (சட்டத்தரணி, வடக்கு மாகாணசபை உறுப்பினர்)
**கேசவன் பிரதீபன்** (முகாமையாளர், இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம், சாவகச்சேரி)

**A9 வீதி 299, ஆம் மைக்கல் அருகில் புத்தூர்ச்சந்தி, மீசாலை வடக்கு, மீசாலை**

# 15 நிறுவனங்களின் கோப் அறிக்கை சமர்ப்பிப்பு

15 அரச நிறுவனங்களில் நடைபெற்ற ஊழல்கள், இழப்புக்கள், மோசடிகள், தவறான கையாடல்கள் என்பவற்றுக்கான சான்றுகளை உள்ளடக்கிய கோப் குழு அறிக்கை நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சமர்ப் பிக்கப்பட்டது.

கோப் குழுவின் தலைவரான மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி இதனைச் சமர்ப்பித்தார்.

அவர் அதனைச் சமர்ப்பித்துத் தெரிவித்த தாவது:

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கோப் குழுவின் முன்னிலைக்கு அழைக்கப்பட்ட 15 நிறுவனங்களில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை அறிக்கை உள்ளடக்கி யுள்ளது.

அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து விசாரணைகளுக்கும் கணக் காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுக் கேள்விகளூடாக உறுதிப் படுத்தப்பட்ட ஆதாரங்கள் உள்ளன.

அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படும் விடயங்களைச் சீர் செய்வதற்கு தலைமைக் கணக்கியல் அதிகாரிகள் என்ற வகையில் அமைச்சின் செயலர்கள் தீவிரமாக கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும். அவ்வாறு செயற்படவில்லை என்றால் இந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் எவ்வித அர்த்தமும் கிடையாது - என்றார். (5,31)


## 10ஆம் ஆண்டு நினைவு மலர்

அன்னை மடியில்
20 . 07 . 1982

ஆண்டவன் பிடியில்
11 . 11 . 2007



### அமரர் பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா)

பாசத்தின் பிறப்பிடமே எங்கள் ஜெயா!
பக்கத்தில் நீயிருப்பாய் என நினைக்கையில்
பத்தாண்டுகள் பறந்தோடி விட்டதையா!
பத்துமாதம் சுமந்தவள் பரிதவிக்க
பாசப் பிறப்புக்கள் பரிதவிக்க
பாதியினில் விட்டு நீ பறந்தோடினாயே
பக்கத்தில் நீயிருந்து பார்க்கும் செயல் எல்லாம்
பாரினில் இருந்து செய்கிறாயே ஜெயா
தம்பி தம்பியெனத் துடிக்கும் ஜெயாவே
தம்பிக்கு மகனாக வந்துதித்தாய் ஜெயாவே!
பத்தாண்டுகள் அனாதையாய் ஆனால்
பக்கத்தில் தான் நீயிருக்கின்றாய் ஜெயா!
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திதி:- துதியை
21.10.2017



தாவளை, இயற்றாலை,
கொடிகாமம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 21.09.2017 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

### திருமதி கமலவேணி யோகநாதன்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (21.10.2017) சனிக்கிழமை நடைபெற்று அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த் தினையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.



இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



யாழ். காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கு,
வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

### சரோஜினிதேவி சிவஸ்கந்தா

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் -
இலங்கை தொலைத்தொடர்பு திணைக்களம்)



மலர்வு
14.09.1941

உதிர்வு
28.10.2011

திதி: 21.10.2017

ஆறு ஆண்டானாலும்
ஆறு நூறு ஆண்டானாலும்
ஆருயிர் அம்மாவை மறந்திடுவோமா
ஆறவில்லை மனம் ஆற்ற முடியவில்லை
ஆர்ப்பரித்த கடலும் அடங்கிப் போனதுவே
ஆலமரம் சாய்ந்து வீழ்ந்ததுவே
ஆறு மக்களைப் பெற்றீர்
ஆறுமுகன் விரதநாளில்
ஆறுபடை வீடு சேர்ந்து விட்டீர்
ஆறு கடல் தாண்டி வந்தோம்
ஆனாலும் ஆழ்மனது துடிக்கிறது
ஆதரவாய் இருப்பீரென்றிருந்தோம்
ஆதி பகவனடி சேர்ந்து விட்டீர்
தேய்ந்து நாம் போகாமல் தேற்றி விட்ட
தேயாத சந்திரன் அம்மா
ஓய்ந்து போகாமல் எமக்காய் உழைத்த
ஓயாத அலைகள் அம்மா
சாய்ந்து கொள்ள எமக்கு தோள்தந்த
சாயாத கோபுரம் அம்மா
பாய்ந்து நாம் போனபோதும் கரைசேர்த்த
பாய்மரக் கப்பல் அம்மா
ஆய்ந்து எமக்கு அறிவுரை சொன்ன
ஆய கலைகள் அம்மா
தூய தமிழ் சொல்லத் தூக்கிவிட்ட
தூயவள் அம்மா
தேடித் தேடி பார்க்கின்றோம்
ஓடி வந்து விடு அம்மா.........

குடும்பத்தினர்.



## பழைமையான மரம் முறிந்ததால் போக்குவரத்துக்கு இடையூறு

கொழும்பு.ஒக்.21
கொழும்பில் பழைமை வாய்ந்த மரம் முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
கொழும்பு பிரதான வீதியோரமாகக் காணப்பட்ட சுமார் 200 வருடங்கள் பழமையான மரம் காற்றுடன் கூடிய மழையால் நேற்றுமுறிந்து வீழ்ந்தது.
இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. அதேவேளை, கொழும்பு தும்முல்லை சந்தி உள்ளிட்ட பல இடங்களில் காலை நேரத்தில் வீதியில் நிரம்பியிருந்த வெள்ள நீர் காரணமாகவும் வாகனச் சாரதிகள் போக்குவரத்துச் சிக்கல் களை எதிர்கொள்ள நேரிட்டிருந்தது. (ற-ரி4)

## மகாநாயக்க தேரர்களின் முடிவு திரும்பப் பெற முடியாதது

### நிமல் சோமவங்ச தெரிவிப்பு

கொழும்பு.ஒக்.21
உத்தேச புதிய அரசமைப்புச் சட்டம் தொடர்பாக மகாநாயக்க தேரர்கள் வழங்கிய முடிவு மீண்டும் திரும்பபெற முடியாத ஒன்று. அரசின் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளரான நிமல் சோமவங்ச தெரிவித்தார்.
தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மல்வத்து மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களின் சங்க சபைகள் அரசமைப்புத் திருத்தமோ அல்லது புதிய அரசமைப்புச் சட்டமே நாட்டுக்குத் தேவையில்லை எனக் கூறியுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-ரி5)

## அரசியல் கைதிகளின் வழக்கு வவுனியாவுக்கு மீள மாறலாம்

### அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21
உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளுக்கமைவாக அவர்களின் வழக்குகளை மீண்டும் வவுனியாவுக்கு மாற்றுவதற்குச் சந்தர்ப்பம் உள்ளது. சட்டமா அதிபர் நாட்டுக்கு வந்ததும் இந்த விடயத்தில் நிச்சயம் ஒரு சாதகமான நிலை ஏற்படும் இவ்வாறு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.



ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் யாழ். காரைநகர் சிவன்கோவிலின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சிவன்கோவிலின் மூன்று குருக்கள் மற்றும் மூன்று வித்துவான்கள் உள்ளிட்ட ஆறு குடும்பத்தினருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. மீள்குடியேற்ற அமைச்சு பதினொரு மில்லியன் ரூபாவை அதற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த வீடுகள் யாழ். மாவட்ட இராணுவத்தினரைப் பயன்படுத்தி அமைக்கப்படவுள்ளன என்று தெரிவித்தார்.
வடகடல் நிறுவனத்தின் தலைவர் தியாகராசா பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராட்சி, யாழ். மாவட்ட காணி மேலதிக அரச அதிபர் எஸ். [illegible] உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர். (ற-ரி5)

# மைத்திரி ஆட்சியிலும் முஸ்லிம்கள் மீதான இனவெறுப்பு பரப்புரை நிறுத்தப்படவில்லை

### அமைச்சர்களான ஹக்கீம், ரிசாத் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரிடம் எடுத்துரைப்பு

கொழும்பு. ஒக். 21
முஸ்லிம் சமூகத்தைக் குறிவைத்து அண்மைக் காலங்களில் இனவாதப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவதுடன், அவர்கள் கொச்சைப்படுத்தப்பட்டு தூசிக்கப்பட்டு வருகின்றனர். இந்தச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஐ.நா. காத்திரமான பணிகளை முன்னெடுத்து இன ஐக்கியம் வலுப்பெற உதவவேண்டும் இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ கிரிப்பிடம் வேண்டுகோள் விடுத்தார்.
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாத் பதியுதீன் இருவரும் தனித் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.
முஸ்லிம் சமூகத்தின் வேணவாக்கள், பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் இருவரும் தனித் தனியான அறிக்கையையும் சமர்ப்பித்தனர்.
ஐ.நா. சபையின் நிலைமாறு கால நீதி தொடர்பான அறிக்கையில் இலங்கை முஸ்லிம்களுடைய கரிசனைகள், வகிபாகம் என்பன தொடர்பில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்து ஹக்கீம் சந்திப்பில் எடுத்துரைத்தார்.
போரின் போது முஸ்லிம் சமூகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், வடக்கு கிழக்கு காணி ஆக்கிரமிப்பு, இனவாதிகளால் முஸ்லிம்களை வெறுப் பேற்றும் பரப்புரை உள்ளிட்ட விடயங்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அமைச்சர் ரிசாத் பதியுதீன் சந்திப்பின் போது, முஸ்லிம்கள் இந்த அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் கவலையடைகின்றனர். போர்க் கால இழப்பீடுகள் வழங்கப்படவில்லை, முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் முழுமையடைய வில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.
புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கை புறக்கணிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
முஸ்லிம்களின் சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப அவர்களுக்கு உரிய இடம் எல்லா விடயங்களிலும் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (5,31)





## 3,626 பேருக்கு ஆசிரியர் நியமனம்

கொழும்பு.ஒக்.21
இலங்கையில் 19 கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறிய 3 ஆயிரத்து 626 பேருக்கான ஆசிரியர் நியமனங்கள் நேற்று அலரிமாளிகையில் வழங்கப்பட்டன.
ஆயிரத்து 78 தமிழ் ஆசிரியர்களுக்கான நியமனங்களும் வழங்கப்பட்டன.
இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி, இராதாகிருஸ்ணன் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டி ஆராச்சி, கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதான உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ற-ரி4)

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.21
இலங்கைக் கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 10 இந்திய மீனவர்களுக்கான விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.
விளக்கமறியலில் வைக்கப்பட்ட 10 இந்திய மீனவர்கள் நேற்று இரண்டாவது தடவையாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதிவான் எம்.எம். ரியால் மீனவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
கடந்த 8 ஆம் திகதி காரைக்காலில் இருந்து மீன்பிடிக்க வந்த 10 இந்திய மீனவர்களே இலங்கையின் நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததையடுத்து இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். (ற-ரி4)

## அரசதலைவரை சந்தித்தது சாரணர் குழு

கொழும்பு.ஒக்.21
ஹர்மன் லூஸ் வெற்றிக் கிண்ண முகாமை பார்வையிடுவதற்காக வந்துள்ள ஐந்து சார்க் நாடுகளின் தேசிய சாரணர் குழு நேற்று அரசதலைவர் மாளிகையில் அரசதலைவரைச் சந்தித்தனர்.
பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி சாரணர் குழுக்களும் அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.
ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்பான உயர் அதிகாரிகளுக்கு அரசதலைவர் அன்பளிப்புகளை வழங்கினார். அந்த அதிகாரிகளும் அரசதலைவருக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கினர். (ற-ரி4)

## ரோஹிங்ய ஏதிலிகள் விவகாரம்: ரத்னசார தேரர் கைது

கொழும்பு.ஒக்.21
தலைமறைவாகியிருந்த சிங்கள ஜாதிக்க பலவேகவின் செயலாளர் அரம்பேபொல ரத்னசார தேரர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
கல்கிஸ்ஸ பிரதேசத்தில் மியன்மார் ரோஹிங்ய ஏதிலிகள் தங்கவைக்கப்பட்ட இடத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் போராட்டம் நடத்தியமைக்காக அரம்பேபொல ரத்னசார தேரர் தேடப்பட்டு வந்தார். நிட்டம்புவ பகுதியில் வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் [illegible] வருகின்றனா என்று தெரிவிக்கப்பட்டது. (ற.ரி5)



## சவூதி - ஈராக் இடையே மீண்டும் உறவு

ரியாத், ஒக். 21
சவுதி அரேபியாவின் பிளைனாஸ் வானூர்தி சேவை நிறுவனம், 27 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக ஈராக்கிற்கு நேரடி வானூர்தி சேவையை வழங்கி உள்ளது. ஈராக் அதிபர் சதாம் உசைன் 1990ஆம் ஆண்டு குவைத் மீது படையெடுத்ததைத் தொடர்ந்து ஈராக்குடனான வானூர்திச் சேவைகளை சவுதி அரேபியா நிறுத்தியது.
தற்போது அரபு பிராந்தியத்தில் ஈரானின் செல்வாக்கு அதிகரித்து வருவதைத் தடுக்கும் நோக்கில், ஈராக்குடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ள சவுதி அரேபியா விரும்புகிறது. இதற்கான முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருநாட்டு உறவும் துளிர் விடத் தொடங்கியதை பிரதிபலிக்கும் வகையில் சவுதி அரேபியாவின் பிளைனாஸ் வானூர்தி சேவை நிறுவனம் ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு நேரடி வானூர்தி சேவையை தொடங்கி உள்ளது. (ம)

# அமெரிக்கா தாக்கினால் திருப்பித் தாக்குவே

வொஷிங்டன், ஒக். 21
"வடகொரியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அணுவாயுதங்களால் திரும்பத் தாக்குவோம்" என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான வடகொரியத் துணைத்தூதுவர் கிம் இன்ரியாங் தெரிவித்தார்.
"1970ஆம் ஆண்டுகளில் இருந்து வடகொரியா மீது மட்டுமே அமெரிக்கா நேரடியாக அணு ஆயுதத் தாக்குதல் தொடர்பாக மிரட்டல் விடுத்து வருகிறது. நாட்டின் பாதுகாப்புக்காகவே வடகொரியா அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துள்ளது. ஆண்டுதோறும் நாங்கள் (வட கொரியா) அணு ஆயுதங்கள் மூலம் இராணுவப் பயிற்சி மேற்கொள்கிறோம்.
ஆனால் அமெரிக்கா தெரிவிப்பது போன்று எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை. எங்களின் சக்தி வாய்ந்த தலைவரை (கிம் ஜாங் உன்) அகற்ற அமெரிக்கா இரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அமெரிக்காவின் முக்கிய பகுதி வடகொரியாவின் ஏவுகணைகளது கண்காணிப்பில் உள்ளது.
மதிப்பிற்குரிய புனிதமான எங்கள் நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் எங்களது கடுமையான தாக்குதலில் இருந்து அமெரிக்கா தப்பிக்க முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

6
எங்க
தலை
அகற்
நடவ
வருக்
முக்கி
வின்
கண்



இந்தோனேசியாவின் யாவா மாகாணத்தில் பிரசித்தி பெற்ற 'நாய் - பன்றிச் சண்டைப் போட்டி (பேங்கொங் சண்டை) நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தச் சண்டையை நேரில் பார்த்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## ஜப்பானில் நில அதிர்வு

டோக்கியோ, ஒக். 21
ஜப்பானில் நேற்றுமுன்தினம் 6.1ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.
ஜப்பானின் தெற்கு பகுதியில் உள்ள கியூத் தீவில் இருந்து சுமார் 682 கிலோ மீற்றர் தொலைவில் பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனினும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட வில்லை. (ம)

# நரகத்தில் வாழ்கின்றனர் ரொஹிங்யச் சிறுவர்கள்

## யுனிசெப் கவலை



நியூயோர்க், ஒக். 21
பங்களாதேஷில் உள்ள அகதிகள் முகாமில் உள்ள ரொஹிங்யச் சிறுவர்கள் அனைவரும் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் வாழ்கின்றனர் என்று யுனிசெப் அமைப்பு கவலை தெரிவித்தது.
பௌத்த நாடான மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது.
கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதையடுத்து மியன்மாரில் அப்பாவி ரொஹிங்ய இஸ்லாமியர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். இதனால் 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷிக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர். அவர்களில் சுமார் 3 லட்சம் பேர் சிறுவர்கள். இவர்கள் அனைவரும் சிறந்த உணவு இல்லாமல் ஊட்டச்சத்து இன்மையை எதிர்கொண்டுள்ளனர் என்று கவலை தெரிவித்தது யுனிசெப். இது தொடர்பில் யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் "முகாம்களில் உள்ள சிறுவர்கள் அனைவருமே ஊட்டச்சத்து இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அகதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீர், உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவிகள் செய்யப்படவேண்டும். சுத்தமான குடிதண்ணீர் குடிக்காவிட் டால் கொலரா போன்ற நோயால் பாதிக்கப்படுவர். சிறுவர்களுக்கு எவ்வித உதவியும் கிடைப்பதில்லை. அவர்கள் இந்த இடத்தை நரகமாகக் கருதுகின்றனர். அவர்களை பாதுகாக்கும் பணியில் யுனிசெப் அமைப்பானது ஈடுபட்டுள்ளது. ரொஹிங்ய அகதிகளுக்கு உதவி செய்வதற்கு ஐ.நா. 434 மில்லியன் டொலர் நிதி திரட்டி வருகிறது. அதில் ஆறில் ஒரு பங்கு அங்குள்ள சிறுவர்களுக்காகப் பயன்படுத்தப்படும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# பேச்
# வே

## வடகொரிய வி

மொஸ்கோ, ஒக். 21
கொரியத் தீபகற்பத்தில் பதற்ற நிலை
நாளுக்குநாள் அதிகரித்துவரு
நிலையில் "இந்த விவகாரத்தில் பே
சின் மூலம் தீர்வு காணப்பட வே
டும்" என்று வலியுறுத்தியுள்ள
ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்.
பன்னாட்டு சட்டதிட்டங்களையும், வ
முறைகளையும் மீறி தொடர்
ஆயுத மற்றும் அணுவாயுதச் சே
னைகளை மேற்கொண்டு வருகிற
வடகொரியா. கடந்த மாதத்தின்
திய பகுதியில் அந்த நாடு கண்ட
விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை
சோதனையையும், அணுகுண்
விடவும் சக்தி வாய்ந்த ஐதரசன் சே
னையையும் நடத்தியது. இந்
சோதனைகள் ஜப்பான், தென்
ரியா, அமெரிக்கா ஆகியவற்று
எதிரானவை என்று வடகொரியா
ரங்கமாக எச்சரித்ததை அடுத்
அமெரிக்காவும், ஜப்பானும், தெ
கொரியாவும் இணைந்து அவ்
போது கூட்டுப் போர்ப் பயிற்சிகள

## சந்திரனில் மிகப்

ஜப்பானின் 'செலீன்' விண்கலம் சந்திர
அது எடுத்து அனுப்பிய ஒளிப்படங்கள்
குகை இருப்பதை ஜப்பான் விஞ்ஞான
சந்திரனுக்கு முதன் முதலாக அமெ
சரித்திர சாதனை படைத்தது. அதை
ரஷியா உள்ளிட்ட நாடுகள் சந்திரனில்
போது ஜப்பானின் 'செலீன்' விண்கல
வருகிறது. அது எடுத்து அனுப்பிய ஒ
மிகப்பெரிய குகை இருப்பதை ஜப்பா
துள்ளனர். இந்தக்குகை சுமார் 50 கி
மீற்றர் அகலமும் உடையது என்று க





# மீண்டும் சந்திக்கத் தயாரா?; ஹிலாரியிடம் ட்ரம்

வொஷிங்டன், ஒக். 21
2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிடுவதற்குத் தயாரா என்று ஹிலாரி கிளிங்டனிடம் கேள்வி எழுப்பியுள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
கடந்த வருடம் இறுதியில் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பாக ட்ரம்ப் போட்டியிட்டார். ஜனநாயகக் கட்சியின் சார்பாக ஹிலாரி கிளிங்டன் போட்டியிட்டார்.
முன்னாள் அதிபர் ஒபாமாவும் ஜனநாயகக் கட்சியைச் சார்ந்தவர். ஒபாமாவுக்கு இருந்த ஆதரவு அலை ஹிலாரிக்கும் இருக்கும் என்பதால் ஹிலாரியின் மீது பெரியளயவில் எதிர்பார்ப்புக்கள் இருந்தன. எனினும் எவரும் எதிர்பாரா வகையில் ட்ரம்ப் வெற்றிபெற்றார். 2020ஆம் ஆண்டு தேர்தலுக்கான ஆயத்தங்களுக்கு தற்போதே அமெரிக்கா தயாராகி வருகிறது.
குடியரசுக் கட்சியின் வேட்பாளராக அடுத்த தேர்தலி

# குவோம் என்கிறது வடகொரியா

"

எங்களின் சக்தி வாய்ந்த தலைவரை (கிம் ஜாங் உன்) அகற்ற அமெரிக்கா இரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அமெரிக்காவின் முக்கிய பகுதி வடகொரியாவின் ஏவுகணைகளது கண்காணிப்பில் உள்ளது.



# பச்சின் மூலம்
# வண்டும் தீர்வு

## ரிய விவகாரத்தில் புடின் அழுத்தம் திருத்தம்



ல் பதற்ற நிலமை
திகரித்துவரும்
வகாரத்தில் பேச்
ணப்பட வேண்
புறுத்தியுள்ளார்
மிர் புடின்.
ங்களையும், விதி
மீறி தொடர்ந்து
துவாயுதச் சோத
ாண்டு வருகிறது
மாதத்தின் மத்
நாடு கண்டம்
யும் ஏவுகணைச்
அணுகுண்டை
த ஐதரசன் சோத
த்தியது. இந்தச்
ான், தென்கொ
ஆகியவற்றுக்கு
வடகொரியா பகி
ததை அடுத்து,
ப்பானும், தென்
ணந்து அவ்வப்
ப் பயிற்சிகளை

நடத்தி வருகின்றன. இதனால் கொரியத் தீபகற்பத்தில் நாளுக்குநாள் பதற்றம் நீடித்துவரும் நிலையில் இவ்வாறு எச்சரித்துள்ளார் புடின்.

"வடகொரியாவின் அணுஆயுத சோதனைகளுக்கு எனது கண்டனத்தைத் தெரிவிக்கிறேன். ஆனால் இந்த பிரச்சனையில் பேச்சின்மூலம் மட்டுமே தீர்வு காண வேண்டும். அப்படி இல்லாமல் வடகொரியாவை ஓரங்கட்டியோ, அந்த நாட்டின் மீது அதிக அழுத்தம் கொடுத்தோ அதைத் தீர்க்க முடியாது" என புடின் மேலும் தெரிவித்தார். (ம)


# முதலாவது குண்டு வீசப்படும் வரை வடகொரியாவுடன் பேச்சு தொடரும்

வொஷிங்டன், ஒக். 20

"முதல் குண்டு வீசப்படும்வரை வடகொரியாவுடன் பேச்சு தொடரும்" என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தடையை மீறித் தொடர்ந்து அணுஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது வடகொரியா.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22 ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில் நடத்தப்பட்டன. இந்த விவகாரத்தில் வடகொரியாவுடன் தொடர்ந்து பேச்சு நடத்திப் பயனில்லை என்று ட்ரம்ப் தெரிவித்திருந்த நிலையில் முதலாவது குண்டு வீசப்படும்வரை பேச்சுத் தொடரும் என்று தெரிவித்தார் டில்லர்சன்.



"நான் ஒன்றை தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பேச்சின் மூலம் வடகொரியாவுடனான பிரச்சினையைத் தீர்க்க நினைக்கிறார். அவர் போரை விரும்பவில்லை. முதல் குண்டு வீசப்படும் வரை வடகொரியாவுடனான அரசியல் ரீதியான பேச்சுத் தொடரும்" என்றார். (ம)



# நியூசிலாந்தில் ஆட்சி மாற்றம்

வெலிங்டன், ஒக். 21

நியூசிலாந்தில் தொழிலாளர் கட்சி தலைமையில் கூட்டணி ஆட்சி அமைய உள்ளது. இதன்மூலம் கடந்த 10 ஆண்டுகளாக நீடித்த தேசிய கட்சியின் ஆட்சி முடிவுக்கு வருகிறது. நியூசிலாந்தில் கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் தொங்கு நாடாளுமன்றம் அமைய உள்ளது. ஆளும் தேசிய கட்சி 56 இடங்களிலும், தொழிலாளர் கட்சி 46 இடங்களிலும் வெற்றி பெற்றன. சிறிய கட்சிகளான நியூசிலாந்து பர்ஸ்ட் கட்சி 9 இடங்களிலும், பசுமைக்கட்சி 8 இடங்களிலும் வெற்றிபெற்றன. ஆட்சியமைக்க 61 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், நியூசிலாந்து பர்ஸ்ட் கட்சி, தொழிலாளர் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாக முடிவெடுத்தது. பசுமைக்கட்சியும் தொழிலாளர் கட்சிக்கே ஆதரவளிக்க முன்வந்தது. இதன்மூலம் தேசியகட்சியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து கூட்டணி ஆட்சியை அமைக்கிறது தொழிலாளர் கட்சி. (ம)

## ல் மிகப்பெரிய குகை

விண்கலம் சந்திரனில் ஆய்வு நடத்தி வருகிறது.
ஒளிப்படங்கள் மூலம் சந்திரனில் மிகப்பெரிய
பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
தலாக அமெரிக்கா மனிதர்களை அனுப்பி
டத்தது. அதைத் தொடர்ந்து இந்தியா, சீனா,
கள் சந்திரனில் ஆய்வு மேற்கொண்டன. தற்
சலீன்' விண்கலம் சந்திரனில் ஆய்வு நடத்தி
அனுப்பிய ஒளிப்படங்கள் மூலம் சந்திரனில்
நப்பதை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்
க சுமார் 50 கிலோமீற்றர் நீளமும் 100 கிலோ
டயது என்று கணிக்கப்பட்டுள்ளது. (ம)

## ம் ட்ரம்ப் கேள்வி

ாரா வகை
வற்றிபெற
ம் ஆண்டு
ன ஆயத்
தற்போதே
பாராகிவரு

யின் வேட்
த தேர்தலி

லும் ட்ரம்ப்பே போட்டியிடவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.

இந்த நிலையில் அடுத்த தேர்தலில் தன்னை மீண்டும் சந்திக்கத் தயாரா என்று ஹிலாரியிடம் கேள்வி எழுப்பியுள்ளார் ட்ரம்ப். (ம)

### அமெரிக்க அதிபர் ட்ரம்பின்

# 6 நாடுகள் மீதான தடைக்கு தடை விதித்தது நீதிமன்றம்



வொஷிங்டன், ஒக். 21

ஆறு இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு ட்ரம்ப் விதித்த தடைக்குத் தடை விதித்தது அந்த நாட்டு உச்ச நீதிமன்றம்.

அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய 6 நாடுகளைச்சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடைவிதித்து உத்தரவு பிறப்பித்தார் ட்ரம்ப். ஆனால் இந்த முடிவு முட்டாள் தனமானது என்று தெரிவித்து அமெரிக்காவின் மாகாண நீதிமன்றங்கள் அதை இல்லாது செய்தன. தனது உத்தரவு நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அவசியமானது என்று தெரிவித்த ட்ரம்ப் நீதிமன்றங்களின் தடையை எதிர்த்து மேன்முறையிடு செய்தார்

வழக்கை விசாரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம் ஏகப்பட்ட நிபந்தனைகள் மற்றும் மாற்றங்களுடன் ட்ரம்பின் முடிவை, அதாவது மேற்குறிப்பிட்ட ஆறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதித்து தீர்ப்பிட்டது.

ட்ரம்ப் தனது உத்தரவில் ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய 6 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய வேண்டுமாயின் அவர்களின் தாய், தந்தை, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், வருங்கால கணவன் அல்லது மனைவி ஆகியோர் அமெரிக்காவுக்குள் வசித்தால் மட்டுமே சாத்தியம் என்று தெரிவித்திருந்தார். இந்த தடை உத்தரவு நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தநிலையில்ட்ரம்பின் முடிவை எதிர்த்து ஹவாய் மாகாண அரசு வழக்குத் தொடர்ந்தது.

6 முஸ்லிம் நாடுகளில் இருந்தும், 15 கோடி பேர் அமெரிக்காவுக்கு வருவதால், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக்கு தீங்கு ஏற்படும் என்பதற்கு அடிப்படை ஆதாரம் இல்லை. முஸ்லிம்களை குறிவைப்பது, மத சுதந்திரத்தை பாதுகாக்கும் அமெரிக்க அரசியல் அமைப்பு சட்ட விதிகளை மீறுகிற செயல் என்று ஹவாய் மாகாண அரசு வாதிட்டது. இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து ட்ரம்பின் உத்தரவுக்கு தடை விதிக்கப்பட்டது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நிதியை வீணடிக்காமல் முறையாக பயன்படுத்துவோம்

போரால் பாதிக்கப்பட்ட பகுதி என்ற அடிப்படையில் வடக்குமாகாணத்துக்குஅதிகளவுநிதிஒதுக்கீட்டைக் கொழும்புஅரசுசெய்யவேண்டும்என்றுவடக்குமாகாணசபை எதிர்பார்க்கின்றது.தமிழ்மக்களின்எதிர்பார்ப்பாகவும்அதுவே இருக்கின்றது. போரின்பாதிப்புகளில்இருந்து மீளஎழுவதற்கு, வடக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இந்த அதிகரித்த ஒதுக்கீடு தேவை என்பது நியாயமானகோரிக்கையே. எனினும் மேலதிகநிதியைக்கோருவதற்குமுன்னர்மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் பொருத்தமான வகையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என்கிற மீளாய்வு ஒன்று வடக்கில் செய்யப்படவேண்டியது அவசியம் என்றுஉணரப்படுகின்றது.

கிளிநொச்சிமாவட்டம்பூநகரியில்பொதுச்சந்தைக்கட்டடத்தில் அமைக்கப்பட்ட மீன் சந்தை பயன்படுத்துவோர் இன்றி வீணாகிக் கிடக்கின்றது என்று செய்தி வெளியாவதைப் பார்க்கும்போதும், அபிவிருத்திக்கானதிட்டமிடலின்வினைத்திறன் என்ன என்கிற கேள்வி எழுகிறது. பொதுச் சந்தையின் ஒரு பகுதியாக இந்த மீன் சந்தை அமைக்கப்பட்டது. நெல்சிப் திட்டத்தின் கீழ் சந்தைத் தொகுதியை அமைக்க 18.72 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 2014ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், இன்று வரையில் அந்த மீன் சந்தையைப் பயன்படுத்துவோர் எவரும் கிடையாது.

இது மிகப் பிந்திய உதாரணம் மட்டுமே. இதுபோன்ற பல பொதுக் கட்டடங்கள் மில்லியன் கணக்கான ரூபா செலவில் அமைக்கப்பட்ட பின்னர், பொதுமக்கள் பயன்பாடின்றிக் கிடக்கின்றன. பொதுக் கட்டடங்கள் மட்டுமல்ல, வீட்டுத் திட்டங்கள் பலவற்றில் வழங்கப்பட்ட பல வீடுகளும்கூட இப்படிப் பயன்பாடற்றுக் கிடக்கின்றன. அதேநேரத்தில் வீடு கட்டாயம் தேவை என்கிற நிலையிலும் பலர் சமூகத்தில் காத்திருக்கின்றனர்.

இப்படி வடக்கில்மேற்கொள்ளப்படும்அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பலவற்றிலும் சறுக்கல்கள் காணப்படுகின்றன. இதற்கான காரணம் என்ன என்பது கண்டறியப்பட்டு களையப்படவேண்டும். அதில் வினைத்திறனான செயற்பாட்டை வடக்கு மாகாண சபை ஆற்றவேண்டும். ஆனால், அதற்கான முனைப்பு எதுவும் வடக்கு மாகாண சபையினால் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

தத்தம் பகுதிகளை முன்னேற்றுவதற்காக அரசியல்வாதிகள் அபிவிருத்தித் திட்டங்களைத் தமது இடங்களுக்குப் பெற்றுக் கொடுப்பதுதவறில்லை. ஆனால்,தமதுபகுதிக்கும்மக்களுக்கும் தேவையானஅபிவிருத்திகளைஅவர்கள்பெற்றுக்கொடுப்பதே அவர்களுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும். திட்டம் இருக்கின்றது என்பதற்காக பொருத்தமற்ற அபிவிருத்திகளை மேற்கொள்வதால்எவருக்கும்பயன்கிடைக்கப்போவதில்லை.

எனவே மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் பூர்வாங்கத் தேவை மதிப்பீடுகளைச் செய்து, அந்த அபிவிருத்தியால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் மதிப்பீடு செய்த பின்னர், திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான பொறிமுறைஒன்றைவடக்குமாகாணசபைஏற்படுத்தவேண்டும்.

பிரதேசஅபிவிருத்தித்திட்டங்களின்கீழ்மக்கள்பங்களிப்புடன் முன்மொழியப்பட்ட தேவைகளில் மக்கள் தத்தமது வீதிகளை அபிவிருத்தி செய்வதையேமிகப்பெரியளவில்முன்வைத்தனர். ஆனால், அதிகாரிகளும்அரசியல்வாதிகளும்சேர்ந்துஅத்தகைய வீதி அபிவிருத்திப் பணிகளை மட்டுப்படுத்தி பிரதேச சபைகளுக்கு வருமானத்தைத் தேடித் தரக்கூடிய நிரந்தரக் கட்டடங்களில் அந்தப் பணத்தை முதலிடுவதில் ஆர்வம் காட்டினர். அத்தகைய திட்டங்களை முன்மொழிய மக்களை நிர்ப்பந்திக்கவும் செய்தனர்.

நீண்டகால நோக்கில் சிந்தித்து அவர்கள் அத்தகைய திட்டங்களைச் செயற்படுத்த எண்ணினரே தவிர, அவற்றால் மக்கள் உடனடிப் பயனை அனுபவிக்க முடியுமா என்பதை ஆராயத் தவறிவிட்டனர். சந்தைக் கட்டடத் தொகுதிகள், கடைத் தொகுதிகள் என்று பலவும் இவ்வாறே தெரிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்டன. ஆனால், அவை மக்களால் உடனடியாகப் பயன்படுத்தப்படுபவையாக இல்லை. அதனால் அந்த அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் வீணாகிக் கிடக்கின்றன. என்றாவது ஒருநாள் அவை பயன்தரும் என்று அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் சொல்லக்கூடும். ஆனால், அத்தகையகாலத்தில்இந்தக்கட்டடங்கள்வலுவிழந்தவையாகவும் நவீனத்துடன் ஒத்துப்போகாதவையாகவும் இடைஞ்சல் செய்துகொண்டிருக்கவும் சாத்தியங்கள் உண்டு.

எனவே ஒவ்வொரு கிராமத்தினதும் உடனடித் தேவை, நீண்டகாலத்தேவைஎன்பவை, மக்களின்பங்களிப்புடன்நிபுணத்துவ ஆலோசனையுடன் உருவாக்கப்படல்வேண்டும். இதுபோன்று ஒருபுறத்தில் தேவை அதிகம் இருக்கும்போது உடனடி அவசியமற்ற அபிவிருத்திக்கு நிதி வீணடிக்கப்படுவது தடுக்கப்படும். மாகாண சபை இது பற்றிச் சிந்திக்குமா?



கட்டுரை

# ஈழத் தமிழர்களது வாழ்வில் என்றுமே மறந்திட இயலாத யாழ். போதனா மருத்துவமனை படுகொலைகள்

மு.ஈழத்தமிழ்மணி

இந்திய அமைதி காக்கும் படையென்ற பெயரில் ஈழத் தமிழர் பிரதேசங்களில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர், 1987ஆம்ஆண்டுஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ். போதனா மருத்துவமனைக்குள் உள்நுழைந்து மருத்துவர்கள், தாதிமார், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் நோயாளர்கள்என 80பேருக்கும்மேலானோரைச்சுட்டுப்படுகொலை செய்த பயங்கரநாளின் 30 ஆவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும். தமிழ் மக்கள் மனங்களில் ஆழப்பதிந்துவிட்ட அந்த நாளின் நினைவுகளை இரைமீட்டுப் பார்க்கும் வகையில் இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம்திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர், இந்திய அரசு இலங்கை இராணுவத்திடம் இருந்து ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக ஆயிரக் கணக்கான இந்திய இராணுவத்தினரை அமைதிப்படையாக தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைத்திருந்தது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்திய அமைதிகாக்கும் படையினரை ஆக்கிரமிப்புப் படையினராகவேகண்டுகொண்டனர். இரண்டரைமாதம்கழிந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் 'ஒப்பரேசன் பவன்' என்ற இராணுவ நடவடிக்கையை அந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதியன்று, மேற்கொண்டுபெரும்போரைநடத்தி இருந்தனர். இந்திய இராணுவத்தினரின் கொடிய செயற்பாடுகள் ஈழத் தமிழினத்தை அழித்துத்துவம்சம்செய்தமகாகொடூர வரலாறாக ஆகி, இன்று முப்பது ஆண்டுகளை நிறைவு செய்திருக்கின்றது.

இந்திய அமைதிப்படையானது 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையை விட்டு சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் வரையில் ஈழத் தமிழர்கள் மீது புரிந்த தாக்குதல்கள் மனிதாபிமானமற்ற, அவர்கள் வெட்கித் தலைகுனிய வைக்கும் அளவுக்கு கொடூரமானவையாக அமைந்திருந்தன.

### ஈழத் தமிழர்கள் மீதான படுகொலைகள் குறித்து ஓய்வுபெற்ற இந்திய இராணுவஅதிகாரிவிமர்சிப்பு

சில வருடங்களுக்கு முன்னர் இந்திய இராணுவ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைமையதிகாரியான கேணல் ஆர். ஹரிகரன், இந்திய அரசும் இராணுவத்தலைமையும்ஈழத்தமிழர்கள் மீதான படுகொலைச் சம்பவங்களில் பெரும் தவறு இழைத்துவிட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுமுப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது இந்தியப் படைகளால் இழைக்கப்பட்ட அத்துமீறல்கள் குறித்த நினைவுகளை இரைமீட்டல் பொருத்தமானது. இந்தியப் படைகளின் நடவடிக்கைகளின் போது, பல அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற படுகொலைகள், வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற பதுங்கித் தாக்குதலின்போது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை, போன்டாவில் வடக்கு அன்னாங்கையில் நடைபெற்ற பொதுமக்கள் மீதான படுகொலைச் சம்பவங்கள் போன்றவை மிக மோசமான மனித உரிமை மீறல்களாகும்.

இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மையான விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதில் இந்திய அரசு தவறிவிட்டது. தற்போது உள்ளது போன்று 1987-1989 காலப்பகுதியில் மனித உரிமை விவகாரம் என்பது உலகில் பெரிய அளவாகப்பேசப்பட்டவிவகாரமல்ல. இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக தற்போது இந்திய இராணுவத்தில் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்றும் கேணல் ஆர்.ஹரிகரன் இந்திய அமைதிப் படையினரின் அத்துமீறல் சம்பவங்கள் குறித்து தெரிவித்திருந்தார்.


இந்திய அமைதிப் படையினர் ஈழத்தில் புரிந்த படுகொலைகளில் முக்கியமான ஒன்றாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர்மாதம் 21ஆம்மற்றும் 22ஆம் திகதிகளில் இடம்பெற்ற படுகொலைகளைக் குறிப்பிடலாம். விடுதலைப் புலிகளுடனான போரை இந்திய அமைதிப்படையினர் மேற்கொண்டிருந்த வேளையில் அவர்கள் புலிகளது வெற்றிகரமான தாக்குதல்களில் பெரும் இழப்புக்களைச் சந்தித்துக்கொண்டிருந்தனர்.

### மருத்துவமனையில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் போர்க்குற்றங்களே

மருத்துவமனைகள், ஆலயங்கள், பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது திட்டமிட்டு நடத்தப்படுகின்ற தாக்குதல்கள், போர்க்குற்றங்கள் என பன்னாட்டுச் சட்டங்கள் கூறுகின்றன. இந்த வகையில் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ். போதனா மருத்துவமனையில் வைத்து இந்திய அமைதிப்படையினர் நடத்திய படுகொலைகள் மிகப் பெரிய போர்க்குற்றமாகும். இந்திய அரசானது இந்திய அமைதிப் படையினர் மேற்கொண்ட போர்க் குற்றங்களை 30 ஆண்டுகளாகியும் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ்த் தலைவர்கள் இன்று வரையில் இந்திய அரசிடம் இந்தியப் படையினரது அந்தப் படுகொலைகள் பற்றி மூச்சுவிட்டதில்லை. வருடாவருடம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைச் சமூகமானது, இந்தப் படுகொலைகளின் நினைவு நாளன்று குறித்த படுகொலைகளில் கொல்லப்பட்டோரை நினைவு கூர்ந்து வருவதுடன், வெளியுலகத்துக்கும் நினைவு நிகழ்வு மூலம் வெளிப்படுத்தியும் வருகின்றது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி பிற்பகல் வேளையில் யாழ். போதனா மருத்துவமனைக்குள் இந்திய சீக்கிய மற்றும் தமிழ் நாட்டு றெஜிமன்ட் படையினர் பல நூற்றுக்கணக்கில் உள்நுழைகின்றனர். மருத்துவமனையில் உள்ள மருத்துவர் விடுதிகள், கீழ்ப்பகுதியில் அமைந்திருந்த எக்ஸ்ரே கதிர் இயக்கப்பகுதி, தாதிய உத்தியோகத்தர் அலுவலகம், மேற்பார்வையாளர் அலுவலகம் அருகிலுள்ள பழைய ஆண்கள் எலும்பு முறிவு விடுதி, பழைய ஒன்பதாம் இலக்க விடுதி என்பவற்றை இந்தியப் படையினர்





ஆக்கிரமித்துக் கொண்டு அங்கு உயிர்ப் பாதுகாப்புத் தேடி அப்பகுதிகளுக்குள் தங்கியிருந்த மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளர்கள் மீது ஈவு இரக்கமின்றி கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு முப்பதுக்கும் மேற்பட்டவர்களின் உயிர்களைக் காவுகொண்டிருந்தனர்.

### இந்தியப் படையினரது கோரத் தாண்டவம்

குறிப்பிட்ட பகுதி முழுவதிலும் இந்தியப் படையினரின் கோரவெறித் தாண்டவம் அரங்கேறிக் கொண்டிருந்தது. அன்றிரவுவரையில் மருத்துவக் கலாநிதி கே.பரிமேலழகர், மருத்துவக் கலாநிதி கணேசலிங்கம், தலைமைத் தாதிய உத்தியோகத்தர் திருமதி பா.வடிவேல், இரு மேற்பார்வையாளர்கள் 18 பேர் உட்பட 30 இற்குட்பட்டவர்கள் கொல்லப்பட்டும், பலர் படுகாயங்களுக்குள்ளாகியும் இருந்தனர். பல நோயாளர்கள், பொதுமக்கள் படுகாயங்களுக்குள்ளாகி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். இவர்களில் பலர் அந்த வேளையில் தேவைப்பட்ட மருத்துவ சிகிச்சையின்றி உயிரிழந்த சம்பவங்களுமுண்டு.
அன்றிரவு நிசப்தமாக இருந்த மருத்துவமனையில் இந்தியப்படையினரின் வெறி அடங்காது அவர்கள் மமதையுடன் காணப்பட்டது மட்டுமல்லாமல், தமிழர்களைக் கொன்றொழித்த மகிழ்ச்சியையும் கொண்டாடத்தவறவில்லை. அடுத்தநாளான 22ஆம் திகதி காலை வேளையில் இந்திய இராணுவத்தினர் தமது இரண்டாம் கட்ட மனித சங்காரத்தை நடத்தி முடித்தனர். குழந்தைகள் மருத்துவ நிபுணரான சிவபாதசுந்தரம் மருத்துவமனைக்குள் வந்தவுடன் ஏனைய இரு பெண் தாதிய உத்தியோகத்தர்கள் முதல் நாள் நடைபெற்ற சம்பவங்களை தெரிவித்ததையடுத்து வெள்ளைக் கொடிகளைக் கையில் ஏந்திப் பிடித்தவாறு இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த பழைய ஒன்பதாம் இலக்க விடுதிப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் இந்தியப் படையைச்சேர்ந்த சிப்பாய் ஒருவன் மருத்துவ நிபுணரை நோக்கி துப்பாக்கியை நீட்டி சுடுவதற்குத் தயாரானான். தானொரு மருத்துவர் என உரத்துக் கூறியவாறு கைகளை உயர்த்தியவாறு குறித்த தாதிய உத்தியோகத்தர்களுடன் முன்னோக் கிச் சென்று கொண்டிருக்கையில் குறித்த இராணுவச் சிப்பாய் ஈவு இரக்கமின்றி அவர்களைச் சுட்டுக் கொன்றான்.

### தீபாவளிப் பண்டிகை நாளன்று 70 பேருக்கும் மேற்பட்டோர் சாவு

ஒக்ரோபர் 21 மற்றும் 22 ஆம் நாள் சம்பவங்களில் மருத்துவர்கள், தாதியர்கள், மேற்பார்வையாளர்கள், சிற்றூழியர்கள் 21பேர் உட்பட 70 இற்கும் மேற்பட்டவர்களை இந்தியப் படையினர் இந்து மக்களினது தீபாவளிப் பண்டிகை நாளில் கொன்று குவித்திருந்தனர். இறந்தவர்களது உடலங்களை உறவினர்களிடம் வழங்காது மருத்துவமனை வளாகத்துக்குள் 22 ஆம் திகதியன்று ஒன்றாகக் குவித்து தீயிட்டு எரித்தமையானது தமிழர்களை பெரும் வேதனையடையச் செய்திருந்தது. ஈழத் தமிழர்கள் மத்தியில் இருக்கின்ற அறிஞர்கள், புலமையா ளர்கள், கல்விமான்கள் போன்றோரை அழிக் கவேண்டும் என்ற இந்தியப்படையினரினது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அவர்கள் முதலில் தெரிவுசெய்த இடமாக யாழ். போதனா மருத்துவமனை அமைந்திருந்தது.
இந்தியப் படைகள் தமிழினத்தின் மீது போரை அறிவித்துக் கொண்டு பல நூற்றுக்கணக்கான நோயாளர்கள், உத்தியோகத்தர், பொது மக்கள் கூடியிருந்த, பிணி தீர்க்கும் அளப்பரிய சேவை செய்து வந்த போதனா மருத்துவமனை வளாகத்துள் மேற்கொண்ட படுகொலையானது இந்திய அரசக்கு தலைக்குனிவை ஏற்படுத்திய கறை படிந்ததொரு நிகழ்வாகும்.
ஆங்கிலேயப்படைகளுக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியது இந்தியாவில் யூலியன்வாலா படுகொலை. அதேபோன்ற வியட்நாமில் அமெரிக்கர்களுக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியது அவர்கள் அங்கு மைலாயில் செய்த படுகொலைச் சம்பவமாகும். அது போன்று இந்தியாவுக்கு மிகப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியிருந்தது வல்வெட்டித்துறையில் நடைபெற்ற படுகொலை என அப்போதைய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் குறிப்பிட்டதுடன் அது இந்தியாவின் ஒரு மைலாய் படுகொலை என விமர்சித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### படுகொலைகள் குறித்து மௌனம் காத்த இந்திய அரசு

யாழ்.போதனா மருத்துவமனைக்குள் இந்தியப் படையினரால் அரங்கேற்றப்பட்ட படுகொலை மிகப் பெரிய போர்க்குற்றம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தும், இந்திய அரசு அது பற்றி எந்தவித கருத்து வெளிப்பாட்டையும் தெரிவிக்கவில்லை.
ஒவ்வொரு வருடமும் நினைவு கூரப்படுகின்ற யாழ்போதனா மருத்துவமனை படுகொலைச் சம்பவம் குறித்து காந்தீயம் பற்றி வாய்கிழியப் பேசுகின்ற இந்தியத் தரப்புக்கள் எதுவும் வாய்திறந்ததில்லை. குறித்த யாழ்.போதனா மருத்துவமனை படுகொலையை மேற்கொண்ட இந்திய இராணுவத்தினரின் செயற்பாட்டை இன்றுவரை எந்தவொரு இந்தியத் தரப்பினரும் கண்டித்ததில்லை.
ஈழத்தமிழர்களின் போர்க்கால வரலாற்றின் வரிசையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடந்தேறிய படுகொலைகள் மனிதாபிமானத்திற்கப்பால், காந்திய தேசத்தினால் திட்டமிட்டே நடத்தப்பட்டது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதை உறுதிப்படுத்தும் வகையில் நினைவழியாத பெரும் நிகழ்வை வருடாவருடம் குறித்ததினத்தன்றுயாழ்.போதனா மருத்துவமனைச் சமூகம் நடத்தி, குறித்த படுகொலைச் சம்பவத்தில் அநியாயமாகக் கொல்லப்பட்ட ஆத்மாக்களது ஆன்ம ஈடேற்றத்துக்காக நினைவஞ்சலி செலுத்தி வருவது இங்கு குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

> “வெள்ளைக் கொடிகளைக் கையில் ஏந்திப் பிடித்தவாறு இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த பழைய ஒன்பதாம் இலக்க விடுதிப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் இந்தியப் படையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவன் மருத்துவ நிபுணரை நோக்கி துப்பாக்கியை நீட்டி சுடுவதற்குத் தயாரானான். தானொரு மருத்துவர் என உரத்துக் கூறியவாறு கைகளை உயர்த்தியவாறு குறித்த தாதிய உத்தியோகத்தர்களுடன் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கையில் குறித்த இராணுவச் சிப்பாய் ஈவு இரக்கமின்றி அவர்களைச் சுட்டுக் கொன்றான்.

## ஆசிரியருக்கான கடிதம்


### மறக்க இயலா நினைவுகள்

இராவணனால் கவர்ந்துகொண்டு வரப்பட்டு சிறை வைக்கப்பட்ட சீதையை மீட்டெடுக்க இராமன் வானரப் படைகளுடன் இலங்கைக்கு வந்து இராவணனுடன் போரிட்டு வென்று சீதையைச் சிறைமீட்டுச் சென்ற கதையை இராமாயணம் இன்றும் நினைவு படுத்துகிறது.
ஈழத் தமிழ் மக்களுக்குச் சிங்களப் படைகளது இன்னல்களினின்றும் பாதுகாப்பு வழங்கி தமிழர் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டவென காந்தி தேசத்து கனவான்களால் அமைதிப்படை என்ற பெயரில் இங்கு அனுப்பப்பட்ட படை யினர் இங்கு நடத்திய தமிழ் மக்கள் மீதான கொடூரங்களின் முடிவில் எந்தவிதப் பலாபலனும் எட்டாமல் வால்களைச் சுருட்டிக் கொண்டு கப்பலேறியமை இலங்கைத் தமிழர்களது வாழ்வியல் வரலாற்று நூலில் முக்கிய பதிவாகிவிட்ட அத்தியாயமே.
காந்தி தேசத்தவர்கள் மேற்கொண்ட அந்தப் பச்சைத்துரோகச் செயற்பாடுகளை, வரலாற்றின் கசப்பான சம்பவங்களை நினைவுகூர ஒட்டுமொத்த ஈழத் தமிழ் இனமும் விளக்கேற்றி அஞ்சலி செய்துதான் வெளிப்படுத்த வேண்டுமென்ற அவசியமெதுவும் கிடையாது. ஏனெனில், அந்த நினைவுகள் – இந்திய அமைதிப்படை நிகழ்த்திய மனிதத்தன்மையற்ற, அரக்கத்தனமா,ன ஈழத் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் யாவும் அந்தப் படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில் வாழ்ந்து அந்தப் படைகளின் அக்கிரமங்களுக்கு உட்பட்டு மனதளவிலும் உடல் ரீதியிலும் பாதிப்புற்று குருதிக் கண்ணீர் சிந்திய ஒவ்வொரு ஈழத் தமிழ் உறவுகளின் மனங்களிலும் ஆழப் பதிந்து நிலைபெற்றுவிட்ட நினைவுகளாகும். அவற்றிலெதுவும் காலத்தால் அழியமுடியாதவை. அழிந்துவிடக் கூடாதவை.
அந்த வகையில் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் நாள் இந்தியப் படையினர் யாழ். போதனா மருத்துவமனை வளாகத்துள் உட்புகுந்து அங்கிருந்த நோயாளர்கள், மருத்துவர்கள், தாதிமார், மருத்துவமனை ஊழியர்களென 80 பேருக்கும் மேலானவர்களது உயிர்களைப் பறித்து நடத்திய வெறியாட்டத்தை கண்டும் கேட்டும் மனம் வருந்திய எம்மவர்களில் எவரது மனங்களிலிருந்தும் அதன் நினைவுகள் அவர் தம் உயிர் பிரிவும் வரை மாறாது; மறையாது.
‘கோவணப்பக்கிரி’ என ஆங்கிலேயர்களால் எள்ளி நகையாடப்பட்ட காந்தியின் உணவு ஒறுப்பு போராட்டத்துக்கு ஆங்கில சாம்ராஜ்யமே அடிபணிந்தமை வரலாறு. அத்தகைய காந்தி தேசம், தான் கட்டிய வழியில் உணவை ஒறுத்து நோன்பிருந்த திலீபனைத் திரும்பிக் கூடப் பார்க்காது சாவைத் தழுவ வைப்பித்த துரோகத்தை எவரால் தான் மறக்க இயலும்? திலீபனின் சாவின்போது தலைகுனிந்த இந்தியாவால் இலங்கைத் தமிழர் மத்தியில் இன்றுவரை தனது குனிந்த தலையை நிமிர்த்த முடியவில்லையே?
நடந்தவைகளை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி, இரைமீட்பதால் ஆகப்போவதென்ன? இத்தகைய நினைவேந்தல்களெல்லாம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படத்தான் வேண்டுமா? என ஆதங்கப்படும் காந்தி தேசத்து எடுபிடிகளுக்கு ஒரு வார்த்தை; இந்திய அமைதிப் படையால் நாம் நேரில் அனுபவித்த இன்னல்கள், துயரங்கள் , மன ஆதங்கங்கள், எல்லாம் எமது உயிர் பிரியும் தருணம் வரை எமது மனங்களில் நிலைபெற்றிருக்கும். அவை என்றும் மறக்க இயலாத அத்தனை அநியாய, துரோகத்தனமான செயற்பாடுகளே.

ஆ. இராசதுரை, கொக்குவில்.

# உற்பத்தி விலைச் சுட்டெண்களின் மாதாந்த அசைவு 1.2 வீதமாக அதிகரிப்பு

## ஒகஸ்ட் மாத காலப்பகுதிக்குரிய வெளிப்பாடாகப் பதிவு




நடப்பாண்டின் ஒகஸ்ட் மாத காலப்பகுதியில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான உற்பத்தி விலைச் சுட்டெண் 125.2 ஆக காணப்படுகிறது. மூன்று முதன்மைப் பொருளாதார நடவடிக்கை குறிகாட்டிகளான 'விவசாயம்', 'உற்பத்தி' 'மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்' என்பனவற்றின் விலைச்சுட்டெண்கள் முறையே 163.0, 109.1 மற்றும் 84.1 ஆக பதிவாகியுள்ளன. அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான குறியீட்டின் வளர்ச்சி விகித்தை நோக்குகையில் நடப்பாண்டின் ஜூலை மாத காலப் பகுதியில் 19.6 சதவீதமாக அமைந்திருக்கும் அதே வேளை "விவசாயம்", "உற்பத்தி" மற்றும் "மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்" குறிகாட்டிகள் முறையே 39.1, 7.0 மற்றும் 2.7 விகித வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளன. அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான ஜூலை மாதத்தில் இருந்து ஒகஸ்ட் மாத காலப்பகுதிக்கான உற்பத்தி விலைச் சுட்டெண்கள் 18.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதே வேளை 'விவசாயம்', 'உற்பத்தி' துறை சார்ந்த குறி காட்டிகள் நேர் வளர்ச்சியை பதிவிட்டுள்ளன. அவை முறையே 38.5 வீதமாகவும், 5.7 வீதமாகவும் அமைந்துள்ளன. "மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்" குறிகாட்டிகள் 0.8 வீத நேர்மறை வளர்ச்சி விகிதங்களை பதிவு செய்துள்ளன. (ஓ)

# வருமானவரி மூலமான நிதி வருகை அதிகரிப்பு

## மொத்த வருமானம் 30.2 வீதமாகக் காணப்படுகிறது

வருமானவரி மூலமான நிதி ஈட்டங்கள் அதிகரித்துள்ள தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நடப்பாண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வருமானவரி மூலமான மொத்த வருமான விகிதாசாரம் 30.2 வீதமாகப் பதிவாகியுள்ளது. நிதி ஈட்டமானது 84 ஆயிரத்து 475 மில்லியன் ரூபாவாகக் காணப்படுகிறது.

> வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளின் மொத்த விற்பனை, வர்த்தக மற்றும் உற்பத்தி துறைகள் இந்த வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளன.

அதேவேளை நடப்பாண்டின் முதல் 4 மாத காலப்பகுதிக்கான கூட்டாண்மை மற்றும் கூட்டாண்மையற்ற வருமானவரி ஈட்டங்களின் விகிதாசாரம் 13.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. நிதி உள்வருகையானது 34 ஆயிரத்து 634 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.




அதேபோன்று நடப்பாண்டின் முதல் 4 மாத காலப்பகுதிக்கான கொடுப்பனவுவரி மூலமான வருமானமானது 24.9 சதவீதத்தால் அதிகரித்து 12 ஆயிரத்து 274 மில்லியன் ரூபாவை உள்ளீடாகப் பெற்றுக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதிக்கான கொடுப்பனவுவரி மூலமான வருமானம் 9 ஆயிரத்து 828 மில்லியன் ரூபாவாக காணப்பட்டமை குறித்து நோக்கத்தக்கது.

கடந்த 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ள வருமானவரி மூலமான வருமானம் 64 ஆயிரத்து 857 மில்லியன் ரூபாயாகவும், கூட்டாண்மை மற்றும் கூட்டாண்மையற்ற வருமானவரி ஈட்டங்களில் பதிவு செய்யப்பட்ட வருமானம் 30 ஆயிரத்து 582 மில்லியன் ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ஓ)

# தனிநபர் பிரேரணையாக கணக்காய்வு சட்டமூலம்

## சுனில் ஹந்துந்நெத்தி நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்

கணக்காய்வாளர் நாயகம் தயாரித்த தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை தனிநபர் பிரேரணை யாக நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துந் நெத்தி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கைய ளித்தார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

"தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை நாடாளு மன்றில் சமர்ப்பிப்பது தொடர்பில் அமைச்சரவை காலதாமதத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக கணக்காய்வாளர் தயாரித்த கணக்காய்வுத் திருத்த சட்டமூலத்தை அமைச்சரவை திருத்தத்திற்கு உட்படுத்துவதற்கு முன்பாக அனைத்து உள்ளடக்கத்துடனும் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளேன். அமைச்சரவை இழுத்தடிப்புச் செய்தால் தனிநபர் பிரேரணை தொடர்பில் கட்சித் தலைவர்கள் தீர்மானித்து அதனைச் சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள முடியும்." - என்றார். (ஓ)

# 792 பில்லியன் ரூபா வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு செலவு செய்யப்படவில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கருத்து



கடந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு உட்பட்ட தொகை மதிப்பீடான 792 பில்லியன் ரூபாவினை அரசு செலவு செய்யவில்லை என்ற கருத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன வெளிப்படுத்தியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு நிகழ்வின் போதே மேற்படி தகவலை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைக்கும் போது அவர்,

"அரச கணக்காய்வாளர் நாயகம் நிதி தொடர்பான அறிக்கையில் கூறும் போது நிதி பொறுப்புக்கூறல் தொடர்பில் சட்டங்களைப் புறந்தள்ளி முதற்தடவையாக அரசின் துண்டு விழும் தொகை 83.3 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்தச் சட்டத்தின் அடிப்படையில்தலைமை அமைச்சரின் கூற்று முற்றிலும் வித்தியாசமானதாக உள்ளது. நாடாளுமன்றத்திலும் அவ்விதமே கூறப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டிலும் அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தல் என்பன எமது ஆட்சிக் காலத்திலேயே அரச வருமானத்திற்கு மேலாக அதிகம் செலுத்தப்பட்டுள்ளது. 2015, 2016 மற்றும் நடப்பாண்டில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. இந்த அரசுக்கு அல்ல 2020 இல் தோற்றம் கொள்ளும் அரசுக்கே இதனால் பிரச்சினைகள் உண்டாகும். அரசில் உள்ள சூத்திரதாரிகள் மிகவும் சூட்சுமமாக அரச தலைவரையும் தலைமை அமைச்சரையும் தங்களது சூழ்ச்சி வலைக்குள் சிக்கவைத்து பிழையான தரவுகளை வழங்கியுள்ளனர். முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அதன் முதன்மைப் பிரதிவாதியாவார். 2016 ஆம் ஆண்டு கல்வியமைச்சுக்கு ஒதுக்கிய நிதியில் 32 வீதமே வழங்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் ஐந்தில் ஒரு பகுதி அதாவது 20 வீதம் செலவாகவில்லை. அதன் பெறுமதி 792 பில்லியன் ரூபாவாக காணப்படுகிறது. இதனால் மக்கள் தம்மிடம் பணம் இல்லை என்று கூறுகின்றனர். அரசின் செலவே மக்களின் வரவாகும். பணம் பரிமாற்றங்கொள்ளப்பட வேண்டுமெனின் முதன்மைச் செலவாளர் என்ற வகையில் அரசு பணத்தை செலவு செய்ய வேண்டும்." - என்றார். (ஓ)

> கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தல் என்பன எமது ஆட்சிக் காலத்திலேயே அரச வருமானத்திற்கு மேலாக அதிகம் செலுத்தப்பட்டுள்ளது.


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

20/10/2017 — www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 17.24 | 6,572.70 | 6,555.46 |
| S&P SL20 | 3.83 | 3,831.42 | 3,827.59 |
| வியாபாரப்புரள்வு | | 568,083,840 | 1,070,114,820 |
| உள்நாடு: கொள்வனவு | | 479,148,480 | 620,524,480 |
| விற்பனை | | 531,048,448 | 637,749,950 |
| வெளிநாடு: கொள்வனவு | | 88,935,320 | 449,590,368 |
| விற்பனை | | 37,035,356 | 432,364,864 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சம்பத் வங்கி | SAMP.N | 338 | 1,226,612 | 365,854,990 |
| ஷெவ்றோன் லூப்பிரிக்கன் | LLUB.N | 118.3 | 323,411 | 37,755,630 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 253.1 | 61,044 | 15,509,792 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 1000 | 15,131 | 15,125,994 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 133.5 | 104,714 | 14,359,991 |
| அக்மி பிறின்டிங்ஸ் | ACME.N | 7.9 | 1,486,726 | 11,854,985 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 162.5 | 50,336 | 8,192,124 |
| டி.எவ்.சி.சி வங்கி | DFCC.N | 129 | 61,271 | 7,904,997 |
| அ ம் கப்பிற்றல் | PCHH.N | 1 | 5,829,177 | 6,187,610 |
| றிச்சட் பீரிஸ் | RICH.N | 13.9 | 331,492 | 4,639,050 |

அறிவித்தல்கள் -

பங்குலாபம்

ஷெவ்றோன் லூப்பிரிக்கன் (LLUB) - Rs.2.50
மெர்க்கன்டைல் முதலீடுகள் (MERC)- Rs. 7.00
சதோஷ்சா மோட்டார் (SMOT)- Rs. 0.04

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 254 |
| விலை உழைப்பு | 10.9 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 2.9 |

அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்

# வெள்ளி விழாக் காணும் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை

## குரலற்றவர்களின் குரலான மனிதம்

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை, ஆயர் பணியில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கிறார். இவர் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக 1992 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார்.

### வாழ்க்கைக் குறிப்பு

ஆயர் யோசேப்பு ஆண்டகை 1940 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள நெடுந்தீவில் பிறந்தார். நெடுந்தீவு றோ.க. பாடசாலை, மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தார். கண்டி தேசிய குருமடம், திருச்சி (இந்தியா) புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று 1967 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி அன்றைய யாழ் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையால் யாழ் மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவாகிய இவர் 1968 ஆம் ஆண்டு தொடக்கம் 1971 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உதவிப் பங்குத்தந்தையாக உயிலங்குளம் முருங்கன் மற்றும் இளவாலை சேந்தாங்குளம் ஆகிய பங்குகளில் பணியாற்றினார். 1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1975 ஆம் ஆண்டு வரை உரும்பிராய், சுன்னாகம் பங்கின் பங்குத்தந்தையாகவும், 1975 ஆம் ஆண்டு தொடக்கம் 1980 ஆம் ஆண்டு வரை பெரியவிளான், பண்டத்தரிப்பு பங்கின் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 ஆம் ஆண்டு வரை உரோமப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான பல்வேறு கற்கைநெறிகளை மேற்கொண்டு ஈற்றில் திருச்சபைச் சட்டத்துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

நாடு திரும்பிய இவர் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 1992 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் புனித திருமுழுக்கு யோவான் ஆலயப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். அதேவேளை யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் திருச்சபைச் சட்ட விரிவுரையாளராகவும், யாழ் மறைமாவட்ட திருமண நீதிமன்றத்தில் சட்டக் காவலராகவும் பணியாற்றினார்.

1992ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6ஆம் திகதி அன்றைய திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமித்தார். 1992ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இலங்கையின் ஏனைய ஆயர்கள் புடைசூழ மடுத்திருப்பதியில் இவரை ஆயராகத் திருப்பொழிவு செய்தார்.

### மறைமாவட்டம் சார்ந்த பணிகள்

ஒரு மறைமாவட்ட ஆயர் என்ற வகையில் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டம் மட்டிலான தனது சமயக் கடமைகளை செவ்வனே நிறைவேற்றினார். ஒரு மறைமாவட்டத்தில் ஓர் ஆயர் செய்யவேண்டிய பணிகளை அவர் முழுமையான உற்சாகத்தோடு செய்தார். திருப்பலி, திருவிழாக்கள், பங்குத் தரிசிப்புக்கள், ஆலோசனைகள், கூட்டங்கள், மாநாடுகள், ஆலய மற்றும் பங்குமனைக் கட்டுமானங்கள், ஏழைகளுக்கான உதவிகள் என அவர் தன் கடமைகளைச் சிறப்பாகச் செய்தார்.

இவர் மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பொறுப்பேற்ற பின்னர் மறைமாவட்டத்தை ஆன்மீக, ஒழுக்க, சமூக, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்ற பல்வேறு புதிய முயற்சிகளை முன்னெடுத்தார்.


குருக்கள் துறவியர் நலனில் அக்கறையோடு செயற்பட்டார். பொதுநிலையினரின் உருவாக்கத்தில் அதிக கரிசனை எடுத்தார். திருச்சபையின் திருவழிபாடுகளை திருச்சபை ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப நடத்தவேண்டுமென்பதை வலியுறுத்தினார். இவ்வாறு ஓர் ஆயர் என்ற வகையில் தனது மறைமாவட்டம் சார்ந்த கடமைகளில் அவர் அதிக ஈடுபாட்டோடும் அர்ப்பணிப்போடும் உழைத்தார். இதைவிட இலங்கை ஆயர் பேரவையில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பாகச் செய்தார்.

### துன்புற்ற மக்களின் துயர் துடைத்தார்

ஒரு கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்துநின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க அவர் அரும்பாடுபட்டார்.

சிறைகளில் வாடும் கைதிகளை அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர்களோடு தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருந்தார். காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பாக நின்று அவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களின் கதியை வெளிக்கொணர ஓயாது உழைத்தார். போரினால் தமது வாழ்விடங்களை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டார். முள்ளிக்குளத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும், விடத்தல்தீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் அவர் காணிகளை, வீடுகளை வழங்கியமை இதற்கு உதாரணமாகும். போரினால் தொழில் வாய்ப்புக்களை இழந்தவர்கள் தொழில்களை ஆரம்பிக்க வேண்டிய உதவிகளைச் செய்தார்.

போரினால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு வாழ்வுதய நிறுவனத்தின் உதவிக்கரம் பிரிவு மூலம் உதவிகளைப் புரிந்தார். வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள 'வரோட்' நிறுவனத்தின் ஊடாகவும் இவர்களின் புனர்வாழ்வுக்காகப் பாடுபட்டார். போரினாலும், சுனாமியினாலும் பெற்றோரை இழந்து ஆதரவற்று நின்ற பெண் சிறார்களுக்கு வவுனியாவில் சலேசிய அருட்சகோதரிகளின் பராமரிப்பில் ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். அதேபோல் மன்னாரிலும் ஆண் சிறார்களுக்கான ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். இவ்வாறு இன்னும் பல துயர் துடைப்புப் பணிகளை முன்னெடுத்தார்.



ஒரு கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்துநின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க அவர் அரும்பாடுபட்டார்.
சிறைகளில் வாடும் கைதிகளை அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர்களோடு தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருந்தார். காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பாக நின்று அவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களின் கதியை வெளிக்கொணர ஓயாது உழைத்தார்.போரினால் தமது வாழ்விடங்களை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டார்.

### குரலற்ற மக்களின் குரலாக ஒலித்தார்

ஈழத்தமிழர் வரலாற்றில் என்றுமில்லாத கொடிய போர்ச்சூழல் நிலவிய காலத்தில் ஆயர் யோசேப்பு ஆண்டகை குரலற்ற தமிழ் மக்களின் குரலாக ஒலித்தார். உண்மைகளை எடுத்துக் காட்டிய, நீதியை வலியுறுத்திய அவருடைய குரல் உள்நாட்டிலும், பன்னாடுகளிலும் ஓங்கி ஒலித்தது. தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகள், சொல்லொண்ணாத் துன்பங்கள் போன்றவற்றை உள்நாட்டு ஊடகங்கள் சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை நிலவிய அந்த நாள்களில் இவருடைய அறிக்கைகளும், நேர்காணல்களும், தகவல்களும் உண்மை நிலையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிச்சம் போட்டுக் காட்டின.

தவிர, ஆட்சியில் இருக்கும் அரச தலைவர்களை, அமைச்சர்களை மற்ற ஆயர்களுடனும், தனியாகவும் காலத்துக்குக் காலம் சந்தித்து மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தார். தன்னைச் சந்திக்க வரும் அரசா அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐக்கியநாடுகள் சபையின் பல்வேறு பிரிவைச்சார்ந்த பிரதிநிதிகள் போன்றவர்களுக்கு களநிலைமைகளை தெளிவாக விளங்கப்படுத்தினார். இவ்வாறு அவர் குரலற்ற மக்களின் குரலாக ஒலித்தார். இயல்பாகவே இறைவாக்கினருக்குரிய துணிவைப் பெற்றிருந்தார். துன்புறும் மக்களுக்காக இரங்கும் இரக்க உள்ளத்தையும் அவர் பெற்றிருந்தார். இவை அனைத்திற்கும் மேலாக காலத்தின் தேவைக்கு பதில் அளிக்க வேண்டிய ஒரு நல்ல திருச்சபைப் பணியாளனுக்குரிய தெளிவையும் அவர் கொண்டிருந்தார். தன் ஆடுகளுக்காக உயிர் கொடுத்த நல்லாயன் இயேசுவை அவர் தன் கண்முன் கொண்டிருந்தார். அந்த நல்லாயன் வழியில் பயணித்த திருச்சபையின் துணிவுமிக்க பல பணியாளர்கள் பற்றியும் அவர் அறிந்திருந்தார். பேராயர் ஒஸ்கார் றொமேறோ, பேராயர் டெஸ்மன்ட் டூட்டு, அருட்திரு. மேரி பஸ்ரியன், மெதடிஸ்த போதகர் ஜோர்ச் ஜெயராஜசிங்கம் போன்ற திருச்சபைப் பணியாளர்களின் வாழ்வாலும் தியாகத்தாலும் அவர் தூண்டப்பட்டிருந்தார். இவர்களின் பாதையில் உண்மைக்கு சாட்சியாக, ஏழைகளுக்கு மீட்சியாக அவர் திகழ்ந்தார்.

### அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயலாற்றினார்

ஆயர் மக்களின் அடிப்படைத் தேவைகள், நிவாரணம் வழங்கல், மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயலாற்றினார். விடுதலைப் புலிகள், தமிழ் அரசியல் தலைவர்கள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினருடனும் அவர் தொடர்பாடல்களை மேற்கொண்டிருந்தார். மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு அவர் பல்வேறு காலகட்டங்களில் கடிதங்களை எழுதினார். அவற்றுக்கு அவரிடமிருந்து பதில்கள் வந்ததுமல்லாமல் பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அன்றைய அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை அவர் சந்தித்து மக்கள் நலன்கள் குறித்து கலந்துரையாடினார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் பல்வேறு தொடர்பாடல்களை, கலந்துரையாடல்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து ஆலோசித்தார். அதேபோன்று அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களோடும் நெருங்கியவிதமாகச் செயலாற்றினார்.

### முடிவுரை

1992ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அவர் சுகவீனமடையும் வரை இடைவிடாமல் தொடர்ச்சியாக இயங்கிவந்தார். திருச்சபையின் ஒழுங்குவிதிக்கு அமைய 75 வயது நிறைவில் தான் பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1 இற்கு அமைவாக திருத்தந்தை பிரான்சிஸ்க்கு அறிவித்தார். 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி இவருடைய பணி ஓய்வுக்கான கோரிக்கையை திருத்தந்தை ஏற்றுக்கொண்டார்.

ஆயர் அவர்கள் மக்கள் பணியில் தன்னை முழுமையாகக் கரைத்துக்கொண்டார். இரவு பகல், மழை வெயில் பாராது நீண்ட பயணங்களை மேற்கொண்டார். கண் துஞ்சாது, பசி நோக்காது கருமமே கண்ணாகச் செயற்பட்டார். இவர், "மன்னாரின் ஒஸ்கார் றொமேரே" என அழைக்கப்பட்டார். சமாதானத்திற்கான நோபல் பரிசுக்குரியவர் என மக்களால் கணிக்கப்பட்டார்.

2014ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் நிறைவுநாள் நிகழ்வின்போது மன்னார் தமிழ்ச் சங்கம் "இனமான ஏந்தல்" என்ற விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. 2015ஆம் ஆண்டு கொழும்புக் கம்பன் கழகம் இவருக்கு "கம்பன் புகழ்" விருதினை வழங்கிக் கௌரவித்தது.

ஈழத்துக் கத்தோலிக்க திருச்சபை, இன்னும் குறிப்பாக ஈழத்துத் திருச்சபையின் பணியாளர்கள் ஆயர் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும். காலத்தின் தேவைக்கு ஏற்ப துணிவோடு, உறுதியோடு செயலாற்ற வேண்டும். ஆயர் யோசேப்பு ஆண்டகையின் வாழ்வும் பணிகளும் இன்றைய, நாளைய தலத்திருச்சபைக்கு சவாலாக, விழிப்புணர்வாக, உந்துதலாக அமைய வேண்டும்.




தீபாவளி என்பது எமது வாழ்வில் மிக முக்கியமான பண்டிகை. இந்தத் தீபாவளியில் அனைவரினதும் வாழ்வில் இருள் நீங்கி மகிழ்ச்சி கிடைக்க வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போம். தீபாவளி என்பது லக்ஷ்மிக்கு உகந்த தினமாகும். தனத்துக்கு தேவதை லக்ஷ்மி. எனவே பன்னிரு ராசிக்காரர்களுக்கும் இந்த தீபாவளி முதல் அடுத்த தீபாவளி வரை பொருளாதார நிலை எப்படி இருக்கும்?

### தனுசு

சுபகாரகன் குருவை ராசிநாதனாகவும், தொழில் ஆயுள் காரகன் என்று போற்றக்கூடிய சனியையும் கொண்ட நீங்கள் அனுபவத்தால் பாடம் கற்பவர்கள். இந்தாண்டுதீபாவளி பொன்னான நிகழ்வாக இருக்கும். குடும்பத்தில் அதிகமான சோதனைகளுக்குப்பின்நல்லநிகழ்வுகள்நடக்கும். வாழ்க்கைத் துணையுடன் சிறு சிறு மோதல்கள் வந்து மறையும். குழந்தைகள் உங்கள் சொல்லுக்குக் கட்டுப்படுவார்கள். தொழில், உத்தியோகத்தில் நல்ல பயன்கள் கிடைக்கும்.

### மகரம்


தொழில் ஆயுள் காரகன் என்று போற்றக்கூடிய சனியையே தனகாரகனாகவும் கொண்ட நீங்கள் வாக்குவாதம் செய்வதில்வல்லவர்கள். இந்தாண்டுதீபாவளி வரவும் செலவும் கலந்ததாக இருக்கும். குடும்பத்தில் அித்த முயற்சிகளுக்குப் பின் காரியங்கள் நிகழும். வாழ்க்கைத்துணையுடன் அவ்வப்போது ஏற்பட்ட மனக்கிலேசங்களுக்கு ஒரு முடிவு வரும். குழந்தைகள் உங்களுக்கு அனுகூலமாக இருப்பார்கள். தொழில் உத்தியோகத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு நல்ல பயன்களைப் பெறப் போகிறீர்கள்.

### மீனம்

செவ்வாயை தனாதிபதியாக கொண்ட நீங்கள் மற்றவர்களுக்கு உதவிகரமாய் இருப்பீர்கள். இந்தாண்டு தீபாவளி சோகங்களை மறைத்து சந்தோஷங்களை கொடுப்பதாக இருக்கும். குடும்பத்தில் முடிவுகளை நீங்கள் எடுப்பதற்கு முன் தகுந்த ஆலோசனை பெறவும். வாழ்க்கைத்துணையுடன் கசப்புணர்வு ஏற்படலாம். குழந்தைகள் உங்களுக்கு அதைரியத்தைக் கொடுக்கலாம். தொழில் உத்தியோகத்தில் நல்ல பெயர் வாங்குவீர்கள்.

### கும்பம்

தொழில் ஆயுள் காரகன் என்று போற்றக்கூடிய சனியை ராசிநாதனாகவும் சுபகாரகன் குருவை தனாதிபதியாகவும் கொண்ட நீங்கள் உழைப்பின் மூலம் தான் முன்னேற முடியும் என்று நம்புபவர். இந்தாண்டுதீபாவளி மிக அற்புதமாக இருக்கும். குடும்பத்தில் தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்ட வாக்குவாதங்கள் மறைந்து நல்ல உறவுமுறை வரும். தொழில் உத்தியோகத்தில் மிகவும் பொன்னான வாய்ப்புகள் வந்து சேரும். புதிதாக வீடு வாங்குவீர்கள்.



**நாளை**
**22.10.2017**
ஞாயிற்றுக்கிழமை
**ஐப்பசி 05**

திதி: திருதியை பி.இ. 04.22 வரை
நட்சத்திரம்:விசாகம் பி.ப. 12.46 வரை
சுபநேரம்: 09.02–10.32 வரை
ராகுகாலம்: 04.32–06.02 வரை

## வரலாற்றில் இன்றைய தினம் 21.10.2017

1209 - உரோமைப் பேரரசின் அரசராக நான்காம் ஒட்டோ முடிசூடினார். பாப்பரசர் மூன்றாம் இனோசென்ட் ஒட்டோவுக்கு முடிசூட்டினார்.

1512 - விட்டன்பேர்க் பல்கலைக் கழகத்தில் இறையியல் பீடத்தில் இணைந்தார் மாட்டின் லூதர்.

1895 - போர்மோசா குடியரசு வீழ்ச்சியடைந்ததை அடுத்து ஜப்பான் படைகள் உள்நுழைந்தன.

1945 - பெண்கள் வாக்களிக்க அனுமதி வழங்கியது பிரான்ஸ்.

1992 - பருத்தித்துறை கடலில் மீனவர்கள் மீது தாக்குதல்.


1992 - வலைபாடில் பொமமர்கள் குண்டுவீச்சு.

2004 - சீன நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிவிபத்து. 56 பேர் உயிரிழந்தனர்.

2007 - வடக்கை அரசு தாக்கினால் சுமார் 2 லட்சம் மக்கள் இடம்பெயர்வார்கள் என்று ஐ.நா பொதுச் செயலாளருக்கு அறிக்கை.

2007 - சம்மாந்துறையில் தமிழ் இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொலை.

1987 - இந்திய அமைதிப் படையால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மருத்துவர்கள், தாதியர், நோயாளிகள் என்று சுமார் 70 வரையானவர்கள் உயிரிழந்தனர்.



## பத்தி எழுத்து

# நம்பிக்கையுடன் காத்திருப்போம்

வடக்குப் பாடசாலைகளிலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் மிகக் குறைந்த வீதத்தினரே சித்தி பெற்றுள்ளனர் என்று அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளிவந்துள்ளது. புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக வேறுபட்ட கருத்துக்கள் நிலவிவருகின்ற போதிலும் இந்தப் பரீட்சை ஆரம்பத்தர மாணவர்களின் கல்விக்கு ஓர் அளவீடாக உள்ளதை மறுக்க முடியாது. முன்னர் வெளிவந்த கா.பொ.த சாதாரண தர, உயர்தரப் பரீட்சை முடிவுகளும் வடபகுதியைப் பொறுத்த வரையில் திருப்தி தருவதாக அமைந்திருக்கவில்லை. வெறுமனே சில மாவட்டங்களின் பரீட்சை முடிவுகளை மட்டுமே தூக்கிப் பிடிப்பதால் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை. வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் அலசிப் பார்த்து கல்வியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதுதான் புத்திசாலித்தனமானது.

அண்மையில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சையில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களில் தமிழ் மொழியில் தோற்றிய எவருமே உள்ளடங்கப்படவில்லையென்பது கவலை தரக்கூடியதொரு விடயமாகும். இதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கு மாணவர்களை மட்டுமே குறை கூறிக்கொண்டிருப்பதால் மற்றவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. கற்பித்த ஆசிரியர்களும், பெற்றோர்களும் கூடப் பொறுப்பை ஏற்கத்தான் வேண்டும்.

வடக்கிலுள்ள ஐநூறுக்கும் மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து புலமைப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒருத்தர்கூடசித்தியடையவில்லை என்பதை எமக்கு ஏற்பட்ட அவமானமாகவே நாம் கருத வேண்டும். மேலும் அந்தப் பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் என்ன செய்து கொண்டிருந்தனர் என்பதையும் கல்வி அதிகாரிகள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். பாடசாலையில் குறைபாடுகள் இருந்தால் அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இதை விடுத்து வெறும் புள்ளி விபரங்களை வெளியிட்டுக் கொண்டிருப்பதால் ஒன்றுமே நடக்கப் போவதில்லை.

கல்வித் திணைக்களங்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என நான்கு பிரிவினரும் பொறுப்புடன் செயலாற்றினால் கல்வியின் தரத்தைச் சீர் செய்து கொள்ள முடியும். இதற்கான வேலைத்திட்டங்கள் முறையாக வகுக்கப்பட வேண்டும். ... யுணர்வுடனும் செய... பயன்கள் கிடைக்கவே செய்யும்.

இனிவரும் காலங்களில் வடக்கில் உள்ள பாடசாலைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்றநம்பிக்கையுடன் காத்திருப்போம்.

# ஹொலிவூட் தரத்தில் 'காவியன்'




கே.வி.சபரீஷ் தயாரிப்பில் ஷாம் நடிப்பில் உருவாகி இருக்கும் 'காவியன்' படம் ஹொலிவூட் தரத்தில் உருவாகியுள்ளது என்றுசமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

ஷாம் நடிப்பில் தற்போது உருவாகி இருக்கும் படம் 'காவியன்'. இதில் நாயகிகளாக ஸ்ரீதேவி குமார், 'மனம் கொத்திப் பறவை' புகழ் ஆத்மியா நடித்துள்ளார்கள். கே.வி. சபரீஷ் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப் படத்தை பார்த்தசாரதி இயக்கியுள்ளார். 'அமெரிக்காவின் சூதாட்ட நகரம்' என்று அழைக்கப்படும் லொஸ் வெகாஸில் படம் எடுக்கப்பட்டுள்ளது. லொஸ் வெகாஸில் எடுக்கப்பட்டுள்ள முதல் தமிழ்ப்படம் இதுவே.

"இந்தப் படம் முழுக்க முழுக்க அமெரிக்காவில் உள்ள லொஸ் வெகாஸில் படமாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஒரு தமிழ்படம் முழுவதும் உருவாகி இருக்கிறது என்றால் அது 'காவியன்' படமாகத்தான் இருக்கும்." என்று பெருமைப்பட்டுள்ளது படக்குழு.

லொறியில்
அழுது கொண்டே
சென்றது.....
ஆற்றிடமிருந்து
பிரிந்த
மணல்!!!

பேய் படத்தை பார்க்கும்போது
வராத 'திகில்' கூட



திடீர்னு பாக்கெட்ல 'போன்' இல்லை
எண்டதும் வந்திடுது.

அண்ணே... உங்களுக்குப் பின்னாலயும்
ஒருத்தர் படம் எடுக்கிறார்









**மேடம்:** அன்றாடப் பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**இடபம்:** உங்களின் பேச்சை சிலர் தவறாகப் புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு சரியாகும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சிகள் இனிதாக நிறைவேறும். தொழில் வியாபார விஷயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**சிங்கம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடப்படுத்தலாம். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். அளவான வருமானம் கிடைக்கும்.

**துலாம்:** பொறுமையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சீராக உயரும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மகரம்:** நண்பர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மந்தகதி நிலவும். இலாபம் சுமாராக இருக்கும். உறவினர்களின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். நீண்டநாள் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் புகழ்ந்து பேசுவர். தொழில் வியாபாரத்தில் குளறுபடி உண்டாகி மறையும். அளவான பணவரவு கிடைக்கும்.

மனிதன் பற்றுகின்ற
பொருளெல்லாம் அவனைப்
பற்றிப் பிடித்துக்கொள்ளும்.
பற்றை விடுங்கள் பற்றியவை
பற்றற்றுப் போய்விடும்.
எதற்கும் விலை
வைக்காதீர்கள்
அற்பப்பொருளும்
விலைமதிப்பற்றது.



# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 8 | | | 5 | |
| | | 9 | | 5 | 4 | 3 | 1 | |
| | | | | | 7 | | | 6 |
| 7 | | | 6 | | 1 | | 9 | |
| | | | | 2 | | | | |
| | 5 | | 9 | | 8 | | | 2 |
| 2 | | | 5 | | | | | |
| | 4 | 6 | 8 | 1 | | 7 | | |
| | 3 | | | 6 | | 1 | | |


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | 5 | 8 | 4 | 1 | 2 | 9 |
| 8 | 2 | 5 | 9 | 3 | 1 | 6 | 4 | 7 |
| 9 | 4 | 1 | 2 | 6 | 7 | 3 | 8 | 5 |
| 4 | 1 | 9 | 7 | 5 | 3 | 8 | 6 | 2 |
| 6 | 7 | 3 | 1 | 2 | 8 | 5 | 9 | 4 |
| 2 | 5 | 8 | 4 | 9 | 6 | 7 | 1 | 3 |
| 5 | 8 | 7 | 6 | 4 | 2 | 9 | 3 | 1 |
| 1 | 6 | 2 | 3 | 7 | 9 | 4 | 5 | 8 |
| 3 | 9 | 4 | 8 | 1 | 5 | 2 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

உண்மையான
வார்த்தைகள்
எப்போதும்
அழகாக
இருப்பதில்லை

அழகான
வார்த்தைகள்
எப்போதும்
உண்மையாக
இருப்பதில்லை

## 2050 தீபாவளி



# கர்வம் அழிந்தது



ஒரு நாட்டில் பிரபலமான செல்வந்தன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் அயோகா. அயோகா ஒரு காலத்தில் பெரிய அரசியல் வாதியாகக் கூட இருந்திருக்கிறான். அதனால் அவனுக்கு கர்வம் அதிகம்; பணமும் செல்வாக்கும், பெயரும், புகழும் இருந்தால் யாருக்குத்தான் கர்வம் வராது. அயோகா தன்னைப் பற்றி அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்று விரும்பினான். புகழ்போதை அவனை அப்படி ஆட்டி வைத்தது. யாரைக் கண்டாலும் "என்னைத் தெரியுமா?" என்று கேட்பான். அவனது சுயபுராணத்தைக் கேட்பது தானா மக்கள் வேலை? ஆகவே, அவர்கள் அவன் கண்களில் படும்போதெல்லாம் விலகி ஒதுங்கி வேகமாகச் சென்று விடுவார்கள்.

ஒரு நாள் அவனது ஊருக்கு ஞானி ஒருவர் வந்தார். அவர் மிகப் பெரிய மகான். அவர் மக்களுக்கு நல்ல உபதேசங்கள் வழங்கி, அவர்களை நல்வழிப்படுத்தும் வேலையைச் செய்து கொண்டிருப்பார். தன்னால் இயன்றவரை மக்களது குறைகளைப் போக்குவதற்கு பாடுபடுவார். ஊர் மக்கள் அந்த ஞானியைப் பற்றி வாய் ஓயாமல் பேசிக்கொண்டி ருப்பதைப் பற்றி அயோகா கேள்விப்பட்டான். "உலகில் தன்னை விடப் பெயரும் புகழும் பெற்றவர் இருக்கிறாரா? என்று நினைத்த அயோகா, தான் எந்த விதத்திலும் குறைந்து போய் விடக் கூடாது என்றெண்ணி அந்த ஞானியைச் சென்று சந்தித்து விட முடிவு செய்து கொண்டான். ஒருநாள், தன்னை ஆடம்பரமாக அலங்காரம் செய்து கொண்டு ஞானியைச் சென்று சந்தித்தான். "ஞானியே! என்னைத் தெரிகிறதா?" என்று கர்வம் பொங்கக் கேட்டான். அவனையும், அவனது விலைமதிப்பற்ற அலங்கா ரத்தையும், கர்வமான பேச்சையும் கண்ட ஞானி அவனை ஏற இறங்க ஒருமுறை பார்த்து விட்டு மெல்லப் புன்னகைத்தார். அதோடு அவனது கர்வத்துக்கு சரியான பாடம் கற்பிக்கவும் எண்ணினார். "அன்பரே! நீர் யாரென்று நான் தெரிந்து கொள்வதால் எனக்கோ, நான் யாரென்று தெரிந்து கொள்வால் உமக்கோ என்ன பயன்? நாம் இருவருமே ஒரு நாள் இறக்கப் போகிறோம். அதன்பின்பு கடவுளை அடையப் போகிறோம். அதனால் அந்தக் கடவுளைப் பற்றி நாங்கள் தெரிந்து கொண்டால் என்ன? அதில் பயன் உள்ளதே" என்றார் ஞானி. அயோகாவுக்கு ஞானியின் உபதேசம் நெற்றிப் பொட்டில் அடித்தது போலிருந்தது. அந்த இடத்திலேயே அவனது கர்வம் அழிந்து போனது. தன்னை மனிதனாகப் புனிதப்படுத்திய ஞானிக்கு பல நூறு நன்றிகள் கூறிவிட்டுப் புறப்பட்டுப் போனான்.

## சுவரொட்டி

பெற்றோர்களே!

**கல்வி கற்பது சிறுவர்களின் உரிமை. சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவோம்!**

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுப்போம்.




அனுசரணை: யுனிசெவ்

## நாயை மயக்கிய நடிப்பு



அமெரிக்காவில் புகழ் பெற்ற நாடக நடிகராய் விளங்கியவர் வில்லியம் கார்கன். அவரை இரசிகர்கள் அனைவரும் அன்பாக பில் என்றுதான் அழைப்பார்கள். சான்பிரான்ஸிஸ்கோ நகரில் அலகஜர்தியேட்டரில் நடித்துக் கொண்டிருந்த போது கார்கன் வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்டது. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் அமெரிக்க அதிபரின் வேடத்தில் கார்கன் நடித்தார். அந்த வேடத்தில் இருக்கும் போது உண்மையிலேயே நாட்டின் அதிபர் அவர்தானோ என்று மக்கள் மயங்கும் அளவுக்கு கார்கன் நடித்தார். அதனால் கார்கன் புகழ் நாடெங்கும் பரவியது. இவர் நடிப்புப் பற்றி கேள்வியுற்ற உண்மையான அதிபர் இவரைப் பார்க்க விருப்பம் கொண்டார். ஆதலால் அரசு ரீதியில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படு த்தப்பட்டன. நாடகம் ஆரம்பமானது மக்கள் மேடையில் கார்கனை எவரும் பார்க்கவில்லை. குறிப்பிட்ட அதிபரும் அதனை உணர்ந்து கொண்டார். அதை விட அந்த அதிபரின் வளர்ப்பு நாய் மேடையில் அதிபர் வேடத்தில் இருந்த கார்கனைக் கண்டதும் வேகமாக மேடை மீது தாவி ஏறி கார்கனைப் பார்த்து பிரியமுடன் வாலை ஆட்டிக் குரைத்தது. அது எங்கோ வெளியில் சென்றிருந்தவர் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் வரவேற்பது போல தன் வாலை ஆட்டியது. அத்துடன் நில்லாது நடிகர் கார்கன் அருகில் சென்று சுற்றிச் சுற்றி வந்து, அவர் காலை நக்கிக் கொடுத்தது. நாயின் செயல்களைக் கண்ட மக்கள் பெரும் கரவொலி எழுப்பினர். அமெரிக்காவில் அரச தலைவர் விருது வழங்கும் மரபு இல்லை. எனினும் அதிபரின் நாயை நம்ப வைத்ததே கார்கனின் நடிப்புத் திறனுக்கு கிடைத்த 'அரச தலைவர் விருது' என்று மக்கள் கருதிப் பாராட்டினர்.

## இரு படங்களிலும் ஏழு வித்தியாசங்கள் உள்ளன; கண்டுபிடிப்போம்



### பின்வரும் சொற்களில் இடம்பெறும் உயிர்க் குறிகளை இனம் கண்டு எழுதுவோம்

| சொற்கள் | உயிர்க்குறி | விடைகள் |
|---|---|---|
| கால் | அரவு | --------------- |
| கொக்கு | ஒற்றைக்கொம்பு | --------------- |
| கைகள் | சங்கிலிக்கொம்பு | --------------- |
| தோட்டம் | இரட்டைக்கொம்பு | --------------- |
| வீடு | சுழி | --------------- |
| திகதி | விசிறி | --------------- |

## அழுவது பலவீனம் அல்ல

'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்பது போல, அழுகையும் உடலுக்கு மிக ஆரோக்கியமானது என விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். கண்களை உணர்வுகளின் கண்ணாடி எனலாம். பெரும்பாலும் துன்பம், கவலை பயம், ஏமாற்றம் துயரம் போன்ற உணர்ச்சிகளால் ஏற்படும் மன அழுத்தம் போன்றவற்றால் கண் அதிகமான கண்ணீரைச் சுரக்கிறது. அளவு மீறிய மகிழ்ச்சியில் கூட கண்கள் கண்ணீரைச் சொரியும். இதனையே ஆனந்தக் கண்ணீர் என்பார். ஆயினும் சோகங்களின் மிகச் சிறந்த வடிகால் அழுகையே. ஆயிரம் ஆறுதல் வார்த்தைகளை விடவும், தனிமையில் இருந்து சிறிதளவு நேரமாவது அழுது தீர்ப்பதன் மூலம் அதிக சோகத்தை வெளியேற்ற முடியும். அழுகை சோகத்தைக் கண்ணீராகக் கரைத்து வெளியேற்ற வல்லது.

கண்களிலுள்ள விழி சுழல்வுகளுக்கான ஈரப்பசை தரும் சுரப்பிகள் இயல்பான அளவுக்குமேல் அதிகமாகச் சுரப்பதால் மேலதிக நீர் கண்ணீராக வெளியேறுகிறது.

கண்ணீரின் பயன்களாவன. மனதிலுள்ள அழுத்தம் கண்ணீர் மூலம் வெளியேறி விடுகிறது. கண்களிலுள்ள தூசு போன்ற அழுக்குகள் நீங்கி விடுகின்றன. ஒரு சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவரது மனம் அந்த உளத் தாக்கத்திலிருந்து ஆறுதல் அடைகிறது. கண்ணீர் விடுவதன் மூலம் கண்களுக்கு ஒரு பயிற்சியும் கிடைக்கிறது. கண்ணீர் விடுதல் ஒரு கழிவு நீக்கச் செயற்பாடு என வில்லியம் ப்ரே என்ற அமெரிக்க விஞ்ஞானி கூறியுள்ளார்.

அழுகையை மற்றவர்களின் பலவீனமென தப்பாகக் கருதக் கூடாது. அது அன்பின் வெளிபாடாகவும் உள்ளது. நாம் ஒருவர் மீது அளவுக்கதிகமான அன்பு கொண்டிருந்தால். அவருக்கு ஓர் இழப்பு, துன்பம் ஏற்படுமாயின் அதனை எம்மால் தாங்க முடியாத நிலையிலே கண்ணீரை வெளியேற்றுகின்றோம்.

இதனையே திருவள்ளுவர் திருக்குறளில் 'அன்புடைமை' என்ற அதிகாரத்தில் முதற் குறளால்

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன் கணீர் பூசல் தரும்"

என்று கூறி, அன்பின் வெளிப்பாடே கண்ணீர் என உறுதி செய்கிறார். இன்றைய அவசர உலகில் மனித நடத்தைகள் பலபேரின் மனநலன்களைப் பாதித்து வருகிறது. இவ்வாறு மனநலம் பாதிக்கப்படுவோர் சிரிப்பை மட்டுமல்ல அழுகையையும் தொலைத்த நடைப் பிணங்களாக வாழ்கிறார்கள்.



சோகத்தில் வார்த்தைகள் மொழியின்றி உறங்கினும், உணர்வுகள் உணர்வின்றிக் கிடந்தாலும் வலி கண்ட இதயம் கதறி அழத்தான் செய்யும். அழத்தான் வேண்டும். இது பலரதும் அனுபவவாக்கு.

அழுவதில் தவறில்லை என்பது பற்றி அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன் தன் மகனது ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் "நீங்கள் அவனுக்கு கற்றுக் கொடுக்கும் விடயங்களில் துயரமான வேளைகளில் கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் கற்றுக் கொடுங்கள்" என எழுதியுள்ளார்.

# உடற்பயிற்சி பற்றிய முக்கியமான தகவல்கள்

- பயிற்சியாளரின் உதவியுடன் முறையாகச் செய்யக்கூடிய உடற்பயிற்சிகள் இதயத்திற்கும் நுரையீரலுக்கும் பலத்தைச் சேர்க்குமே தவிர, பாதிப்பைத் தராது. தொடைப்பகுதிக்காகச் செய்யப்படும் பயிற்சிகள் கடினமானவை. அதனால், சிலர் கடினமான தசைப்பயிற்சிகளை விரும்ப மாட்டார்கள். அது தவறு.
- சிலர் இடுப்புக்கு மேல்பகுதி பயிற்சிகளை மட்டுமே மேற்கொண்டு, தொடைப்பயிற்சியை வேண்டாம் என்பார்கள். இதன் மூலம் வலுவான தசைகளைக் கொண்ட, இடுப்புக்கு மேல்பகுதியை தாங்கும் சக்தி கால்களுக்கும், தொடைகளுக்கும் இல்லாமல்போகும். குச்சி போன்ற தோற்றத்தை அளிக்கும். இதுவும் முற்றிலும் தவறானது.
- சிலர் ஆம்ஸ் மட்டும் வலுவாக இருந்தால்போதும் என நினைத்து, அதற்கான பயிற்சிகளை மட்டுமே செய்வார்கள். இந்த அணுகுமுறையும் தவறானது. ஆம்ஸ்க்கு மட்டும் பயிற்சிகள் செய்து மற்ற தசைகளுக்குப் பயிற்சிகளைச் செய்யாமல்விட்டால் அது சீரற்ற உடல் தோற்றத்தைத் தரும். எனவே எல்லாத் தசைகளுக்கும் பயிற்சி கொடுக்கவேண்டியது அவசியம்.
- பாடிபில்டர்களுக்கான பயிற்சிகள் என்று எதுவுமே இல்லை. எல்லாப் பயிற்சிகளையும் ஆண், பெண் இருபாலரும் செய்யலாம். ஒரு பாலினத்தினருக்கு மட்டும் எனத் தனியாக எந்தப் பயிற்சியும் இல்லை.
- உடலின் குறிப்பிட்ட ஒரு இடத்தில் கொழுப்பு இருக்கிறது என்று அதற்குரிய பயிற்சிகளை மட்டுமே மேற்கொண்டாலும், கொழுப்பைக் குறைத்துவிட முடியாது. மொத்த உடலுக்குமான பயிற்சிகள் செய்யும்போதுதான் உடலில் உள்ள மொத்த கொழுப்பும் கரையும்.
- உடற்பயிற்சி நிலையத்துக்குச் செல்லும் முன்பு சாப்பிடாமல் இருக்கவும் கூடாது. வயிறுமுட்ட சாப்பிடவும் கூடாது. நாம் எந்தப் பயிற்சிகளைச் செய்யப்போகிறோம், நிறையைக் குறைக்கப் போகிறோமா, அதிகரிக்கப்போகிறோமா என்பதையும் கருத்திற்கொண்டு அதற்கேற்ப உணவுகளை உட்கொண்டுவிட்டு, செல்ல வேண்டும்.
- இந்த நேரத்தில்தான் பயிற்சிகள் செய்ய வேண்டும் என்று இல்லை. எந்த நேரமும் பயிற்சிகள் செய்யலாம்.
- பயிற்சிகளை ஆரம்பிக்கும் முன்னர் சாப்பிடுவதைப்போல பயிற்சி முடிந்த பிறகும், நீங்கள் எடுத்துக்கொண்ட பயிற்சிகளின் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு உணவுகளை உட்கொள்ளலாம். அவை புரதச்சத்து நிறைந்த உணவாக இருத்தல் சிறப்பு.

**வீடு வாடகைக்குண்டு**

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையாக கஸ்தூரியார் வீதியில் திருமணம், விருந்தினர் வருகை போன்ற தேவைகளுக்கு சகல தளபாட வசதிகளுடன்கூடிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு.
-077 285 0753

**வாகனங்கள் வாடகைக்கு**

கார்கள், வான்கள் நாள், வாடகைக்கு சாரதியுடன் அல்லது சாரதி இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- 077 029 5211 RP Rent a Car

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு பில்கிளாக் உதவியாள்கள் உடன் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்.
தொடர்புகளுக்கு :- 077 325 8492

**தேவை**

கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வாகன சாரதி (Driver), அலுவலக உதவியாளர் (Office Assistant) தேவை. தங்குமிட வசதி உண்டு. தொடர்பு-077 772 7654

**விற்பனைக்கு**

யாழ். கோண்டாவில் பலாலி வீதியில் 30 பரப்புகாணியும், யாழ். பலாலி வீதியில் திரு-நெல்வேலி சந்தைக்கு அருகில் 10 பரப்புக் காணியும், யாழ். கோண்டாவிலில் 60 பரப்புக்காணியும், மற்றும் யாழ். பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் 30 அடி அகலமும், 200 அடி நீளமும் கொண்ட கடையுடன் கூடிய காணியும், யாழ். நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகில் கோயில் வீதியில் 6 பரப்புக்காணியும், 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 723 2535







## கேள்வி அறிவித்தல் - 2018
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 2018.01.01 ஆம் திகதி தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | : | 06/11/2017 பி.ப 3.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | : | 07/11/2017 பி.ப 2.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | : | 07/11/2017 பி.ப 2.30 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : | வலிதென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம். |

01. கேள்விப் பத்திரங்கள் 03 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளை "செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இட்ப்பட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 2017.11.07 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்தகேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05. உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.
06. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றிற்கு 2% தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
08. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை, ஆனைக்கோட்டைசந்தி ஆட்டிறைச்சிக்கடை, ஆனைக்கோட்டைசந்தி கோழி இறைச்சிக்கடை என்பவற்றை குத்தகைக்கு எடுப்பவர்கள் இவற்றினை நடத்துவதற்குரிய இடத்தினை தாங்களே தெரிவுசெய்தல் வேண்டும்.
10. காக்கைதீவு பழையமீன் சந்தைக் கட்டடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தை நடவடிக்கைகளுக்கு இடையூறு இல்லாத வகையில் கடலுணவுகளை களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரமே அக்கட்டடத்தைப் பயன்படுத்த வேண்டும். வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலாகாது.
11. மாத வாடகையாவும் விலைமதிப்பீட்டு திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
12. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்றுவட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
13. துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புக் கட்டணமாக ரூபா 5.00 இனையும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக் கட்டணமாக ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களையும் அறவிடலாகாது.
14. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 14.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ளவேண்டும்.
15. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
16. கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2018 ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| இல | சந்தைகள், துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|---|
| | மானிப்பாய் பட்டின உபஅலுவலகம் | | | | |
| 1 | மானிப்பாய் மீன் சந்தை (புதிய கட்டடத் தொகுதி) | 1,000.00 | 15,000.00 | 1,113,530.00 | |
| 2 | மானிப்பாய் மரக்கறிச் சந்தை (பழைய மீன் சந்தைக் கட்டிடம் தவிர) | 1,000.00 | 10,000.00 | 517,666.00 | |
| 3 | மானிப்பாய் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை (புதிய கட்டடத் தொகுதி) | 1,000.00 | 10,000.00 | 700,722.00 | 600.00 |
| 4 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை. (புதிய கட்டடத் தொகுதி) | 1,000.00 | 5,000.00 | 150,150.00 | 600.00 |
| 5 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை (புதிய கட்டடத் தொகுதி) | 1,000.00 | 10,000.00 | 578,270.00 | 600.00 |
| | மானிப்பாய் கிராம உபஅலுவலகம் | | | | |
| 1 | காக்கைதீவுப் பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் தவிர்ந்து) | 1,000.00 | 15000.00 | 1,262,799.00 | |
| 2 | காக்கைதீவுப் பொதுச்சந்தைக்கான துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 5000.00 | 330,550.00 | |
| 3 | காக்கைதீவு பழைய மீன் சந்தைக்கட்டிடம் (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரம்) | 500.00 | 1500.00 | 36,000.00 | |
| 4 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 5000.00 | 232,716.00 | |
| 5 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5000.00 | 147,730.00 | 400.00 |
| 6 | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 48,675.00 | 300.00 |
| 7 | சாவற்கட்டு சந்தை | 1,000.00 | 5000.00 | 263,522.60 | |
| 8 | ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5000.00 | 411,664.00 | |
| 9 | ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 46,200.00 | |
| 10 | ஆனைக்கோட்டை சந்தி கோழி இறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 72,270.00 | |
| | பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம் | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | 1,000.00 | 15,000.00 | 1,881,011.00 | |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 273,229.00 | 1,500.00 |
| 3 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 504,626.00 | 1,500.00 |
| 4 | பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 1,000.00 | 5,000.00 | 337,701.00 | |
| | பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் | | | | |
| 1 | மாகியப்பிட்டி பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 221,760.00 | |
| 2 | மாகியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 90,981.00 | 250.00 |
| 3 | மாகியப்பிட்டி சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 165,866.00 | 250.00 |
| 4 | இளவாலை பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 130,446.00 | |
| 5 | இளவாலை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 213,730.00 | |
| 6 | இளவாலை பொதுச்சந்தை கோழிஇறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 106,775.00 | |
| 7 | மாதகல் பொதுச் சந்தை | 1000.00 | 5000.00 | 221,100.00 | |
| 8 | மாதகல் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 81,070.00 | 250.00 |
| 9 | மாதகல் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 72,050.00 | 250.00 |

திரு.கு.சற்குணராசா
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

21.10.2017

அதி கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 51
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2017.10.20
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 64,413,420/-

வெற்றி இலக்கங்கள்
01 03 11 26 E

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 20.10.2017 | 2200 | சிவப்பு |

மகரம்
வெற்றி இலக்கங்கள்
12 38 56 58
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 35,50,456/=

2017.10.22ம் திகதி ......ஞாயிற்றுக் கிழமை ......ஊதா...... நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## 30 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15.08.1930 — உதிர்வு 24.10.1987



அமரர்
**செல்லையா சுந்தரலிங்கம்**
**(உரிமையாளர் – அம்பாள் பேக்கரி)**
**திதி – பூர்வபக்க துதியை**

இன்பமான வாழ்வில் வந்த வசந்த நிலவே
எமது குடும்பத்தின் முதல் நிலவே
கண்ணை இமைகாப்பது போல காப்பாயே
கண் இமைக்கும் நொடியில் கடவுளானீரே..
இமையைக் காணாது 30 வருடங்களாக
உம் நினைவில் தவிக்கின்றோம்.
என்றும் உம் நினைவுடன்



வாலையம்மன் கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி கயசிந் பிலிப்புப்பிள்ளை (தி.கு)

இளவாலை. பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி கயசிந் பிலிப்புப்பிள்ளை நேற்று (20.10.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை மரிய ஞானரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும் ஜோசப் நவரட்ணம் (ஜேர்மனி). எட்வேட்ராசா (பத்தாவத்தை) காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர் மற்றும் விக்ரர் இம்மானுவேல் (பிரான்ஸ்). மேரிதிரேசா (பத்தாவத்தை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் அருட்சகோதரி வேஜி (திருச்சிலுவை).அருட்தந்தை எட்வினாதன் (புனித பத்திரிசியார் கல்லூரி. யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்

அன்னாரது இரங்கல்திருப்பலி இன்று (21.10.2017) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அருட்தந்தை எட்வினாதன் (குடும்பத்தினர்.)**

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 12 . 1940 — மறைவு 20 . 10 . 2017



### திருமதி கமலாவதி பாலசுப்ரமணியம்

மலேசியாவை பிறப்பிடமாகவும் ஆலடி ஒழுங்கை ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி பாலசுப்ரமணியம் நேற்று (20.10.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காஞ்சென்றவர்களான பஞ்சரட்ணம் – அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாலசுப்ரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி – தையலாம்பாள் தம்பதியரின் அன்புமருமகளும், பத்மதர்சினி (நியூஸ்லண்ட்), நாகராஜ் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான, சரஸ்வதி, குணரட்ணம், விஜியரட்ணம், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வரதராஜன், விஜிதா ஆகியோரின் மாமியும், ஹரிஸ், விதுசா, சேயோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

076 612 2447 / 077 700 7731

## Montessori Head Mistress தேவை

எமது பாடசாலைக்கு ஆங்கில திறமையுள்ள ஆசிரியர் தேவை.
தகுதி : ஆங்கிலத்தில் சரளமான அறிவு
Pre School அனுபவம்
தகுதியுள்ளவர்கள் இன்று (21.10.2017) 4 மணிக்கு முன்னர் உங்கள் சுய விவரக்கோவையுடன் நேரில் வரவும்.
Bond International School
360, K.K.S Road, மருதனார்மடம். யாழ்ப்பாணம்.
**021 224 2910**

# தீபாவளி அதிர்ஷ்டசாலிகள்

தீபாவளியை முன்னிட்டு இந்தியன் செலக்ஷனில் ஆடைகள் கொள்வனவு செய்தவர்களில் அதிர்ஷ்டசாலிகள்

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இந்தியன் செலக்ஷனினால் நடத்தப்பட்ட தீபாவளி விற்பனையில் ஆடைகளை கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களினை குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு முதலாம் பரிசினை கோப்பாயைச் சேர்ந்த **திருமதி பவானி குளிர்சாதனப் பெட்டியையும், 2ஆம் பரிசான தையல் இயந்திரத்தை நல்லூரைச் சேர்ந்த திரு. பிரபாகரனும் பெற்றுள்ளார்கள்.**

மேலும் 5ஆறுதல் பரிசுகளாக காஸ் அடுப்புக்களை **யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோ.எட்வின், சித்தன் கேணியைச் சேர்ந்த சு.லோசிகா, இணு விலைச் சேர்ந்த சி.மதியழகன், உடுவிலைச் சேர்ந்த இ.சுகணதாஸ், சிறுப்பிட்டியைச் சேர்ந்த S.வர்ண ராஜ்** ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்களை இந்தியன் செலக்ஷன் நிறுவனத்தின் பணிப்பாளர் அல்ஹாஜ் N.M. **உதுமா லெப்பை** (JP) அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.









ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி (ஈஸ்வரி) பத்மராசா

சங்கானை நாகலிங்கம் சுவாமிகள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி (ஈஸ்வரி) பத்மராசா 18.10.2017 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற பத்மராசாவின் (பத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லப்பாக்கியத்தின் அருமைச் சகோதரியும், லயன் திலீபன் (பத்மராசா அன்சன் நகைமாடம் - சங்கானை), உஷா (பிரதேச செயலகம் - சங்கானை), கோகிலன் (அமெரிக்கா), பகீரதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இளமதி, முரளீதரன் (நில அளவை அத்தியட்சகர், நில அளவைத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), ஜனனி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிசயன், சாருமதி, ஹரிப்பிரண்ணா, பிருந்தாபன், மதுசனா, சுவஸ்ரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆனந்தராசா, இரத்தின பூபதி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்மராசா அன்சன் நகைமாடம்,**
**பிரதான வீதி, சங்கானை.**

தகவல்:
லயன் **ப.திலீபன்** (மகன்)

**077 600 2584, 077 685 5113**

# உடல் எடையை குறைக்கும் கோவா

கோவா ஒரு கீரை வகையைச் சேர்ந்த உணவாகும். இதில் பல வகைகள் பல இடங்களில் இருந்தாலும் இதனுடைய பிறப்பிடம் பிரிட்டன் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடு களாகும். மற்றும் முட்டைகோஸ் இந்தியாவில் பிரபலமான உணவு வகைளில் ஒன்றாகும். துரித உணவகங்களில் இந்த முட்டை கோஸை பல வகையான உணவுகளில் சேர்க்கப்படுகின்றன. இந்த கோவா இப்படிப் பட்ட உணவகங்களில் சாப்பிடுவதால் எந்த ஒரு பயனும்



இல்லை. கோவா சமைத்து சாப்பிடுவதைவிட பச்சையாக சாப்பிடுவதே மிகவும் சிறப்பானது. இதை எந்த அளவுக்கு அடுப்பில் வைக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு இதன் சத்துக்களை இழந்துவிடும். இந்த உண்மையை அறிந்ததாலோ என்னவோ மேலை நாடுகளில் பெரும்பாலான உணவகங்களில் இந்த முட்டை கோஸ் வகையான உணவுகளை பச்சையாக பரிமாறுகிறார்கள்.

கோவாவில் விற்றமின் 'சி' மற்றும் 'பி' உள்ளன. கோவாவில் உள்ள சல்பர், மற்றும் அயோடின் ஆகியவை வயிறு, குடல் மற்றும் குடற்சவ்வு போன்ற உறுப்புகளை சுத்தப்படுதுகின்றன புண்களை நிவர்த்தி செய்கிறது.

கோவாவில் உள்ள தழைச்சத்தும் நார்ச்சத்தும் பெருங்குடலையும், மலக்குடலையும் நன்கு வேலை செய்யத் தூண்டுகின்றன. இதனால் மலம் இலகுவாகக்கழிவதுடன்மூலம், பவுந்தரம் போன்ற கோளாறுகள் வராமல் தடுக்கின்றன.

கோவாவில் டார்டராணிக் என்ற ஒரு வகை அமிலம் உள்ளது அது தேவைக்கதிகமாக உள்ள மாப்பொருள்களை கொழுப்பாக மாறாமல் இருக்கச்செய்கிறது. எனவே உடல் நிறையைக் குறைக்க விரும்புவோருக்கு இது ஒரு பயனுள்ள உணவாக இருக்கும்.

வயிற்று புண் உள்ளவர்கள் இந்த கோவா சாற்றை 3 அவுன்ஸ் வீதம் நான்கு முறை குடித்து வந்தால் வயிற்று புண் குணமாகும்.

## மருத்துவ...

சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகள் தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அரசியல் காய் நகர்த்தல்களை நடத்தி, நாட்டின் முக்கிய துறைகளை தம்வசப்படுத்துவார்கள். நாட்டு மக்களின் உயிருக்காக எப்போதும் போராடும் மருத்துவ ஊழியர்களாகிய எமது நோக்கம் அதுவல்ல.

புதிய அரசமைப்புக் கொண்டு வரப்படுமாயின் சுகாதாரத்துறை முடக்கப்படும். புதிய அரசமைப்பில் மாகாண நிர்வாகத்தினுள் சுகாதாரத் துறை உள்வாங்கப்படும். அமெரிக்கா, ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த நிலையில் எமது நாட்டின் சுகாதாரத்துறை இப்போது உள்ளது.

அரசதுறை ஊழியர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள் யாவும் கொழும்பு அரசின் அதிகாரத்தின் கீழேயே இருக்கவேண்டும். அதுவே ஆரோக்கியமானது. மாகாண சபைகளின் நிர்வாகத்தின் கீழ் இது கொண்டு வரப்பட்டால் அனைத்தும் சீர்குலைக்கப்படும் என்பது கடந்த கால வரலாற்று உண்மையாகும் - என்றார். (உ-5,31)

## தேரர்களின்...

பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் அல்லது தற்போதைய அரசமைப்பை மறுசீரமைக்கும் நடவடிக்கையை உடனடியாக அரசு கைவிட வேண்டும் என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் காரக சங்க சபா கூட்டாக இணைந்து அறிவித்திருந்தன.

இந்த நிலையில், "புதிய அரசமைப்புக் குறித்த மகாநாயக்க தேரர்களின் நிலைப்பாடே சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகவும் உள்ளது. மகாநாயக்க தேரர்களை மீறி அரசமைப்பைக் கொண்டு வரமுடியாது. அவர்களின் ஆசி இருந்தால் மாத்திரமே சுதந்திரக் கட்சி இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கும்" - என்றார்.

இதேவேளை சுதந்திரக் கட்சியின் தலைவரும் அரச தலைவருமான மைத்திரிபால, புதிய அரசமைப்புத் தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றனர் என்று தெரிவித்திருந்தார். (உ-5)

## சந்தேகநபருக்கோ...

கொழும்பில் தமிழ் மாணவர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பாதிக்கப்பட்டோர் தரப்பில் மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன சிறப்புக் கூற்றை முன்வைத்தார். அதில் அவர் தெரிவித்ததாவது:

இந்த வழக்கில் சந்தேகநபரான தஸநாயக்கவுக்கு எந்த நோயும் இல்லை. சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையூடாக அது தெளிவாகியுள்ளது. நீதிமன்றை தவறாக வழி நடத்தி தொடர்ந்தும் கடற்படை வைத்தியசாலையில் தங்கியுள்ளார். அவருக்கு மட்டும் சிறப்புச் சலுகை வழங்கப்படுகின்றது.

இவர்களுக்கு இப்படி வரப்பிரசாதம் கிடைக்கும் நிலையில், தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்மார் இருவர் நீதிக்காக ஏங்கிய நிலையிலேயே உயிரிழந்துள்ளனர். ஏற்கனவே ஒரு தாய் உயிரிழந்த நிலையில், கடந்த வாரம் தனது இரு பிள்ளைகள் விடயத்தில் நீதி கிடைக்கும் என்று ஒவ்வொரு தடவையும் நீதிமன்றப் படியேறி, காத்துக் கிடந்த மேரி வசந்தா பீரிஸ் உயிரிழந்தார். தாய்மார் உயிரிழக்கும் போது அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதி தொடர்ந்து தாமதமடைந்து கொண்டே செல்கிறது - என்றார்.

இதற்குப் பதிலளித்த நீதிவான் லங்க ஜயரத்ன, தற்போது விசாரணை சரியாக இடம்பெறுகின்றது. நீதியை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கே முயற்சிக்கின்றேன். தாய்மார் உயிரிழப்பதற்கு தமது பிள்ளைகள் தொடர்பிலான நீதியைக் கோரும் ஏக்கம் பிரதான காரணமாக இருக்கலாம். நான் அது தொடர்பில் கவலையடைகின்றேன் என்று குறிப்பிட்டார். (உ-5,31)

## மகா...

உள்ளனர்" என்றார் தம்மானந்த தேரர்.

அதேவேளை, முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்பு மாற்றங்களை நிராகரித்து, உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் காரக சங்க சபாவின் முடிவை, பாராட்டுவதாக ராமன்னய மகா நிக்காயாவின் காரக சங்க சபாவின் உறுப்பினரான பேராதனை ராஜபவனாராமய விகாரையின் பிரதம விகாராதிபதி கெபிட்டியாகொட சிறிவிமல நாயக்க தேரர் தெரிவித்தார்.

மகாநாயக்க தேரர்களை புதிய அரசமைப்பு விடயத்தில் ஒரு குழு தவறாக வழிநடத்துவதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற தீபாவளி நிகழ்வில் தெரிவித்திருந்தார். (உ-5)

## கரைதுறைப்பற்று...

மற்றும் கரைதுறைபற்று பிரதேச சபைகளுக்கான புதிய வேட்பு மனுக்களைக் கோருவதற்கும், தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும், இடை நேர்விளைவான கருமங்களை முன்னெடுப்பதற்குமான சட்டவரைவு ஆளுந் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் உள்ளூராட்சி அதிகார சபைகள் (சிறப்பு ஏற்பாடு) சட்டவரைவு என்ற பெயரில் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு 2011ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மீள்குடியமர்வுச் செயற்பாடுகள் அங்கு முழுமை பெறவில்லை எனத் தெரிவித்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மீள்குடியமர்வுச் செயற்பாடு முடிவடையாமல் தேர்தல் நடத்துவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது. 2012ஆம் ஆண்டு தேர்தல் நடத்துவதற்கு மீளவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதே காரணத்துக்காக திமன்றம் இதன்போதும் தடை உத்தரவு பிறப்பித்தது.

இறுதியாக 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழுமைப் படுத்தப்பட்ட நிலையில் தேர்தலுக்கு முதல் நாள் நீதிமன்றம் தேர்தலை நடத்துவதற்கான தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது. இன்று வரையில் இரு சபைகளுக்குமான உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறாமலேயே உள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே இரு சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கான சிறப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

சட்டவரைவில் கூறப்பட்டுள்ளதாவது:

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்குக் குறிக்கப்பட்ட வாக்கெடுப்பு திகதிகள் எதிர்பாராத மற்றும் அவசர சூழ்நிலைகள் காரணமாக பிற்போடப்பட்டமையினால், வேட்மபாளர்கள் ஒன்றில் இறந்துள்ளனர் அல்லது புலம்பெயர்ந்துள்ளனர் அல்லது கட்சி மாறியுள்ளனர். வேட்பாளர்களில் கணிசமானோர் வெளிநாடு சென்றுள்ளனர். அத்தோடு வேட்பு மனுக்களை ஒப்படைத்த நேரத்தில் 35 வயதிற்கு குறைவாக இருந்த நபர்கள் இப்போது 35 வயதை விடவும் அதிகமான வயதை அடைந்துள்ளமையினாலும் இந்தப் பிரதேச சபைகளுக்குப் புதிதாக வேட்புமனுக்களைக் கோரவேண்டியேற்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்கு சுயேச்சைக் குழுவொன்றினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள், கட்டுப்பணம் செலுத்தியமை தொடர்பில் அவர்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச் சீட்டை தம்வசம் கொண்டிருந்தால், பணம் வைப்பிலிடப்பட்ட திகதியிலிருந்து மீளளிப்பு திகதிவரை ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டியுடன் அந்தத் தொகை உரியவர்களுக்கு மீளளிக்கப்பட வேண்டும் என்று சட்டவரைவில் உள்ளது. (உ-5,31)

## 5 தமிழர்களைத்....

கப்பட்டவர்கள் எந்தவித பயங்கரவாதச் செயற்பாடுகளுடனும் தொடர்பு அற்றவர்கள் என்று எமக்கு 15 நிறுவனங்கள் அறிக்கை வழங்கியுள்ளன. கடற்படையினர் மாத்திரம் அறிக்கை வழங்கவில்லை.

கடத்தல், கப்பம் கோரல் தொடர்பில் சந்தேக நபர்கள் சிலரை 8 நாள்கள் தடுத்து வைத்து கடற்படைப் புலனாய்வுப் பிரதானி ஆனத்த குருகே நடத்திய விசாரணை அறிக்கை எமக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. இது திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது. இதனை வழங்க உத்தரவிடுமாறு மன்றில் கோரினர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரும் அறிக்கைகள், ஆவணங்களை ஒப்படைக்குமாறு கடற்படைத் தளபதிக்கு நீதிவான் கட்டளையிட்டார். (5,31)

## அரசியலுக்காக...

வழங்கவில்லை. அவர்கள் தங்கள் நிலைப்பாட்டில் இருந்து கொண்டு இப்போதும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்" என்றார் அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் சரத் விஜேசூரிய.

"மல்வத்த மற்றும் அஸ்கிரிய உயர்மட்ட பீடங்களின் கூட்டங்களில் இரு தரப்பில் இருந்தும் 20 உறுப்பினர்கள் கலந்து கொள்ளவேண்டும். புதிய அரசமைப்புத் தொடர்பாக தங்களின் நிலைப்பாட்டை அறிவிக்க உயர்மட்ட பீடத்திற்கு அஸ்கிரிய பீடத்தில் இருந்து 2 பேரும் மல்வத்த பீடத்தில் இருந்து 7 பேருமே கலந்து கொண்டுள்ளனர். அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் அரசின் அனைத்து விடயங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார். இது கடந்த அரசில் தோல்வியுற்றவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருதற்கு மேற்கொள்ளும் முயற்சியாகும் என்றார் சட்டத்தரணி கே.டபிள்யூ.ஜனரன்ஜன.

"பிளவுபடாத நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வுடனான புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும். அதன் மூலம் சகல இன மக்களும் பேதங்களின்றி இலங்கையர் என்ற எண்ணத்தில் ஒற்றுமையாக வாழ வழியேற்படுத்தவேண்டும் என்று மல்வத்து மகாநாயக்க தேரரே 3வாரங்களுக்கு முன்னர் எங்களிடம் தெரிவித்திருந்தார். ஆனால் நேற்று முன்தினம் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்கள் புதிய அரசமைப்புப் பணிகளை அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிட்டிருப்பதை கண்டு ஆச்சரியமடைந்தேன். மல்வத்த மகாநாயக்க தேரர் நாட்டில் இல்லாத நிலையில் இவ்வாறு அவரது பீடத்தை பயன்படுத்தி பொய் பரப்புரை முன்னெடுப்பது மோசடியாகும். தேரர்கள் இவ்வாறு நடந்து கொண்டமையானது மிகமோசமான செயலாகும். இந்த பொய்ப் பரப்புரைகளுக்குப் பின்னால் இனவாத போக்குடைய தேரர்களும் தோல்வியடைந்த அரசியல்வாதிகளின் சதித்திட்டம் இருக்கின்றது" என்றார் புதிய அரசமைப்புக்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் காமினி வியன்கொட.

"புதிய அரசமைப்புக்கு பல மட்டங்களில் இருந்தும் விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. சிலர் ஏக்கிய என்ற சொல்லுக்கு தமிழில் தெரிவிக்கப்படும் ஒருமித்த என்ற சொல் பிழையான அர்த்தம் என்று தெரிவிக்கின்றனர். அப்படியாயின் சரியான சொல்லைக் கூறுங்கள். பிரச்சினையை தீர்த்துக்கொள்ளலாம். அரசமைப்பு உருவாக்க முயற்சியை அரசு கைவிடவேண்டும் என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்கள் தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தப் பீடங்களின் இரண்டாம் நிலையில் இருப்பவர்களே இவ்வாறு தெரிவித்துள்ளனர். அது அவர்களின் தனிப்பட்ட கருத்து. அரசமைப்புக்கான கருத்துக்களை யாருக்கு வேண்டுமானாலும் தெரிவிக்கலாம். அதற்காக அவர்களின் கருத்துக்களைக் கட்டாயம் அரசமைப்பில் உள்வாங்கவேண்டும் என்று கூற முடியாது. அவர்களின் கருத்துக்கள் நாட்டுக்குப் பொருத்தமாக இருப்பின் ஆட்சியாளர்கள் அதனை ஏற்றுக்கொள்வார்கள்"- என்றார். (உ-5,31)

## யாழ்....

வன் தனஜயன் ஆகிய மூவரும் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ் அரசியல் கைதிகளின் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினோம். எமது நம்பிக்கைகள் பயனற்றுப்போனது. அரச தலைவர் எமக்கு உரிய பதிலை வழங்கவில்லை. நாம் ஏமாற்றப்பட்டோம். சந்திப்பு திருப்திகரமானதாக அமையவில்லை. எதிர்வரும் புதன் கிழமை எமக்குப் பதிலளிப்பதாக அவர் கூறினார்.

நாம் இன்று (நேற்று) வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் புதன் கிழமை வரையில் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். எதிர்வரும் புதன் கிழமைக்குள் நல்லதொரு முடிவு எமக்கு கிடைக்காதுவிட்டால் அனைத்துப் பீட மாணவர்களும் ஒன்றிணைந்து போராட்ட வடிவங்களை மாற்றியமைத்துப் போராடுவோம்.

அநுராதபுரத்தில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 3 அரசியல் கைதிகளினதும் வழக்குகள் மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்படவேண்டும், பாலியல் குற்றவாளிகள், போதைப் பொருள் குற்றவாளிகள் சாவுத் தண்டனைக் கைதிகளுடன் ஒரே சிறைகூடத்தில் அரசியல் கைதிகளைத் தடுத்து வைக்காமல் அவர்களை பிறிதொரு சிறைக்கூடத்தில் தடுத்து வைக்க வேண்டும், அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும், கடந்த வருடம் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவரது குடும்பத்துக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் அத்துடன் அவர்களின் கொலைக்கு நீதி வேண்டும் உள்ளிட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளை அரச தலைவரிடம் முன்வைத்தோம். எமது கோரிக்கைகளுக்கு அரச தலைவர் தீர்க்கமான பதில் வழங்கவில்லை. எம்மைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் மழுப்பலான பதில்களையே வழங்கினார்.

அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் தமக்குள் முட்டி மோதிக் கொள்கின்றார்கள். பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையின்றிச் செயற்படுகின்றார்கள். தீபாவளி தினத்தை கறுப்பு தீபாவளியாக கடைப்பிடிக்குமாறு நாம் கோரிக்கை விடுத்தோம். பல்கலைக்கழக மாணவர்களான நாமும் தீபாவளியைக் கொண்டாடவில்லை. ஆனால், நமது தமிழ் அரசியல்வாதிகள் அரச தலைவருடன் இணைந்து தீபாவளிக் கொண்டாட்டத்தில் பங்கேற்றுள்ளனர் - என்றனர். (உ-5,32)

## உள்ளூராட்சித்...

தினேஸ் குணவர்த்தன.

அவரது கேள்விக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார். "தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் நான் பேச்சு நடத்தினேன்" என்று அவர் கூற முற்பட்டபோது, தினேஸ் குணவர்தன, "ஒரு சில திருத்தங்களுக்காக ஏன் வர்த்தமானியை வெளியிடவில்லை. சபையின் கவனத்தை திசை திருப்பவேண்டாம். அரசுக்கு ஜனவரியில் தேர்தல் நடத்தும் நோக்கம் உள்ளதா இல்லையா?" என்று குறுக்கிட்டார்.

"நான் சொல்வதைக் கேளுங்கள். அடுத்த வாரம் திருத்தங்கள் தொடர்பான அறிக்கை அமைச்சரவையில் முன்வைக்கப்படும். அதன் பின்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று நம்புகின்றேன்" என்று பதிலளித்தார் ரணில்.

"திருத்தங்களை அமைச்சரவையில் முன்வைத்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். இந்தச் செயன்முறையானது ஒரு மாதம் வரை நீடிக்கும். இது காலத்தைக் கடத்துவதற்கானது" என்று தினேஸும் பதிலுக்குத் தெரிவித்தார்.

"இங்கு திருத்தங்கள் சார்ந்த பிரச்சினைகளே காணப்படுகின்றன. அமைச்சர் ஆங்கிலத்தில் முன்வைத்த திருத்தங்களுக்கும் சிங்கள மொழிமூலமான சட்டவரைவுக்கும் இடையில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. அம்பகமுவ மற்றும் கல்முனை உள்ளூராட்சி மன்றங்கள் சார்ந்த திருத்தங்களும் செய்யப்பட வேண்டியுள்ளது. தேவைப்பட்டால் வர்த்தமானி அறிவித்தலை விடுத்த பின்னர் திருத்தங்கள் செய்ய முடியுமா என்பது குறித்து ஆராய முடியும்" என்றார் தலைமை அமைச்சர் ரணில்.

"அமைச்சர் ஏன் ஆங்கில மொழியில் திருத்தங்களை முன்வைத்தார். சிங்கள மொழியில் முன்வைத்திருக்கலாமே. இது எமது பிரச்சினை மாத்திரம் அல்ல. நாட்டு மக்கள் அனைவரும் தேர்தலை எதிர்பார்த்துள்ளனர்" என்று தினேஸ் குணவர்தன குறிப்பிட்டார்.

"எமக்குத் தேர்தல் தொடர்பில் பிரச்சினை கிடையாது. சட்டமா அதிபருடனும் பேசவேண்டியுள்ளது" என்றார் ரணில். (உ-5,31)

## கிழக்கிலும்...

சகல தரப்புக்களையும் ஆதரவு வழங்குமாறும் அவர்கள் கோரினர். (உ-5,32)

## மைலோ கிண்ண கால்பந்தாட்டத்தில் இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 21
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கான ஆட்டங்கள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானங்களில் இன்று ஆரம்பமாகின்றன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வயல் விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து நடைபெறும் ஆட்டங்களில் கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வயல் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நியூ வாரியர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிறைட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. அராலி ஏ.எல். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பைஸ்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. சிவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சில் வெஸ்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து காரைநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. சென். செனிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துக் கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாவத்தை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாதகல் ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆதவன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## 14 வயதுப் பிரிவு ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தெடரில் யாழ்ப்பாண மாவட்ட 14 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் மைதானங்களில் இன்று இடம்பெறவுள்ளன.

(ம-23)

## மனோகரா அணி அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 21
மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மனோகரா அணி வெற்றி பெற்றது.

சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## விண்மீன் அரையிறுதியில்

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் விண்மீன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் றேஞ்சர்ஸை எதிர்த்து விண்மீன் அணி மோதியது. விண்மீன் அணியின் டினோஜன் கோலொன்றைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது விண்மீன். இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் பதிலடி கொடுத்தது றேஞ்சர்ஸ். விண்மீனின் சார்பாக மேலும் மூன்று கோல்கள் பதிவாக முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது விண்மீன் அணி. (ம)

## அரையிறுதியில் அன்ரனிஸ்

திக்கம் மத்திய சனசமுக நிலையம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

திக்கம் மத்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# கொக்குவில் இந்து அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடத்தும் கூடைப் பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயது பெண்கள் பிரிவு அணி களுக்கு இடையிலான ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 41:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

(ம-23)

## திருக்குடும்பக் கன்னியர் மிக இலகு வெற்றி



யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை அமரர் பொன் விபு லானந்தன் ஞாபகார்த்தமாக நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயது பெண்கள் பிரிவு அணிகளுக்கு இடையி லான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட அணி 51:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## காமாட்சி அம்பாள் கழக கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 21
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. வளர்மதி விளையாட்டுக் கழக 'பி' அணி 25:18, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு செற்களையும் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சென் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:17, 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது சென் ஸ்ரார்.

பிறிதொரு ஆட்டத்தில் புத்தூர் குருநாதர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. இதில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக 'பி' அணி 25:16, 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

**காமாட்சி அம்பாள் வி.க. கரப்பந்தாட்டத் தொடர்**

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான காலிறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

**யாழ். மத்தியின் கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதவுள்ளது.

**மைலோ தொடர் வடமராட்சி லீக்**

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்துக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்களின் மைதானங்களில் இடம்பெற்று வருகின்றன. மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுத்தோட்டம் சுடரொளி விளையாட்டுக் கழகமும் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

(ம-23-108)



## இளம்கதிர்–ஞானவைரவர் இறுதியில் இன்று மோதல்

யாழ்., ஒக். 21

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் சிவகடாட்சம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இறுதியாட்டத்தில் கொட்டடி இளம் கதிர் அணியை எதிர்த்து புத்தூர் ஞானவைரவர் அணி மோதவுள்ளது.

(ம-422)

# முதலிடத்தை பறிகொடுத்த இந்திய அணி

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்தை இழந்தது இந்திய அணி. தென்னாபிரிக்க அணி மீண்டும் முதலிடத்தைப் பிடித்தது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்க அணியே தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்தது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 4:1 என்ற அடிப்படையில் கைப்பற்றி முதல் இடத்தைக் தனதாக்கியது இந்திய அணி. தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் முடிவடைந்த முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று முதலிடத்தை இந்தியாவிடம் இருந்து திரும்பப் பெற்றுள்ளது தென்னாபிரிக்க அணி.

நியூசிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடர் நாளை ஆரம்பமாகிறது. அடுத்த இரண்டு ஆட்டங்களும் முறையே எதிர்வரும் 25, 29 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன. இந்த நிலையில் இந்தத் தொடரை முழுமையாகக் கைப்பற்றினால் இந்திய அணி மீண்டும் முதலிடத்தைப் பிடிக்கும். மொத்தத்தில் முதலிடத்துக்கு இந்தியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

(ம)

# வில்லியர்ஸ் 200

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 7 சிக்சர்களை விளாசியதன் மூலம் பன்னாட்டு ஒருநாள் அரங்கில் அதிக சிக்சர்களைப் பதிவுசெய்த வரிசையில் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறினார் வில்லியர்ஸ். 200 சிக்சர்கள் என்ற மைல்கல்லையும் அவர் எட்டினார். இந்த ஆட்டத்தில் வில்லியர்ஸ் 176 ஓட்டங்களைக் குவித்தார். பன்னாட்டு ஒருநாள் அரங்கில் அதிக சிக்சர்களைப் பதிவுசெய்த வரிசையில் 351 சிக்சர்களுடன் அப்ரிடி முதலிடத்தில் உள்ளார். ஜெயசூரிய 270 சிக்சர்களுடன் இரண்டாவது இடத்திலும், கெய்ல் 252 சிக்சர்களுடன் மூன்றாவது இடத்திலும், டோனி 213 சிக்சர்களுடன் நான்காவது இடத்திலும் உள்ளனர். வில்லியர்ஸ் 201 சிக்சர்களுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

ஒரு ஆட்டத்தில் அதிக ஓட்டங்களைக் குவித்த தென்னாபிரிக்க வீரர்களின் பட்டியலில் வில்லியர்ஸ் நான்காவது இடத்துக்கு முன்னேறினார். கிறிஸ்ரன் 188 ஓட்டங்களுடனும், டு பிளாசிஸ் 185 ஓட்டங்களுடனும், குயின்டன் டி ஹொக் 178 ஓட்டங்களுடனும் முதல் மூன்று இடங்களில் உள்ளனர். வில்லியர்ஸ் 176 ஓட்டங்களுடன் நான்காவது இடத்திலும், கிப்ஸ் 175 ஓட்டங்களுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

(ம)





# மற்றுமொரு படுதோல்வி

பாகிஸ்தானுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்திலும் இலங்கை அணிக்கு படுதோல்வியே எஞ்சியது.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை பாகிஸ்தான் அணி உறுதி செய்துள்ளது. இந்த நிலையில் நான்காவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணித் தலைவர் தரங்க ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். சந்திமல் 16 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப மிகப்பெரும் சரிவை எதிர்கொண்டது இலங்கை அணி. திரிமன்னே ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறு முனையில் சமர விக்கிரம ஓட்டமெதையும் பெறாமலும், சிறிவர்த்தன 13 ஓட்டங்களுடனும், பிரசன்னா 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 62 ஓட்டங்களுடன் திரிமன்னேக்கு முடிவுகட்டினார் இமாட் வசிம். முடிவில் 173 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

பந்துவீச்சில் ஹசன் அலி 3 இலக்குகளையும், இமாட் வசிம் சடப் கான் இருவரும் தலா 2 இலக்குகளையும், யுனைட் கான், உஸ்மன் கான் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களான இமாம் உல் ஹக் 2 ஓட்டங்களுடனும், சமன் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். எனினும் அசாம், மலிக் இருவரும் நிலைத்துநின்று மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 66 பந்துகள் மீதமிருக்க 3 இலக்குகளை இழந்து அபார வெற்றிபெற்றது பாகிஸ்தான்.

(ம)

**Win Repair**

சகல விதமான குளிர்சாதனப்பெட்டிகளும் A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

-077 964 8942

## கருத்தரங்கு

இலங்கை மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர்களுக்கான தரம் 1, தரம் 2 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சாத்திகளுக்கான கருத்தரங்குகொக்குவில்இந்துக் கல்லூரியில் இன்றும்நாளையும்காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது. (ம-422)




### 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



. கடந்த 19.09.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் சீராளப்பிள்ளை அருந்தவநாதன்**
**[பயில்வான்]**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (19.10.2017) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன வீட்டுக்கிரியைகள் இன்று (21.10.2017) சனிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பனிச்சையடி, இயக்கச்சி.
077 448 0015

சுப்பிரமணியம் லதா

### காணி விற்பனைக்கு

மின்சார நிலைய வீதியில் இருந்து 20 மீற்றர் தொலைவில் ஜீ.பொன்னம்பலம் ஒழுங்கையில் புதிய இல. 14, யாழ். பஸ் நிலையம் அருகில் பரப்பு 02 குழி 03 சுற்று மதில் குழாய்க்கிணற்றுடன் கூடிய வெற்றுக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

(துரகர் தேவையில்லை)

**077 661 0793, 077 234 4378**

## மே.தீவுகள் சிம்பாப்வே தொடர் இன்று ஆரம்பம்

மேற்கிந்தியத் தீவுகள் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சிம்பாப்வேக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகிறது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)

## முதலாவது பொதுக்கூட்டம்
### வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மத்திய, மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள், சபைகள் மற்றும் அதிகாரசபைகள் என்பவற்றில் கடமையாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி அமைக்கப்படவுள்ள "வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் " முதலாவது பொதுக்கூட்டம்.

**காலம் : 04.11.2017**
**நேரம் : 9.30 மணி**
**இடம் : நாவலர் கலாசார மண்டபம் (TCT இற்கு முன்பாக)**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**ஒருங்கிணைப்பாளர்கள்.**

**077 907 2894/ 077 376 0039**

### அழையுங்கள்



பதிவு செய்யப்பட்ட
**முச்சக்கரவண்டிகள், கார், வான்**
போன்ற வாகனங்களைக்
கொள்வனவு செய்வோர் மற்றும்
விற்பனை செய்வோர்
அழையுங்கள்.
**(நியந்தனைக்குட்பட்டது)**

**076 434 8489**

### குஜராத், அகமதாபாத், நேப்பாள் காசி யாத்திரை

**நாள்கள்: 16** **ஆரம்பம்: 25.11.2017** **யாத்திரீகர்: 20**

**மிகவும் புனிதமான யாத்திரை**

**செல்லும் இடங்கள்: குஜராத்தில்:** பாவ்நகர், கடலுக்குள் பஞ்சலிங்கம், சோமநாதர், ஜோதிலிங்கம், தையூர், கங்கேஸ்வரர் பஞ்சலிங்கம் அம்பாஜி 51 கலசமுடைய சக்தி பீடம் (பெரிய ஆலயம்), காபர்மலை பார்வதிதேவியின் இருதயம் விழுந்த இடம், 51 சக்தி பீடங்களில் முதன்மையான ஆலயம், **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் உட்பட 15 இடங்களைத் தரிசிக்கலாம். **கயா:** முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம், **அலகாபாத் :** கங்கா, ஜமுனா, சரஸ்வதி திருவேணி சங்கமம், வேறு இடங்களும் காணலாம். சீத்தாமடியும் காணலாம். **நேப்பாள் :** கோராப்பூர், லும்பினி, புத்தபிரான் பிறந்த இடம், **காத்மாண்டு:** கமக்கயா, போக்ரா, சுயம்புநாதர், பெரியகுகை, ஜெல்நாராயணர், தண்ணீரில் மிதக்கும் விஷ்ணு, குச்சேஸ்வரர், பசுபதிநாதரையும் தரிசிக்கலாம். **சென்னை - இராமேஸ்வரம்:** நவபாஷாணம், திருப்புலாணி, உத்திரகோசமங்கை, **மதுரை:** மீனாட்சி சுந்தரேஸ்வரரையும் தரிசிக்கலாம்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை**


விமானப் பயணச்சீட்டு, மூன்றுவேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. இத்துடன் ஒருநாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம்.

கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் பாஸ்போட்டின் படமுள்ள பக்கம் ஒரு போட்டோ கொப்பியும், ஒரு கலர் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். (விவரங்களைக் கேட்டு அறியவும்) பிராமண சமூகத்தினரும் தயக்கமின்றி கலந்துகொள்ளலாம்.

**விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
**No: 59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**T.P : 077 768 0102, 077 736 2154**

### மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சச்சிதானந்தம்



காரைநகர்,களபூமி,பொன்னாவளையைப்பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி மற்றும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சச்சிதானந்தம் நேற்று (20.10.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நவரத்தினம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசினிதேவியின் அன்புக் கணவரும் சிவதருஜினி கஜேந்திரன் (மி.பா.சே.நிலையம், யாழ்.நகர், C.E.B), கிருஸ்ணரூபன் (பிராந்திய முகாமையாளர் - samsung) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தரூபன் (காந்தன் களஞ்சியம்), வைதேகி ஆகியோரின் மாமனும் மதுரிரம்மியாவின் பாசமிகு பேரனும் கயிலைநாதன் (லண்டன்), சாம்பசிவம் (ஓய்வுநிலை பிரதி திட்டமிடல் பணிப்பாளர் - மாவட்ட செயலகம், யாழ்.), நகுலேஸ்வரன், அருந்ததிதேவி கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குலசேகரம், தயாளினி, கலாநிதி, இரவீந்திரன், தயாநிதி சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**504, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 029 1017,**
**076 822 9634**

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
30 . 01 . 1952



**மறைவு**
13 . 11 . 2015

## கணபதிப்பிள்ளை தியாகராஜா

**நீங்கள் இவ் உலகைவிட்டு நீங்கி ஆண்டுகள் இரண்டு சென்றாலும்**
**எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள் என்றும்**
**பசுமையாகவே இருக்கும்**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

இன்று (21.10.2017) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சிரார்த்த தின நிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**39, கல்லூரி வீதி, நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

**மனைவி, பிள்ளைகள்.**
**077 195 4668**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.